
கிராமநலம் ஆகஸ்ட்-'65





# கிராமநலம்

மாடி 10 ஆகஸ்ட், 1965 படி 11


பொருளடக்கம்

—(o)—


| | பக்கம். |
|---|---|
| ஜமீன் கிராமங்களின் புதிய தோற்றம் | 3 |
| அதிசயம்! ஆனால் உண்மை! | 5 |
| ஆலங்குளமும் அரச மரமும் | 9 |
| விடுதலைக்கு வித்திட்ட வீரர்கள். | 11 |
| எல்லையில் நாம் (தொடர் நாடகம்). | 17 |
| மனமாற்றம் (சிறுகதை) | 27 |
| பஞ்சாயத்து யூனியன் தலைவர்கள் அறிமுகம். | 29 |



வெளியிடுபவர் ;

திரு என். அனந்தபத்மநாபன், ஐ. ஏ. எஸ்.

ஆசிரியர் :

திரு எஸ். வேங்கடசாமி, எம்.ஏ.

ஆண்டு சந்தா ரூ. 1·50.

சந்தா மற்றும் நிர்வாக சம்பந்தமான எல்லா விவரங்களுக்கும் " பொதுஜனத் தொடர்பு அதிகாரி, கிராம நல—தல நிர்வாகத் துறை, சென்னை-9 " என்ற முகவரிக்கு எழுதவும். கதைகள், நாடகங்களில் வரும் பெயர்கள், சம்பவங்கள் அத்தனையும் கற்பனையே.


பஞ்சாயத்து செய்தி விளக்கம்

## மதிய உணவுத் திட்டத்தை நிறைவேற்றும் பொறுப்பு பஞ்சாயத்துத் தலைவர்களுக்குத்தான்

### அலுவல்களை விளக்கி அரசாங்க ஆணை

கிராமப் பள்ளிகளில், மதிய உணவுத் திட்டத்தைச் செயல் படுத்துவது சம்பந்தமான பொறுப்பு முழுவதும், பஞ்சாயத்துத் தலைவர்களுக்கே உண்டு என்பதை, தமிழ்நாடு அரசாங்கம் தெளிவு படுத்தியிருக்கிறது.

மதிய உணவுத் திட்டம் பற்றிய கணக்கு விவரங்களைத் தக்க முறையில் வைத்துக்கொள்ளும் பொறுப்பு, பள்ளித் தலைமையாசிரியர்களுக்கு, சமீபத்தில் மாற்றப்பட்டதால், பஞ்சாயத்துத் தலைவர்களின் பொறுப்பு குறைக்கப்பட்டு விட்டதாக, ஒரு கருத்து நிலவி வருகிறது. இந்தக் கருத்து தவறானது என்பதை எடுத்துக்காட்டி, தமிழ்நாடு அரசாங்கம், விளக்கமாக ஓர் ஆணை பிறப்பித்துள்ளது.

மதிய உணவுத் திட்டம் சம்பந்தமான கணக்குகளை வைத்து வருவது, தணிக்கையாளர்களுக்குப் பதில் கூறுவது ஆகிய தொல்லைகள், பஞ்சாயத்துத் தலைவர்களுக்கு இருக்கக் கூடாது என்பதும், அதற்குப் பதிலாக, இத்திட்டத்திற்கு, கிராம மக்களின் ஆதரவைத் திரட்டுவதில் அவர்கள் அதிக கவனம் செலுத்த வேண்டும் என்பதும், புதிய ஏற்பாட்டின் நோக்கமாகும். மற்றபடி, பஞ்சாயத்துத் தலைவர்தான், மதிய உணவு நிலையங்களின் தலைவராக இருந்து பணியாற்றுவார். தமது பஞ்சாயத்து எல்லையில் உள்ள எல்லா மதிய உணவு நிலையங்களைப் பார்வையிடுவதும், திடீர்ச் சோதனைகளை செய்வதும், கணக்குகள் சரிவர எழுதப் படுகின்றனவா என மேற்பார்வையிடுவதும், பஞ்சாயத்துத் தலைவருடைய பொறுப்பாகும்.

எனவே, பஞ்சாயத்தில் உள்ள மதிய உணவு நிலையங்கள் அனைத்தும், பஞ்சாயத்துத் தலைவரின் முழு மேற்பார்வையில் தொடர்ந்து செயல்பட்டு வரும்.

இதுபற்றிய முழு விவரங்களை, கல்வித் துறையின் 1965-ம் ஆண்டு ஜூலை மாதம் 20-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 1363-ல் காணலாம். இதன் மூலம், ஒரு சிலரிடையே நிலவி வந்த சந்தேகங்கள் நீங்க வழி பிறப்பதோடு, எல்லா பஞ்சாயத்துத் தலைவர்களுக்கும், மதிய உணவுத் திட்டத்தை நிறைவேற்றுவதில் உள்ள முழுப் பொறுப்பு உறுதி செய்யப்படுகிறது.

முதல் அட்டைப்படம்.—பயன் பல தரும் பனைவெல்லம் தயாரிக்க தேவைப்படும் பனஞ்சாற்றினை பனைமரத்திலிருந்து எடுக்க, பனைமரம் ஏறும் தொழிலாளி கையாளும் நவீன முறையை, அட்டைப் படம் சித்தரிக்கிறது.

# இன்னும் 20 மாதங்களில்

# 374 பஞ்சாயத்து யூனியன்களிலும்

# கால்நடை மருத்துவ நிலையங்கள்

கால்நடை வளர்ச்சியில், பஞ்சாயத்து ஆட்சி, முக்கிய பொறுப்பேற்று, சிறந்த திட்டங்களை நிறைவேற்றி வருவது, அனைவரும் அறிந்ததே. ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனிலும் கால்நடைகளின் நோய்களைத் தீர்க்கும் மருத்துவ நிலையம் (Veterinary Dispensary) ஒன்றுக்கான கட்டிடங்களை அமைக்கவேண்டும் என்று திட்டமிடப்பட்டது. இதற்காக, ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனுக்கும் விவசாய மானியத்தின் கீழ், ரூபாய் 17,500 அளிக்கப்பட்டுள்ளது. இதில் பாதித் தொகையை, அதாவது 8,750 ரூபாய், ஈட்டு மானியத் தொகையாக, ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனும் வசூலித்துக்கொள்ள ஏற்பாடு செய்யவேண்டும். கால்நடை மருத்துவ நிலையத்திற்கான கட்டிடங்கள் கட்டி முடிந்தவுடன், கால்நடை பராமரிப்பு இலாகா, அந்த மருத்துவ நிலையங்களுக்குத் தேவையான ஊழியர்களை நியமித்து, அவற்றை நடத்தி வருவார்கள்.

இவ்வாறாக, பஞ்சாயத்து ஆட்சியில் உருவான இந்தப் புதிய திட்டம், நமது மாநிலத்தில் நடைமுறையிலே எப்படி நிறைவேறுகிறது என்பதைப் பற்றி, அரசாங்கத்தினர் சமீபத்தில் ஆராய்ந்து பார்த்தனர். இந்தத் திட்டத்தை நிறைவேற்றும் போது அனுபவத்தில் பார்த்ததில், பல சிக்கல்கள் ஏற்படுவதை, அறிய முடிந்தது. போதுமான கால்நடை டாக்டர்கள் இல்லாததினால், பல இடங்களில் கட்டிடங்கள் இருந்தும், மருத்துவ நிலையங்கள் வேலை செய்ய இயலாத நிலைமை நீடித்தது. இந்த இரண்டு முக்கிய குறைகளை நீக்குவதற்காக, 1965-ம் ஆண்டு ஜூன் மாதம் 7-ந் தேதியில் வெளியான உத்தரவில் (கிராம நல-தல நிர்வாக இலாகா உத்தரவு எண் 1314) அரசாங்கம், சிறந்த ஏற்பாடு செய்துள்ளது. அதன்படி, 1966-67-ம் ஆண்டிற்குள், (இன்னும் சுமார் 20 மாதத்திற்குள்) தமிழ்நாட்டில் உள்ள 374 பஞ்சாயத்து யூனியன்களிலும், கால்நடை மருத்துவ நிலையங்கள் ஆரம்பமாகி வேலை செய்யவேண்டும்; அதற்காக ஒவ்வொரு கால்நடை மருத்துவ நிலையத்திற்கும், முழுநேர கால்நடை டாக்டர் (Veterinary Assistant Surgeon) ஒருவர் நியமிக்கப்படுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். இதற்குப் போதுமான கால்நடை டாக்டர்கள் இல்லாமல் போகுமேயானால், பக்கத்து வட்டாரத்தில் உள்ள டாக்டர்கள், கூடுதலான பொறுப்பை மேற்கொள்ள ஏற்பாடு செய்யவேண்டும்; அவ்வாறு கூடுதல் பொறுப்பை மேற்கொள்ளும் கால்நடை டாக்டர்களுக்கு, மாதந்தோறும் 50 ரூபாய் விசேஷ சம்பளமாகக் கொடுக்க, அரசாங்கம் அனுமதித்துள்ளது.

### நடைமுறை சீர்திருத்தங்கள்

இது தவிர, கால்நடை மருத்துவ நிலையத்திற்குத் தேவையான நிலத்தின் பரப்பு, இடத்தின் தேர்வு முதலிய விஷயங்களிலும், தக்க சீர்திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளன. அதாவது, கால்நடை மருத்துவ நிலையம் மிகச் சிறந்த முறையில் அமைவதற்கு இரண்டு ஏக்கர் பரப்புள்ள நிலம் தேவையாகும். ஆனால், ஒரு சில இடங்களில், இந்த அளவுக்கு ஏற்ற நிலம் கிடைப்பது, அரிதாக உள்ளதையொட்டி, குறைந்தது ஓர் ஏக்கர் நிலத்தில் இந்தக் கட்டிடத்தை அமைக்கலாம் என்று அரசாங்கம் உத்தரவிட்டுள்ளது. அத்துடன், மருத்துவ நிலையத்தை எங்கே அமைப்பது என்ற இறுதி முடிவு செய்வதற்காகும் கால தாமதத்தைத் தவிர்க்கவும், வழி காணப்பட்டுள்ளது. இதற்காக, மாவட்ட கால்நடை அதிகாரி உதவியோடு, கால்நடை மருத்துவ நிலையம் எங்கே அமைக்கப்படலாம் என்பதை மாவட்டக் கலெக்டரே இறுதியாகத் தீர்மானித்து விடலாம். கால்நடை பராமரிப்பு நெறியாளரின் ஒப்புதல் வேண்டும் என்ற அவசியமில்லை. தவிர, பஞ்சாயத்து யூனியன் தலைமை அலுவலகம் உள்ள இடத்திலேயே, கால்நடை மருத்துவ நிலையம் அமைந்திருக்க வேண்டும் என்ற கட்டாயமும் இல்லை. கூடுமான வரையில், பஞ்சாயத்து யூனியன் மன்றத்தின் கருத்துக்களுக்கு மதிப்பளிக்க வேண்டும் என்றும், உத்தரவாகியுள்ளது.

ஆக, இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதில் உள்ள சிக்கல்களை ஆராய்ந்து பார்த்து, ஒரு கால வரையறையைக் குறிப்பிட்டு, இதைத் தீவிரமாக நிறைவேற்றி முடிக்க வேண்டும் என்று, கால்நடை பராமரிப்பு நெறியாளருக்கும், எல்லா மாவட்டக் கலெக்டர்களுக்கும் அரசாங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

கிராம வளர்ச்சிக்கான திட்டங்களை உருவாக்குவதே, மிகவும் கடினமான வேலை. அவற்றை நிறைவேற்றத் தொடங்கும்போது, எத்தனையோ நிர்வாகச் சிக்கல்களும், கால தாமதமும், இலாகா விதி முறைகளும், பொதுஜனத் தலைவர்களின் பல்வேறு கருத்துக்களும், குறுக்கிட்டு, சிக்கல்களை மேலும் கடினமாக்கி விடுகின்றன. எல்லாவற்றையும் தக்க முறையில் ஆராய்ந்து, இறுதி லட்சியமான கிராம மக்களின் நல்வாழ்வை மனத்தில் கொண்டு, தக்க உத்தரவுகளை அமைக்க, கிராம நலத்துறை, முயன்று வருகிறது. இதற்கு, கால்நடை மருத்துவ நிலையங்களை உருவாக்கும் பிரச்னை பற்றிய உத்தரவை, ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகக் கொள்ளலாம்.

### லத்தூர் யூனியனில் 27 பஞ்சாயத்து தலைவர்கள் போட்டியின்றி தேர்வு

# ஜமீன் கிராமங்களின் புதிய தோற்றம்!

முன்பு ஜமீன் கிராமங்களாயிருந்தவை சுதந்திர சதாப்தத்தில் எந்த அளவுக்கு முன்னேறி, புதிய தோற்றம் பெற்று வருகின்றன என்பதற்கு, செங்கல்பட்டு மாவட்டத்தைச் சேர்ந்த லத்தூர் பஞ்சாயத்து யூனியன், தக்கதொரு எடுத்துக்காட்டாய் விளங்குகின்றது.

ஜமீன் கிராமங்கள் நிறைந்த இந்த யூனியனில், வேறு பல வட்டாரங்களில் காணமுடியாத அளவுக்கு இப்போது சாலை வசதி மிகுந்திருக்கிறது. அநேக சிறு கிராமங்களுக்குக்கூட தார் போட்ட சாலை வசதியைக் காணமுடிகிறது. அநேகமாக, எல்லாக் கிராமங்களும் மின்சார வசதி பெற்றிருக்கின்றன. ஆதலால், கிணற்று பாசன சாகுபடி அளவு பெருகியிருக்கிறது. வண்டல் மேடிட்ட படுகைகளுடனும், அரிப்பு ஏற்பட்ட கரைகளுடனும் கிடந்த ஏரிகள் எல்லாம், மராமத்து செய்யப்பட்டு வருகின்றன.

இவ்வாறு முன்னேறி வரும் இப்பகுதியில், பஞ்சாயத்து ஆட்சிமுறை ஏற்பட்ட பிறகு, கிராம நல வேலைகள் திருப்திகரமாய் நடந்து வருகின்றன. படித்தவர்கள், முற்போக்கு விவசாயிகள், சீர்திருத்த நோக்கம் கொண்ட செல்வந்தர்கள் பஞ்சாயத்து ஆட்சியின்கீழ் பொறுப்புகளை வகிப்பவர்களாயும், கிராமத் தலைவர்களாயும் இருந்தால், அத்தகைய பகுதியில் அபிவிருத்தி வேலைகள் சிறப்பாக நடைபெறும் என்பதற்கு, இந்த யூனியனை ஓர் உதாரணமாக கூறலாம். இந்த யூனியனுக்குப் புதிய தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கும் திரு வி. கோபால் ரெட்டியார் ஒரு முற்போக்கு விவசாயி மட்டுமல்ல; கல்லூரியில் படித்துப் பட்டம் பெற்றவர். ஏற்கனவே தாலுகா அளவில், பல பொது ஸ்தானங்களில் பொறுப்பு வகித்து வரும் அவர், பொதுப் பணிகளில் இயல்பான நாட்டம் கொண்டிருக்கிறார். சமீபத்தில்தான் இப்பதவிக்கு வந்தவர் என்றாலும், யூனியன் அலுவல்களில் அவருக்குள்ள தெளிந்த அறிவு வெளிப்படுகிறது. மதுராந்தகம் ஏரியின் உபரி தண்ணீர் வீணாவதை எப்படி பயன்படுத்தினால், லத்தூர் பஞ்சாயத்து யூனியன் பகுதிக்குப் புதிய பாசன வசதி கிடைக்கச் செய்யலாம் என்று ஒரு முற்போக்கு விவசாயி யோசனை கூறுகிறார் என்றால், இவர் உடனே அது பற்றி விளக்கம் கூறுகிறார். அந்த யோசனை சம்பந்தமான பூர்வாங்கத் திட்டம் ஒன்று ஏற்கனவே அதிகாரிகளின் பரிசீலனைக்கு அனுப்பப் பட்டிருக்பதாகத் தெரிவிக்கிறார்.

இவருக்கு முன், சீவாடி கிராமப் பஞ்சாயத்துத் தலைவராக இருந்தவரான திரு ஆர். கிருஷ்ணசாமி ரெட்டியார் சிறப்பான முறையில் பொதுப்பணியாற்றி இருக்கிறார். அவரது நிர்வாகத்தின்கீழ் கிராமப் பள்ளிக்குப் புதிய கட்டிடம் கட்டப்பட்டதும், அதோடு ஆசிரியைகளுக்கெனத் தனி விடுதி ஒன்று கட்டப்பட்டதும், குறிப்பிடத்தக்க பணிகள்.

#### வழிகாட்டும் இளைஞர்

இதே ஊரைச் சேர்ந்தவரும், இண்டர்மீடியட் வரை படித்தவருமான திரு. எஸ். வி. வேதாசலம் தம் நிலையில் உள்ள மற்ற பல இளைஞர்களைப் போல் நகர வாழ்க்கைக்கு ஆசைப்பட்டு உத்தியோகம் எதற்கும் செல்லாமல்—ஊரிலேயே தங்கி

விவசாயத்தைத் திருந்திய முறைகளில், விஞ்ஞான ரீதியில் திறம்பட நடத்துகிறார். அவரிடம் டிராக்டர் உள்பட, பல நவீன விவசாயக் கருவிகள் சொந்தமாக இருக்கின்றன. அவர் நடத்தும் கோழிப் பண்ணை மிகவும் சிறப்பான முறையில் அமைந்திருக்கிறது. "பெரிய அளவில் விவசாயம் செய்யும் உங்களுக்கு இதில் எப்படி அக்கறை வந்தது?" என்று கேட்டதற்கு, "இதில் எல்லாம், ஆரம்பத்தில் கொஞ்சம் நஷ்டம் வரும். பிறகுதான் பலன். ஆகையால் ஓரளவு வசதி படைத்தவர்கள் முன்னோடிகளாக இருந்து இவற்றை நடத்திக் காட்டாவிட்டால், அரசாங்கம் சொல்லும் நல்ல காரியங்களில் மற்ற ஜனங்கள் ஈடுபட மாட்டார்கள்" என்ற பதில் கிடைத்தது. கடந்த ஆறு ஆண்டுகளாகக் கோழிப் பண்ணை நடத்தி வருவதாகவும், ஆனால் பஞ்சாயத்து யூனியன் மூலம் கோழிகளுக்கு வைத்திய சிகிச்சை போன்ற உதவிகள் கிடைக்கத் தொடங்கிய பிறகுதான், இதில் வெற்றி அடைந்து வருவதாகவும், அவர் கூறுகிறார். ஒருமுறை 131 முட்டைகளை வைத்ததில் 121 குஞ்சுகள் பொறித்தது, அதில் 119 உயிருடன் இருப்பதும் இந்த இளைஞர் பெருமை படத்தக்க சாதனைகளில் ஒன்று.

லத்தூர் பஞ்சாயத்து யூனியனுக்குப் பெருமை சேர்க்கும் சில சிறப்புகள் உள்ளன. மொத்தம் 41 பஞ்சாயத்துக்களில், அண்மையில் நடந்த தேர்தலின்போது, 27-க்கு மேற்பட்ட பஞ்சாயத்துகளுக்கும் தலைவர்கள் ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இரு பஞ்சாயத்துகளுக்குப் பெண்கள் தலைவர்களாக வந்திருக்கிறார்கள். முக்கிய ஜமீன் கிராமமான செய்யூரில், பஞ்சாயத்து உறுப்பினர்கள் மொத்தம் 13 பேர்களில், 8 பேர் ஹரிஜனங்கள். தலைவராய் வந்திருப்பவர் திரு. வி. சி. அப்பாராவ் முதலியார். பழைய ஜமீன் குடும்பத்தைச் சேர்ந்தவர். அவர் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டது ஒரு ஹரிஜன வார்டிலிருந்து. செய்யூர் பஞ்சாயத்து அலுவலகத்திற்கெனச் சொந்தக் கட்டிடம் கட்டப்பட்டிருக்கிறது. இரு ஹரிஜனக் காலனிகளுக்கும் விளக்கு வசதிகளோடு, குடித் தண்ணீர் வசதியும் செய்யப்பட்டிருக்கிறது.

யூனியனில் சிறப்பான இடம் பெறும் பஞ்சாயத்துக்களில் ஒன்று 'கொடூர்'. இங்கு வீட்டு வரி வசூல் பாக்கி என்பதே இல்லை. மாதர் சங்கப் பணிகளும் இங்கு திருப்திகரமாக நடந்து வருகின்றன. மாநில அளவிலேயே எடுத்துக்கொண்டால், சிறப்பாக இயங்கி வரும் கிராம வானொலி மன்றங்களில் ஒன்று கொடூர் மன்றம். இவ்வகையில் இவ்வூர் பஞ்சாயத்துத் தலைவர் திரு எம். ஏ. ராமானந்தம் தாமே பல பயனுள்ள கேள்விகளை வானொலி நிலையத்திற்கு அனுப்பி, மற்றவர்களுக்கு வழி காட்டியாகத் திகழ்கிறார். நிறைய கேள்விகளைக் கேட்கும் இந்த மன்றத்தினர், ஒரு குறையைத் தெரிவிக்கின்றனர். அதாவது சில தகவல்களைக் கேட்டால், சம்பந்தப்பட்ட இலாகா அல்லது அதிகாரியுடன் தொடர்பு கொள்ளும்படி பதில் தரப்படுகிறது என்றும். இவ்வாறில்லாமல் வேண்டிய தகவல்களை வானொலி நிலையத்தாரே விசாரித்தறிந்து, தெரிவித்தால் பயனுள்ளதாக இருக்கும் என்றும் கூறுகிறார்கள்.

### பிரமுகர்கள் தெரிவிக்கும் கருத்துக்கள்

இந்த யூனியனில் பல பஞ்சாயத்துத் தலைவர்களும், விவசாயப் பிரமுகர்களும் குறிப்பிடத்தக்க கல்வித் தகுதி பெற்றவர்களாயிருப்பதால், பஞ்சாயத்து ஆட்சி முறையிலும், கிராம நல அபிவிருத்தி, விவசாய உற்பத்தி பெருக்கம் சம்பந்தமான அரசாங்கத் திட்டங்களிலும் தங்கள் அனுபவத்தையொட்டி கீழ்க்காணும் குறைபாடுகளைக் குறிப்பிட்டு மாற்று யோசனைகளும் தெரிவிக்கிறார்கள்.

விவசாய சம்பந்தமான விஸ்தரிப்பு அலுவலர் பூச்சி மருந்துகள் போன்றவற்றை விற்பனை செய்பவராக மட்டும் இல்லாமல் விவசாய அபிவிருத்திக்குப் போதிய கவனம் செலுத்தக் கூடியவராகவும் இருக்கவேண்டும், அதற்குரிய அவகாசம் இருக்கும்படியாக, அவரது அலுவல் முறை திருத்தியமைக்கப் பட வேண்டும்.

விவசாயப் பணிக்கே கிராம சேவக்குகளைப் பயன்படுத்தும் திட்டம் நடைமுறையில் செயல்படவில்லை. பழையபடி கடன்கள் வினியோக வேலையில்தான், அவர்கள் பெரும்பாலும் ஈடுபட்டு வருகிறார்கள். ஆகையால் விவசாயப் பணிகளுக்கு ஒருவகை கிராம சேவக்குகளும், மற்ற வேலைகளுக்கு இன்னொரு வகை சேவக்குகளும் என்றும் ஏற்படுவது சிறந்த முறையாக இருக்கும்.

பூச்சி மருந்து போன்றவை வினியோகத்தில், ஒரு நபருக்கு இவ்வளவுதான் என வரம்பு இருப்பதால், அதிகம் தேவைப்படுபவர்கள், தேவையில்லாத மற்றவர்களின் பெயரில் வாங்கும் நிர்ப்பந்தமான ஊழல் நேரிடுகிறது. ஆகையால் அவரவர் தேவைக்கு ஏற்ப வினியோகம் செய்யப் படவேண்டும்.

[26-ம் பக்கம் பாாக்க]

"பெற்ற சுதந்திரத்தைக் காப்பாற்றிக்கொள்வதற்கு உரிய விலையை நாம் கொடுத்தாக வேண்டும். கிடைத்த சுதந்திரம் தானாகவே நிலைத்திருக்கும் என்று நினைக்க வேண்டாம். நிலைத்திருப்பதற்கான காணிக்கையை நாம் எப்போதும் செலுத்திக் கொண்டிருக்க வேண்டும். சற்றே அலட்சியமாக, அல்லது அசட்டையாக இருந்தால், நமது சுதந்திரம் ஆபத்துக்குள்ளாகிவிடும். வரலாற்றில் இவ்வாறு பலமுறை நேர்ந்திருக்கிறது."

—அமரர் நேருஜி

## ஓர் ஏக்கரில்

## பசுந்தாளுரம் போட்டதில்

## ஆன செலவு 43 ரூபாய்

## எடுத்துக் கொண்ட நாட்கள் 118

## கிடைத்த நிகர லாபம்

## சுமார் 600 ரூபாய்

# அதிசயம்! ஆனல் உண்மை!

[திரு எம். சுப்பிரமணியம், கிராமிய வளர்ச்சிப் பயிற்சி நிலேயம், கிருஷ்ணகிரி.]

வளம் பெருக, வருமானம் பெருக, நிலத்தில் களர் மாற, தழை உரத்தில் தன்னிறைவு காண தக்கைப்பூண்டு ஒரு தரமான தாளுரப் பயிர். ஆனுல், அதன் கதையை, கிருஷ்ணகிரி நீர்த் தேக்கத்தில் இருக்கும் கிராமிய வளர்ச்சிப் பயிற்சி நிலேய வேளாண்மைப் பண்ணையில் பார்த்தபோது, வாளிப்பான அதன் வளர்ச்சியைக் கண்டபோது வியப்புக் குறியும், விஞக் குறியும் தோன்றி பிரம் மிக்க வைத்து விட்டன !

நம் நாட்டில். அச்சாணி போன்ற கிராமிய சூழ் நிலேயில் விவசாயப் பெரு மக்களுடன் அன்ருடம் பழகி, உறுதுணே புரியும் வேளாண்மைத் துறைப் பணியாளர்கள், கிராம சேவகர்கள், ஈராண்டு பயிற்சிப் பெற்று மூன்ருண்டுகளுக்கு மேல் பணி யாற்றி வந்த கிராம நல ஊழியர்களுக்கு, மறு பயிற்சி அளிக்கும் திட்டத்தின் கீழ் இங்கு மறு பயிற்சி பெறும் முதல் குழுவாக நாங்கள் இருபத் தைந்து பேர் கிருஷ்ணகிரி நீர்த்தேக்கத்திலிருக்கும் கிராமிய வளர்ச்சிப் பயிற்சி நிலேயத்திற்கு வந்தோம்.

### கவனத்தைக் கவர்ந்த பயிர்

செயல் முறைப் பயிற்சிக்குச் சென்ற நாங்கள், அந்தப் பண்ணேயில் பார்த்த அத்தனேப் பயிர் களிலும் எங்கள் கவனத்தை மிகவும் கவர்ந்தவை பசுந்தாளுப் பயிர்களே ! அதிலும் தக்கைப் பூண்டு தான் என்ருலும் அது மிகையாகாது. ஐம்பது ஏக்கர் நிலங் கொண்ட அப்பண்ணேயில் தக்கைப் பூண்டு அலங்கரிப்பதுவோ 'பி' பிளாக் எனும் 3:52 ஏக் கரை மட்டும் தான். கருகருவென்று அது அடர்ந்து வளர்ந்திருந்ததோ பத்து அடிகள் வரை. சமமான கரும்பச்சையை வெட்டி வைத்தாற் போன்றிருந்தது அதன் கதையைக் கேட்டோம் ஆசிரியரிடம்.

ஆசிரியர் சொன்ஞர் ; "இந்த பசுந்தாள் உரத் திஞல் ஏக்கருக்கு ரூ, 43 செலவில் சுமார் ரூ. 600/- லாபம் கிடைக்கின்றது" என்று !

உண்மையாகவா ?
நம்ப முடியவில்லேயே ?
இருக்குமா ?
எப்படி இருக்க முடியும் ?
நடக்கக் கூடியதா ?

ஆம், நாங்கள் எழுப்பிய கேள்விகள் தான் இவை. ஆசிரியர் மெல்லச் சிரித்தார். ஒன்றும் பேசவில்லே. பின் பண்ணே அலுவலகத்திற்கு அழைத்துச் சென்ருர். அங்கிருந்த பதிவேடுகளே எடுத்து எங்கள் முன் வைத்தார். ஆசிரியர் கெட்டிக்காரர் தான். தான் பேசாமல் பதிவேடு களேயே பேச வைத்து விட்டாரே ! பதிவேடு பேசிய கதையை நீங்களும் கேட்க வேண்டாமா ? பதிவேடு கூறிஞல் மட்டும் போதுமா என்ன ! எங்களேயே, அறுவடை செய்ய வைத்து அனுபவம் பெறச் செய்தார்; நாங்கள் வயலில் இறங்கி அறுவடை

செய்தோம், நாங்கள் அடைந்த அனுபவத்தை நீங்களும் கேளுங்கள் ;—

நெல் அறுவடைக்கும் பின் அதே ஈரத்தில் 3·52 ஏக்கருக்கும் 45 கிலோ கிராம் விதையை ஒரு முறை ஒட்டி விதைத்து மறுமுறை உழுதிருக்கிறார்கள். அது நடந்த தேதி 1965-ம் ஆண்டு மார்ச்சுமீ 5-ந் தேதி. பின் மூன்றே முறை நீர் பாய்ச்சி இருக்கிறார்கள். அதை அறுவடை செய்து அளந்து ஆய்ந்து அறியும் பேறு எங்களுக்கு 1965·ம் ஆண்டு ஜூன் மாதம் 30-ந் தேதி அன்று கிட்டியது. ஓர் ஏக்கரில் அதன் தாளுரம் வந்தது 10,990 கிலோ கிராம், அதாவது 24,620 பவுண்டு; சுமார் 25 வண்டிகள். இந்த மகசூலைக் கொடுக்க எடுத்துக் கொண்ட காலம் 118 நாட்கள். இதைக் கொண்டு ஓர் ஏக்கருக்காகும் செலவை கணக்கிட்டோம்: விவரம் வருமாறு:

ஓர் ஏக்கர் தக்கைப் பூண்டு பயிரிட ஆகும் செலவு :—

| வரிசை எண். | சாகுபடி விவரங்கள். | ஆன செலவு. | குறிப்பு. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1. | 2 முறை ஒட்டி விதைக்க தேவையான 5 ஏர் கூலி. | 17·50 | ஒரு ஏருக்கு ரூ. 3.50 என்ற பிராந்திய கூலிப்படி. |
| 2. | விதைத்த விதை 12·5 கி. கி. | 8·75 | 1 கி. கி. 70 பைசா வீதம் |
| 3. | மூன்று முறை நீர் பாய்ச்ச ஆள். | 1·50 | |
| 4. | அறுவடைக்கு தேவையான 20 பெண் ஆட்களின் கூலி. | 15·00 | பெண் ஆள் 1-க்கு 1 நாளைக்கு 75 பை. வீதம். |
| | மொத்த செலவு | 42·75 | |

சிறப்பு !—

(1) எவ்வித கவனிப்புமின்றி மிகக் குறைந்த செலவில் ஒரு பணப் பயிர் தரும் மகசூல் தந்துள்ளது.

(2) அறுவடைக்கு வர ஆகிய காலம் மிகக் குறைவு, 118 நாட்களே! (1965-ம் ஆண்டு மே மாதம் 3-ந் தேதி முதல் 1965-ம் ஆண்டு ஜூன் மாதம் 30-ந் தேதி முடிய.)

(3) இதற்கிடையே அது பெற்றது வெறும் தண்ணீர் மட்டும் தான். அதுவும் மூன்றே முறை.

(4) வளர்ந்திருந்தது 9' முதல் 10' வரை ஏக்கர். ஒன்றிலே கிட்டிய பசுந்தாளுரமோ 24,620 பவுண்டு, சுமார் 25 வண்டிகள் !

(5) பிராந்திய விலைப்படி அதன் மதிப்பு ரூ. 625 (ஒரு வண்டி தழை ரூ. 25).

(6) அதற்கான செலவு ரூ. 42·75.

(7) நிகர லாபம் ரூ. 582·25.

(8) இந்த மகசூல் ஒரு விவசாயிக்கு ஒரு ஏக்கரிலிருந்து கிடைத்தால் 5 ஏக்கருக்கு வேண்டிய தழை பெறலாம்.

(9) இதனால் தன் தேவையை பூர்த்தி செய்வதோடு ரூ. 42·75 செலவில் சுமார் ரூ. 600-ஐ லாபமாகப் பெறலாம்.

(10) தொடர்ந்து மூன்று அல்லது நான்கு முறை இதைப் பயிரிட்டு மடக்கி உழுவதால் களர் நிலம் பண்படைகிறது.

(11) ஏக்கருக்கு 5,000 ராத்தல் தரமான தழை உரம் நெற்பயிருக்கு இடுவதால் மகசூல் அதிகரிக்கிறது.

பொருளாதார நோக்கோடு பார்த்தால், இது மற்றெந்த உணவுப் பயிர்களோடோ போட்டியிட்டு வெல்லக் கூடியது தான் என்பதை நேரில் கண்டோம். இதில் அதிசயம் என்னவெனில் அதன் வளர்ச்சியும் எடையும் மட்டுமல்ல. அதற்கான செலவும் கூட. ஒரே ஏக்கரில் ரூ. 42·75 முதலீடு வைத்து 118 நாட்களில் ரூ, 625 பெறுவதென்பது அதிசயம் தானே. தனிப்பட்ட விவசாயிகளுக்கு விதைகள் மானிய விலையில் விநியோகிப்பதால் இன்னும் செலவு குறையும். இதனால் பலனற்ற களர் நிலம் பண்பட்ட நல்ல விளை நிலமாக மாறும். காலத்தில் கிட்டா காட்டுத் தழைக்கு அலைவதைத் தவிர்த்து நமது தேவையான நம் நிலத்தின் மூலமே பூர்த்தி செய்து கொள்ளலாம். குறைந்த செலவில் நிறைந்தப் பலனைப் பெறலாம். நியாயமான வேறெந்த தொழிலிலும் கிடைக்காத பலன். ஆகவே, பாசன வசதியுள்ள பஞ்சாயத்து பழச் சோலைகளிலும் விவசாயிகளின் நிலங்களிலும் 2-3 முறை தண்ணீர் கட்டும் வசதி உள்ள இடங்களிலும் பயிரிடலாம். பஞ்சாயத்தின் வருவாய் உயருவதோடு, கிராமத்தின் தாளுரத் தேவையையும் தவிர்க்கலாம்.

### மறுக்க முடியாத உண்மை

சாதாரண இந்த தக்கைப் பூண்டு வேளாண்மை துறையில், அதுவும் கிருஷ்ணகிரி கிராமிய வளர்ச்சிப் பயிற்சி நிலைய பண்ணையில் வகிக்கும் இடமும், கொடுக்கும் பலனும் பார்க்க "அதிசயம்" தான். ஆனால், அது விவசாயிக்கும் மிக அவசியமானது தான் என்று எங்கள் இதயத்தில் அன்று இடம் பெற்றது மாற்றவோ, மறுக்கவோ முடியாத "உண்மை—".

"நான் விதவையானபோது, என்னை ஒரு பாரமாகக் கருதினார்கள், என் குடும்பத்தினர். அந்த நிலையில் இருந்த நான், எனக்கென ஒரு வாழ்க்கைப்பாதையை அமைத்துக்கொள்ள வாய்ப்பளித்தது இந்த நிலையம்."

அந்த விதவைக்கு மட்டுமல்ல, வாழ்வின் சீர்குலைந்த வேறு சில பெண்களுக்கும் புது நம்பிக்கையை ஊட்டி, எதிர்கால வாழ்விற்குப் புத்தொளி காட்டும் பணியை மேற்கொண்டுள்ள அந்த நிலையம் எது?

# பரவசமூட்டும் பரிசோதனை

மேற்கு வங்காள மாநிலம், 24 பர்கானாக்கள் மாவட்டத்தைச் சேர்ந்த ராஜராத் விஷ்ணுப்பூர் என்ற கிராமத்தில் இந்த நிலையம் 1964-ம் ஆண்டு மே மாதம் 24-ம் தேதி முதல் இயங்கி வருகிறது. ஒரு தலைமையாசிரியை உள்பட மூன்று ஆசிரியைகளின்கீழ் 22 பெண்கள், குறுகிய கால கல்விப் பயிற்சி பெற்று வருகிறார்கள். இவர்கள் பள்ளி இறுதித் தேர்வு (எஸ்.எஸ்.எல்.சி. பரீட்சை) எழுத, தயார் செய்யப்படுகிறார்கள். இந்த மாணவிகள் அனைவரும் 20 வயது முதல் 35 வயது வரை உள்ளவர்கள். இவர்களில் மூவர் விதவைகள். அவ்விதவைகளில் ஒருவர் குறிப்பிட்டதுபோல், இங்குள்ளவர்கள் எல்லாம் தாங்கள் சமுதாயத்திற்கு ஒரு சுமையாக இல்லாமல், தங்களுக்கென ஒரு வாழ்க்கையை ஏற்படுத்திக்கொள்ளும் புதிய நம்பிக்கையோடு கல்வி பயின்றுவருகிறார்கள்.

இங்குள்ள மாணவிகளில் பெரும்பாலோர், கிழக்குப் பாகிஸ்தானிலிருந்து குடிபெயர்ந்து வந்த குடும்பங்களைச் சேர்ந்தவர்கள். மொத்தமுள்ள 22 மாணவிகளில் 15 பேர் இந்த வகையைச் சேர்ந்தவர்கள்தான். இப் பள்ளியில் இவர்களுக்கு இரண்டாண்டு காலப் பயிற்சி தரப்படுகிறது. இதன்படி, முதல் கோஷ்டி மாணவிகள் அடுத்து ஆண்டு எஸ்.எஸ்.எல்.சி. தேர்வு எழுதுவர்.

### இளம் ஆசிரியை தரும் விளக்கம்

இந்த நற்பணியாற்றிவரும் நிலையத்திற்கு நிதிப் பற்றாக்குறை ஒரு பிரச்னையாக இருந்து வருகிறது. மாணவிகளில் சாப்பாட்டுச் செலவுக்காக தலா ரூ. 35 உதவிப் பணமும், சில்லறைச் செலவுக்காக ரூ. 5 படியும் தரப்படுகிறது. ஆனால் இவற்றைக்கொண்டு முழுமையான உணவளிப்பது தலைமையாசிரியைக்குப் பெரிய பிரச்னையாக இருந்து வருகிறது. மற்றும் போதுமான நாற்காலி-மேஜை போன்ற சாமான்கள், விளையாட்டு வசதிகள் முதலியவை இல்லை. எனினும் இத்தச் சங்கடங்களுக்கிடையே இந்த நிலையம் மிகுந்த சுறுசுறுப்புடன் காணப்படுகிறது. பயிற்சி பெறும் பெண்களும் சரி, ஆசிரியைகளும் சரி, உற்சாகத்துடன் இருக்கின்றனர். இது ஓரளவுக்கு வியப்பாகவும் இருக்கிறது. ஆனால் ஆசிரியைகளில் ஒருவரிடமிருந்தே விளக்கம் கிடைக்கிறது. துடிப்பு மிக்க ஒரு மாணவிபோல் ஓர் இளம் ஆசிரியை, "எங்களுக்குக் கிடைப்பது சொற்பச் சம்பளந்தான். எனினும், உற்சாகமாக இருக்கிறோம். காரணம், வாழ்வில் நலம் இழந்த பெண்களுக்கு, புது நம்பிக்கையூட்டும் பணியைச் செய்வது, பரவசமூட்டும் ஒரு பரிசோதனை. ஆகையால் தெம்புடன் இருக்கிறோம்" என்று சொல்கிறார்.

அவர் சொல்வது போல், இந்த நிலையம் மேற்கொண்டுள்ள பணி, பரவசமுட்டும் ஒரு பரிசோதனைதான். தீர்க்கதரிசனத்துடன் இத்தகையதொரு திட்டத்தை வகுத்தவர்களைப் பாராட்ட வேண்டும். இன்னும் சீரிய முறையில் இதைச் செயல்படுத்தினால், பெரும்பலன் ஏற்படுவது திண்ணம். அதற்குக் கூடுதல் செலவு ஆகத்தான் செய்யும். ஆனால் சிலருக்குப் புதுவாழ்வு அளிக்கும் ஒரு மகத்தான திட்டம், அதன் இலட்சியம் ஈடேற அத்தகைய செலவு செய்துதான் ஆக வேண்டும்.

# நாற்றில் இருக்கிறது இரகசியம்

கோயம்புத்தூர் மாவட்டத்தைச் சேர்ந்த ஒரு சிறு கிராமம் குருடம்பாளையம். அங்கு சிறந்த விவசாயி யார் என்று கேட்டால், அக்கிராம மக்கள் அனைவரும், ஒரு நபரின் பெயரை ஏகமனதாகக் குறிப்பிடுவார்கள். அவர்தான் திரு. வி. சி. ரங்கசாமி என்ற முற்போக்கு விவசாயி.

அக்கிராமத்தில் மட்டுமல்ல, பாரதம் முழுவதிலும் குறிப்பிடத்தக்க முற்போக்கு விவசாயிகளில் அவரும் ஒருவர். அவர் உருவாக்கியுள்ள விவசாயப் பண்ணையில் திருந்திய விவசாய முறைகள் பலவற்றையும் பின்பற்றுகிறார். விடாமுயற்சி, சலியா உழைப்பின் பலனாக, அவர் கடந்த ஐந்து ஆண்டுகளில், 10 ஏக்கராக இருந்த தம் பண்ணைக்கு மேலும் நான்கு ஏக்கர்களைச் சேர்த்திருக்கிறார்.

திரு ரங்கசாமி, குறிப்பாக நெல் சாகுபடியில் விசேஷக் கவனம் செலுத்தி புதிய முயற்சிகளில் வெற்றியும் கண்டு வருகிறார். சென்ற அறுவடையின்போது, அவர் ஒரு ஏக்கரில் 8,248 ராத்தல் நெல் மாசூல் எடுத்தார். மாசூல் போட்டிக்குத் தம் பெயரை தக்க நேரத்தில் பதிவு செய்துகொள்ளாததால் மாநிலப் பரிசைப் பெறும் வாய்ப்பை நழுவவிட்டார். அவருக்கு ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 450 விவசாயச் செலவு ஏற்படுகிறது; செலவு போக நிகரமாக ரூ. 750 வருமானம் கிடைக்கிறது.

தமது வெற்றியின் ரகசியம் நாற்றில் இருக்கிறது என்று, புன்முறுவலோடு கூறுகிறார் ரங்கசாமி. நாற்று வளரும்போது விசேஷக் கவனம் செலுத்தவேண்டும். 15 நாட்களுக்கொருமுறை (ஒரு நாள்) தண்ணீர் பாய்ச்சுவதை நிறுத்திவிடவேண்டும். இவ்வாறு செய்வதால், நாற்று கிளைத்து வளருவது அதிகமாகும்; பயிர் வளர்ந்தபின் கதிர்களின் எண்ணிக்கையும் அதிகமாக இருக்கும். எனவே மாசூல் அளவும் உயரும். நாற்றுகளைப் பறித்து கழனியில் நட்டபின்பு 100 ராத்தல் அமோனியம் சல்பேட், 200 ராத்தல் சூபர் பாஸ்பேட், 30 ராத்தல் பொடாஷ் என்ற அளவில் ரசாயன உரங்கள் போடப்படுகின்றன.

ஜப்பானிய முறை நெல் சாகுபடியில் திரு ரங்கசாமிக்கு நம்பிக்கை இருக்கிறது. இந்த முறையைக் கையாண்டு, அவர் மிகுந்த மாசூல் பெற்றிருக்கிறார்.

### கரும்பு சாகுபடியிலும் பரிசு

அவர் கரும்பும் சாகுபடி செய்கிறார். அதிலும் அவருக்கு ஒரு தகுதியுண்டு. ஏக்கருக்கு 50 டன் கரும்பு மாசூல் கிடைக்கிறது. ஒரு முறை 56 டன் மாசூல் எடுத்ததற்காக அவருக்கு கிராமிய அளவில் பரிசு அளிக்கப்பட்டது.

திரு ரங்கசாமியின் பண்ணையில் சோளமும் நல்ல முறையில் பயிராகிறது. ஒரு ஏக்கரில் 3,175 ராத்தல் மாசூல் ஏற்பட்டு, அதன்மூலம் ரூ. 497-50 நிகர வருமானம் கிடைத்தது.

தழை உரத்தின் சிறப்பை நன்கு உணர்ந்த திரு ரங்கசாமி, 6,000 கிளிரிசீடியா செடிகளையும், ஏராளமான ஐபோமியா செடிகளையும் வளர்த்து வருகிறார்.

### மண்ணுக்கு ஊட்டம்

பயிர் ஏற்றுவதற்கு முன், நிலத்தைப் பண்படுத்துவதில் தனிச் சிரத்தை எடுத்துக்கொள்கிறார் ரங்கசாமி. மண் சத்து ஆராய்ச்சி நிபுணர்களின் உதவி, யோசனை ஏதும் இல்லாமலே, தம் நிலங்களில் என்னென்ன சத்துக் குறைவாக இருக்கிறது என்பதை அனுபவத்தால் கண்டறிந்து, அக்குறையை நிறைவு செய்கிறார். எனவே அவர் எதிர்பார்க்கிறபடி நிலத்தில் பலன் கிடைக்கிறது.

கர்ண பரம்பரையான விவசாய முறைகளையே, கண்மூடித்தனமாகப் பின்பற்றிக்கொண்டிராமல், உணவில் நாடு சுயதேவை பூர்த்தியடையச் செய்யும் வகையில், முற்போக்குக் கண்ணோட்டத்துடன் புதிய முறைகளைக் கடைப்பிடிக்கும் துணிவு, தகுதிபெற்ற ரங்கசாமியைப் போன்ற விவசாயிகள் நாடெங்கும் பெருகவேண்டும்.

# ஆலங்குளமும் அரசமரமும்

''கிராமங்கள் பின்னடைந்ததற்கும் கிராமப் பொருளாதாரம் சீர்குலைந்ததற்கும் காரணம் கிராமத் தொழில்கள் புறக்கணிக்கப்பட்டதுதான்'' என்று காந்திஜி ஒருமுறை குறிப்பிட்டார். ''விவசாயத்தை மட்டுமே நம்பியிருப்பதால் கிராமப் பொருளாதாரம் அடிக்கடி பின் தங்கிவிடுகிறது. அந்தக்குறையை நிவர்த்தி செய்யும் வகையில் கிராமத் தொழில்களும் வளர்ச்சி பெறுமாறு செய்யவேண்டும்'' என்று நமது திட்டக் கமிஷனும் வலியுறுத்தியது.

இந்த அடிப்படையில், தற்போது கிராமப் புறங்களில், நெடுங்காலமாக புறக்கணிக்கப்பட்டோ அல்லது மக்களின் கவனத்தைப் பெறுமலோ இருந்துவந்த தொழில்களுக்கெல்லாம் புத்துயிர் தரப்பட்டு வருகிறது. ஆங்காங்கே கிடைக்கும் ஆதார வசதிகளையும் ஆள் பலத்தையும், அந்தந்த தொழில்களில் ஈடுபடுத்துவது, கிராமத் தொழில் வளர்ச்சித் திட்டத்தின் முக்கியமான அம்சமாகும். இதனுல் ஒரு புறத்தில் தொழில் வளர்ச்சியடைவதுடன், மறுபுறத்தில், அந்தந்த இடங்களிலுள்ள தொழில் வினைஞர்களுக்கு நல்ல தொழில் வாய்ப்புகள் கிடைக்கின்றன. ஆலங்குளம் வட்டாரத்தை இதற்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகக் குறிப்பிடலாம்

### ஆலங்குளமும் அரசமரமும்

'திக்கெல்லாம் புகழும் திருநெல்வேலிச்சீமை' யில் உள்ளது ஆலங்குளம் வட்டாரம். ஏனைய வட்டாரங்களைப் போலவே, இந்த வட்டாரத்திற்கும், மூன்ருவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில், தொழிற் வளர்ச்சிக்கென ரூ. 50,000 ஒதுக்கப்பட்டது. 1962-63-ல், அதாவது மூன்ருவது ஐந்தாண்டுத் திட்டகாலத்தின் இரண்டாவது ஆண்டில், இவ்வட்டாரத்தில் கருமார் வேலைப் பயிற்சி நிலையம், தச்சு வேலைப் பயிற்சி நிலையம், தையல் பயிற்சி நிலையம் முதலியன ஆரம்பிக்கப்பட்டன. சிறியதும், நடுத்தரமானதுமான கிராமத் தொழில் திட்டங்கள் இவ்வட்டாரத்தில் சிறந்து விளங்குவதற்கு இன்னும் படிப்படியாக வளர்ச்சி பெறுவதற்கு மூல பலமாக இருக்கும் இந்தப் பயிற்சி நிலையங்கள் அரசமரம் போல் தழைத்து வருகின்றன.

பெரிய தொழிற்கூடங்களில் மட்டுமே தயாரிக்க முடியும் என்று கருதிவந்த கவர்ச்சிமிக்க நாகரீகப் பொருட்களை, குறைந்த விலையில் தயாரித்துக் காட்டுகிறது, ஆலங்குளம் கருமார் வேலைப்பயிற்சி நிலையம். அதே சமயத்தில் இவ் வட்டாரத்திலுள்ள மரம் சம்பந்தமான வேலைகளை ஒன்று விடாமல் செவ்வனே நடத்திவருகிறது, தச்சு வேலைப் பயிற்சி நிலையம், இவை மட்டு மின்றி கூடுதல் நபர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கும், செங்கல் தொழில் கூட்டுறவுகள் மூன்றும், மண் பாண்டத் தொழில் கூட்டுறவு ஒன்றும், கிராமப் பெண்களுக்குப் பகுதிநேர வேலைவாய்ப்பு அளிக்கும் பனைநார்ப் பெட்டி தயாரிக்கும் தொழிற்கூட்டுறவுச் சங்கம் ஒன்றும், சுண்ணும்பு தயாரிக்கும்தொழிற் கூட்டுறவுகள் மூன்றும். பாய் நெசவாளர் கூட்டுறவு ஒன்றும், (இக்கூட்டுறவினுல் கீழ்வீராணம் கிராம மக்களில் 25 சதவீதம் பேர்களுக்கு வேலைவாய்ப்பு கிட்டுகிறது), வெண்கலப் பாத்திரத் தொழில் கூட்டுறவு ஒன்றும், ஆலங்குளம் வட்டாரத்தில் உள்ளன.

### வளர்ச்சியின் அறிகுறி

ஆலங்குளத்தில் உள்ள கருமார் வேலைப்பயிற்சி நிலையமானது, 1963-ம் ஆண்டு ஜூலை மாதத்தில் தமிழ்நாடு சட்ட மன்றத் தலைவர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. இப்பயிற்சி நிலையத்துக்கான செலவு சுமார் ரூ, 15,000 ஆகும். நவீன இயந்திரங்களை இயக்கவும் திருந்திய கருவிகளின் உதவியால், குறைந்த விலையில் தரமான விவசாயக் கருவிகளை தயாரிக்கவும், பத்துப் பேர்களுக்கு ஓராண்டு காலத்திற்குத் தொழிற் பயிற்சி தரப்பட்டது. இப் பயிற்சியாளர்கள் ஒவ்வொருவருக்கும் மாதம் ஒன்றுக்கு ரூ. 25 உதவிப் பணமும் கொடுக்கப்பட்டது, தொழிற் கூடத்தில் இயந்திரங்களை நிறுவும் வேலை முடிந்தது, வட்டார வளர்ச்சி அதிகாரியும், தொழில் விஸ்தரிப்பு அலுவலரும் மிகுந்த முயற்சி செய்து தொழில் கூடத்திற்கு மின்சார வசதி செய்து கொடுக்க ஏற்பாடு செய்தனர். இதற்குப் பிறகு இப்பயிற்சி நிலைய

மானது, 1964 ஜூலை மாதத்தில் இருந்து, தொழில் உற்பத்திப் பணி நிலையமாக பணியாற்றி வருகிறது. ஆரம்பத்தில் ஓர் ஆசிரியரும், பயிற்சி பெற்ற மாணவத் தொழிலாளர்கள் இருவரும் வேலைக்கு அமர்த்தப்பட்டனர், தற்சமயம், தொழிற்கூடமானது நன்கு வளர்ச்சி பெற்றுள்ளது. அதில் மூன்று பயிற்சி தொழிலாளர்களும், ஒரு பிளாஸ்டிக் பின்னல்காரர் பணியாற்றுகிறார்கள்.

தொழிலாளர்களின் வேலையை இலகுவாக்கும் விதத்தில் மின்சார உலையும், பற்றவைக்கும் இயந்திரமும், துளையிடும் கருவியும், இன்னும் மின்சாரத்தால் இயங்கக் கூடிய பல திருந்திய கருவிகளும் இப்போது இந்நிலையத்தில் உள்ளன. இவற்றின் உதவியாலும், தொழிலாளர்களின் ஆர்வத்தினாலும், ஆசிரியரின் தொழில் நுட்பத் திறமையாலும், தொழில் விஸ்தரிப்பு அலுவலரின் சீரிய முயற்சியாலும் நேரடி மேற்பார்வையாலும், வட்டார வளர்ச்சி அதிகாரி அளிக்கும் ஊக்கத்தினாலும், தூண்டுதலினாலும், இத்தொழிற்கூடமானது, வட்டார மக்களின் நன்மதிப்புக்குப் பாத்திரமாகி, பிற வட்டாரங்களுக்கு முன்மாதிரியாகத் திகழ்கிறது என்றால் மிகையாகாது.

### உற்பத்தியாகும் பொருள்கள்

பெரிய தொழிற்பட்டறைகளில் தயாரிக்கப்பட்டனவோ என்று வியக்கும் அளவுக்கு பெரிய இரும்புக் கதவுகள், பலவித நாகரீகக் கிராதிகள், இரும்பு ஏணிகள், விவசாயக் கருவிகள், வரப்பு கட்டும் கருவிகள், மண்வெட்டி, கலப்பை ஆகிய கருவிகளும், சிறுவர் பூங்காக்களில் பயன் படக்கூடிய விளையாட்டுக் கருவிகளும் கவர்ச்சி மிக்க நாகரிகமான கூடை நாற்காலிகளும், மற்றும் இரும்புக் குழாய்களைக் கொண்டு தயாரிக்கப்படும் ஆசனங்களும், இங்கு தயாரிக்கப்படுகின்றன. இங்கே தயாரிக்கப்படும் நாற்காலிகள் கவர்ச்சி மிக்கவை. இவற்றை திருநெல்வேலியில் உள்ள வியாபாரிகள் அதிக அளவில் வாங்கி, அவற்றை நல்ல லாபத்துக்கு விற்கின்றனர்.

கடந்த ஒன்பது மாத காலத்தில் இத்தொழிற்கூடத்தில் சுமார் நாலாயிரம் ரூபாய் பெறுமான பொருட்கள் உற்பத்தி செய்யப்பட்டு விற்பனையாயின. இந்தக் குறுகிய காலத்திலேயே, இத்தொழிற் கூடத்தினால் ஆலங்குளம் பஞ்சாயத்து யூனியனுக்கு ஆயிரம் ரூபாய்வரை லாபம் கிடைக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

### வாழ்வில் முன்னேற்றம்

அது மட்டுமல்ல. இங்குள்ள தொழிலாளர்களின் வாழ்க்கை நிலையும் படிப்படியாக உயர்ந்து வருகிறது. நாள் ஒன்றுக்கு முக்கால் ரூபாய் அளவே ஊதியம் பெற்று வந்த தொழிலாளி, இன்று நாள் ஒன்றுக்கு இரண்டு ரூபாய் ஊதியம் பெறுகிறார். உதாரணத்துக்கு, சுந்தர நாடார் என்பவரை எடுத்துக்கொள்ளலாம். இவர் கட்டில்கள் செய்யும் தொழிலாளி, அது மட்டுமல்ல, பிளாஸ்டிக் ஒயர்களைக் கொண்டு, கூடைநாற்காலிகளும் பின்னுவார். அந்தத் துறையில் இவருக்குப் பயிற்சி கொடுத்தது, இந்தத் தொழிற் கூடம் தான். ஏழெட்டு மாதங்களுக்கு முன்பு, இவருடைய தொழிலால் இவருக்குக் கிடைத்த வருமானம் மாதத்திற்கு ஐம்பது ரூபாய் தான், ஆனால் தற்போது இந்த ஏழு மாத காலமாக நாள் ஒன்றுக்கு மூன்றரை ரூபாய் சம்பாதிக்கிறார். அதாவது, இத்தொழிற் கூடமானது, இவரது தொழில் திறமைக்கு வாய்ப்பளிப்பதோடு, அதற்குரிய ஊதியமும் கொடுக்கிறது. இவருக்கு, பிளாஸ்டிக் நாடாவில் கூடை நாற்காலி பின்னும் கலையில் பயிற்சி கொடுத்து, அவரது வாழ்க்கைத் தரத்தை உயர்த்திய பெருமை இத்தொழில் கூடத்தையும், அதற்காகச் சலியாது உழைக்கும் அலுவலர்களையும் சாரும் என்பது மறுக்க முடியாத உண்மை.

தொழில் வளர்ச்சிக்கு அடிப்படைத் தேவைகள் இரண்டு. அதாவது நீடித்த முயற்சியும் தொழிலாளர்களின் ஊக்கமும் முக்கியம். அந்த இரண்டும் இந்த தொழிற் கூடத்திற்கு நிரம்ப உண்டு. ஆலங்குளம் வட்டார வளர்ச்சி அதிகாரி, தொழில் விஸ்தரிப்பு அதிகாரி ஆகியவர்களின் முயற்சியும் ஊக்கமும் இத்தொழில் கூடத்துக்குப் பக்கபலமாக விளங்குகின்றன. அலுவலர்களின் முயற்சியும் தொழில் ஆசிரியரின் வேலைத்திறனும், சக ஊழியர்களின் ஒத்துழைப்பும், மக்களின் ஆதரவும் இந்தத் தொழிற்கூடத்தைக் கட்டிக் காத்து வருகின்றன.

---

## செய்யவேண்டிய மாபெரும் பணி

"நாம் மாபெரும் காரியங்களைச் சாதிக்க வேண்டியிருக்கிறது. ஒவ்வொரு விதத்திலும்—உள்ளத்திலும் உணர்விலும்—நாம் பெரியவர்களாக இருந்தால்தான், இத்தகைய பெரிய காரியங்களை நிறைவேற்ற முடியும்."

—அமரர் நேருஜி

[ஆகஸ்ட் 15, பாரத நாட்டின் சுதந்திர வரலாற்றிலே பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய நன்னுள், "ஆனந்த சுதந்திரம் அடைந்துவிட்டோம்" என்று உரத்தக் குரலெடுத்து முழக்கமிடும் திருநாள். ஆனல், சுதந்திரத்தைப் பெற, இந்த நாட்டு மக்கள் புரிந்த தியாகங்கள் ஏராளம். உயிரைத் துச்சமென எண்ணி, அன்னையின் அடிமை விஜங்கொடிக்க, சுதந்திரப் பீடத்திலே தன் உடல், பொருள், ஆவி அனைத்தையும் அர்ப்பணித்த தியாகச் செம்மல்களிலே துடிப்புள்ள காளை, அஞ்சா நெஞ்சு படைத்த ட லேறு, வீரத்திருமகன் பகத்சிங் முன்னணியிலே நிற்கிருன். சுதந்திர தினமாகிய இன்று, நாட்டின் விடுதலைக்காக தூக்குக்கயிற்றை முத்தமிட்ட பகத்சிங், ராஜ்குரு, சுகதேவ் போன்ற வீரர்களின் திருநாமங்களுக்கு அஞ்சலி செலுத்துவோமாக!




## தியாகசீலர்கள் பகத்சிங்-ராஜகுரு-சுகதேவ்

(திரு சாமி-ஆறுமுகம், திருநெல்வேலி)

*1928*-ல் சைமன் கமிஷன் வருகையை எதிர்த்து நாடெங்கும் நடந்த ஆர்ப்பாட்டம் போல, பஞ்சாப் மாநிலத்தில் லாகூரிலும் பிரம்மாண்டமான ஊர்வலம் பொதுமக்களின் பெருந்தலைவன் பாஞ்சால சிங்கம் லாலா லஜபதிராய் தலைமையில் நடைபெற்றது. அந்த ஊர்வலத்தைக் கலைக்கும் பொருட்டு போலீசார் நடத்திய பலத்த தடியடி பிரயோகத்தால், வீரர் திருமகனர் லஜபதிராய் புடு காயமடைந்து, சில நாட்களில் உயிர்நீத்தார்.

### ஆவேசமும் ஆரவாரமும்

லஜபதியின் மரணம், மக்களின் மனதிலே ஆவேசத்தையும் வேதனையையும் உண்டாக்கியது. லாகூரில் தடியடி நடத்திய போலீஸ் அதிகாரி சாண்டர்ஸ் போலீஸ் தலைமைக்காரியாலயம் முன்பு சுட்டுக் கொல்லப்பட்டான் என்ற செய்தி ஜனங்களிடையே ஆரவாரத்துடனும் உற்சாகத்துடனும் வரவேற்கப் பட்டது. 1928 டிசம்பர் கல்கத்தா காங்கிரஸ் கூட்டத்திற்குப் பின், டெல்லி சட்டசபையில் தொழிற் தகராறு மசோதா நிறைவேறியபோது, அரசு அங்கத்தினர் அமர்ந்திருந்த வரிசையில் வெடிகுண்டுகள் வெடித்தன. அங்கே பகத்சிங் கைதானர்.


### சிறையிலும் சீற்றம்

பாஞ்சால மண் ரத்தக்கறை படிந்தது. பகத்சிங் சுதந்திரப் போராட்டத்தின் சிறப்பானதொரு கட்டத்தில் தேச மக்களின் கவனத்தைக் கவர்ந்த மாவீரர். கைதான பகத்சிங் ஆயுள் தண்டனை பெற்றார். அங்கு அவர் "எல்லாம் முடிந்துவிட்டது என்ற எண்ணம் அறவே அகலவேண்டும்" என்று முழங்கினர். சிறையிலும் போராட்டம் துவங்கிற்று. எல்லா அரசியல் கைதிகளுக்கும் ஒரே வகுப்பும், நல்ல உணவும், பத்திரிகை, புத்தக வசதிகளும் வழங்கவேண்டும் என்ற கோரிக்கை வலுப்பெற்றது, அதனடிப்படையில், பகத்சிங் சிறையில் உண்ணுவிரதம் இருந்தார். அலட்சியமாகவிருந்த அரசு, சிலநாட்களில் உண்ணுவிரத வேகத்துக்கு அஞ்சிற்று. பகத்சிங்கோடு பலரும் உண்ணுவிரதம் இருந்தனர். இதை நிறுத்த அவர்கள் தனித்தனி அறையிலே வைக்கப்பட்டு அவர்களுக்குப் பலவந்தமாக உணவு ஊட்டும் முயற்சி நடைபெற்றது. பலவந்தமாக ரப்பர் குழாய் மூலம் உணவு ஊட்டுகையில் தவறு நேர்ந்தது. பிரக்ஞையற்று சில நாட்களில் இன்னுயிரையும் இழந்தார் தீரர் ஜதீன்தாஸ். அவருடைய வீரமரணத்தின் விளைவாக, போராட்டம் மிக


பகத்சிங்

கடுமையாக அனுஷ்டிக்கப்பட்டது. மக்களிடையே அரசைப்பற்றிய வெறுப்புணர்வு வளர்ந்தது. உண்ணுவிரதம் நடைபெற்றுக் கொண்டிருக்கையிலேயே பகத்சிங் லாகூர் சதிவழக்கில் இணைக்கப் பட்டு, நீதி மன்றத்திற்கு தூக்கிக்கொண்டு வரப் பட்டார். அங்கு சாண்டர்ஸ் என்ற அதிகாரியைச் சுட்டுக் கொன்றபோது ஸ்தலத்தில் இருந்த பார்ன் என்பவன் பகத்சிங்கை அடையாளம் காட்ட இல்லாததால், வழக்கை மேற்கொண்டு நடத்த இயல

வில்லை. மேற்கொண்டு வழக்கை நடத்த லாகூர் சதிவழக்கு சட்டத்தின் அடிப்படையில் தனி நீதி மன்றம் அமைக்கப்பட்டது. இங்கு குற்றம் சாட்டப் பெற்றவர்களும் வழக்கறிஞர்களும் சாட்சிகளும் இருக்க வேண்டிய அவசியமில்லாமலேயே விசாரணை நடக்கும் கொடுமையோடு, தீர்ப்பை எதிர்த்து அப்பீல் செய்யும் உரிமையும் இல்லாதிருந்தது, கொடுமைக்கெல்லாம் கொடுமையாய் நியாயமற்ற தாய் இருந்தது.



ராஜ்குரு

நீதி மன்றத்தில் போராட்டம்

முறையற்ற தன்மைக்கு முடிவு காண இந்த விசேஷ நீதிமன்றத்தில் பகத்சிங்கும், அவருடையசகாக்களும் எழுப்பிய சுதந்திர கோஷங்களும், பணியாது இருந்த நெஞ்சுரமும் மக்களைப் பெரிதும் கவர்ந்தன. ஆக்கிரோஷம் கொண்ட போலீசாரின் குண்டாந் தடிகள், வக்கீல்கள், பார்வையாளர் முன்னிலையில், பகத்சிங்கைத் தாக்கின. இதுபற்றி, இந்தக் கொடு மையைச் செய்ய சட்டத்திலும் இடமில்லை என் றுரைக்க வாய்ப்பில்லாமல், இருந்த ஒரே இந்திய நீதிபதியும் நீக்கப்பட்டு திருத்தியமைக்கப்பட்ட நீதி மன்றத்தில் மேற்கொண்டு பலநாட்கள் விசாரணை நடந்தது. பின் தீர்ப்பு வெளியானது. பகத்சிங்குக்கும் அவரது சகாக்களாகிய ராஜகுரு, சுகதேவ் ஆகியோருக்கும் தூக்குதண்டனை விதிக் கப்பட்டது. தூக்குத்தண்டனைக்குப் பதில் தீவாந்திர தண்டனையாவது கொடுங்கள் என்ற மக்களின் எழுச்சியும் போராட்டமும் காந்தி இர்வின் ஒப்பந் தத்தால் நிராசையானது. முடிவில் 1931 ஏப்ரலில் 24 வயது நிரம்பிய பகத்சிங் அவருடன் அவரது சகாக்களான இருவரும் தூக்கில் இடப்பட்டனர். சுதந்திர அக்கினியைப்பரப்பிய தீம்பிழம்பு அமிழ்ந் தது.

தம்பிக்கு கடிதம்

தூக்கிலிடப்படுவதற்கு முன் கடைசியாக தன் தம்பிக்கு ஒரு கடிதம் எழுதினர். ''எனதருமை குல்தார்: மன உறுதியுடன் படித்துவா. உனது சுகத்தைக் கவனித்துக்கொள். மனம் தடுமாருதே. நான் அதிக மாக என்ன சொல்வேன்? இந்த பாட்டைக்கேள்;

''விதியை நோவதில் பயனில்லை
உலகமெல்லாம் நம்மை யெதிர்த்து
நின்றபோதிலும் தீமையில்லை
விதியுடன் போராடுவோம் வா''

நண்பர்களுக்கும் மக்களுக்கும் விடுத்த செய்தியில்,

நண்பர்களே,

''எனது வாழ்நாள் மணிக்கணக்கில் இருக்கிறது. சூரி யோதயம் (சுயராஜ்யம்) வந்தவுடன் ஆடி அணைந்துவிடும் விடியற்கால விளக்கு போல நான் இருக்கிறேன்.

எங்களது நோக்கமும் ஆவேசமும் உலகத்திலே மின் சாரம் போல பரவி எழுச்சி விளைவிக்கும். இந்தக் கைப் பிடி மண் அழிந்துபோனுலென்ன? போய் வருகிறேன். அருமைத் தேசத்திரே, நீங்கள் சிறந்தோங்குவீர்களாக. நாங்கள் நீண்ட யாத்திரை செல்கிறோம், துணிவு கொண்டிருங்கள். நமஸ்தே.

உங்கள் வாஞ்சையுள்ள,

பகத்சிங்.

வீரர் பரம்பரையில் ஒரு தீரன்

பகத்சிங், போராட்ட வீரர்களைக் கவர்ந்த, சுதந் திர தாகம் கொண்ட தேசாபிமானிகளைக் கவர்ந்த வீரன். அவன் காட்டிய வழியிலேயே சோகக்கடலை யும் துச்சமாக கடக்கும் அநேகர் தோன்றியுள்ளனர். பஞ்சாப் கவர்னரைச் சுட்டதாக குற்றஞ் சாட்டப் பட்டு தூக்குத்தண்டனை பெற்ற ஹரிகிருஷ்ணன் சிறையிலேயே கடைசியாக சந்தித்த உறவினரிடமும் சகாக்களிடமும் தனது கடைசியாசையாகத் தெரி வித்தது இதுதான், 'எந்த இடத்தில் பகத்சிங்கும் அவரது சகாக்களும் தூக்கு தண்டனைக்குப் பிறகு அவர்களது உடல்கள் எறியப்பட்டனவோ அதே இடத்தில் அதே ஸட்லஸ் நதியில் தனது உடலும் எறியப்பட வேண்டு'மென்பதேயாகும்.

மகாத்மா போற்றிய மாமணி

''சாந்தம், பொறுமை, அன்பு அஹிம்சை இவற்றை அடிப்படையாகக்கொண்ட தீரத்தை நான் போற்றுகிறேன். ஆனலும் பகத்சிங்கின் தீரம் தியாகம் இவற்றின் முன்னர் ஒவ்வொரு வரின் தலையும் வணக்கம் செய்கின்றது,'' என்று



சுகதேவ்

காந்தியின் மணிக்கரம் அன்று எழுதியது. இவ் வாறு போராட்ட வீரர்களின், தேசாபிமானிகளின் மக்களின், தேசப்பிதாவின் அபரிதமான அன்பைப் பெற்ற விடுதலை வீரன் பகத்சிங் வீரத்தின் விளை நிலம், சுதந்திரக்கனல்: இந்த நாட்டின் மங்காத ஒளிவிளக்கு; தாயகம் அளித்த ஒப்பற்ற வீரத் திருமகன்.

# கிராமத் தோட்டங்களும் ஊட்ட உணவுத் திட்டமும்

(திரு கே. கே. நடராசன், பி.எஸ்சி (விவ) டி.எச். பஞ்சாயத்து யூனியன் கமிஷனர், பவானிசாகர்)

நாட்டிற்கு நலம் தரும் திட்டங்கள் பல திட்டப்பட்டு செயல்பட்டு வருகின்றன. அவ்வகையில் கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு மேலாகச் செயல்பட்டு வரும் ஊட்டமளிக்கும் உணவுத் திட்டம் (Applied Nutrition Programme) நம் மாகாணத்தில் கிராமிய விஸ்தரிப்பு நிலையங்களுக்கு அருகாமையிலுள்ள பஞ்சாயத்து யூனியன்களில் செயல்பட்டு வருகிறது. இத் திட்டத்தில் முக்கிய அம்சமான காய்கறி, பழங்கள், பருப்பு வகைகள் உற்பத்தி செய்வதில், ஒவ்வொரு பஞ்சாயத்தும் பங்கு கொள்கின்றன. பஞ்சாயத்துக்கான கிராமத் தோட்டங்கள் அமைக்கப்பட்டு, பஞ்சாயத்துக்கள் அத் தோட்டங்களைப் பராமரித்து வருகின்றன.

பஞ்சாயத்துக்களிலுள்ள கர்ப்பிணிகள், தாய்மார்கள். ஐந்து வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு இத் தோட்டங்களிலிருந்து கிடைக்கும் காய்கறி, பழங்கள், பருப்பு வகைகள், நிலக்கடலை ஆகியவை இனமாக விநியோகிக்கப்படுகின்றன.

ஒவ்வொரு பஞ்சாயத்திலும் மூன்று ஏக்கருக்கு குறைவில்லாமல் நிலம் இதற்காக எடுத்துக் கொள்ளப்படுகிறது. அந்நிலத்தை சமப்படுத்தி, வேலி அமைத்து நிலத்தில் மட்டத்திற்கு தகுந்தாற்போல் வரப்புகள் போட்டு, பகுதிகளாகப் பிரிக்கப்படுகின்றன. (சர்க்காரால் இதற்கு மான்யம் ரூ. 300 தரப்படுகிறது. இத் தொகையுடன் கிராமத் தொண்டர் படையின் உதவியால் நிலம் சீர்படுத்தும் வேலை பஞ்சாயத்துக்களில் நடக்கப்படுகின்றது.) பஞ்சாயத்தில் ஒருவரை நியமித்து வேலையைக் கவனித்துவர ரூ. 500 ஒரு வருடத்திற்கு மானியம் தரப்படுகிறது.

இந்நிலத்தில் மாநில அரசினரின் மான்யத்தால் கிணறு வெட்டப்பட்டு, யூனிசெப் (UNICEF) ஸ்தாபனத்தின் உதவியால், நீர் இறைப்பதற்கு பம்ப் செட் வைத்துக் கொடுக்கப்படுகிறது.

### தோட்டத்தில் சாகுபடி செய்யும் பயிர்கள்

#### காய்கறிகள்

பருவத்தில் பயிர் செய்யக் கூடிய காய்கறி வகைகள், தக்காளி, வெண்டை, கீரை, முள்ளங்கி, கொத்தவரை. பரங்கி, பூசணி, புடல். பாகல், பீர்க்கு, அவரை மற்றும் குளிர் மாதங்களில், முட்டைக்கோஸ். நூல்கோல், கேரட், பீட்ருட். பீன்ஸ் ஆகியவை. கூடியவரை தக்காளி கீரை, கத்தரி. முள்ளங்கி, வெண்டை, கொத்தவரை போன்ற காய்கறிகள் தொடர்ந்து கிடைக்க ஒரு குறிப்பிட்ட நிலப் பரம்பு எடுத்துக்கொள்ளப்பட்டு அதில் பயிர் அறுவடைக்கு வருமுன் வேறு ஒரு பகுதியில் அறுவடைக்கு அடுத்து வரும்படி நாற்று அல்லது விதைகள் விதைக்கப்பட்டு தயாராகவும், மறுபடியும் இன்னொரு பகுதியில் நட நாற்று விட்டு நாற்றங்கால் தயாராகவும் வைத்துக்கொள்ளப்பட்டு தொடர்ந்து காய்கறிகள் இருக்கும்படியாக கவனித்துக் கொள்ளப்படுகிறது. ஆடிப் பட்டத்தில் கொடிவகைக் காய்களும் குளிர் மாதங்களில் (கார்த்திகை. மார்கழி) முட்டைக்கோஸ், நூல்கோல், கேரட், பீட்ருட், பீன்ஸ் வகைகளும் பயிர் செய்யப்படுகின்றன.

#### பழங்கள்

தோட்டத்தில் குறைந்தது அரை ஏக்கர் அளவில் விரைவில் பலன் தருவதும் நல்ல சத்துள்ளதுமான வாழை, பப்பாளி பயிர் செய்யப்படுகின்றன. மற்ற பழச் செடிகளான கொய்யா. சப்போட்டா போன்றவை சுற்றுப் புறங்களில் நடப்படுகின்றன. இத்துடன் இட வசதிக்கேற்ப திராட்சை, பேசன்புருட் போன்ற பழச் செடிகள் வளர்க்கப்படுகின்றன,

#### பருப்பு வகைகள்

காய்கறிகள் பயிர் செய்வதோடு, மாற்றுப் பயிராக நிலக்கடலை மற்றும் காராமணி துவரை, மொச்சை, கொள்ளு போன்ற பருப்பு வகைகள் பயிர் செய்யப்பட்டு அவைகளும் விநியோகிக்கப்படுகின்றன.

#### நிரந்தரக் காய்கறிகள்

வரப்பு ஓரமாக அகத்தி, முருங்கை, பசலை, கருவேப்பிலை ஆகியவை பயிர் செய்யப்பட்டு இவைகளில் கீரை, காய்கள் விநியோகிக்கப்படுகின்றன.

#### தீவனப்பயிர்

கினியாப்புல், குதிரை மசால் ஆகியவை சுமார் 20 செண்டுக்கு

குறைவில்லாமல் பயிர் செய்யப் படுகின்றன. கிராமத்திலுள்ள கறவை மாடுகள் நல்ல பலன் தரச் செய்ய வேண்டியதற்காக இவை பயிர் செய்யப்படுகிறது! இப்புல் கறவை மாடுகளுக்குக் குறைந்த விலையில் விநியோகிக் கப்படுவதுடன் விவசாயிகள் இந்த தீவனப்பயிர்களை விளைவிக்க ஊக்குவிக்கிறது.

சத்துள்ள உணவு

பெருகிவரும் மக்கள் தொகையைச் சமாளிக்க நாம் செய்ய வேண்டிய முதல் காரியம் நம் உணவு உற்பத்தியை அதிகப் படுத்தவேயாகும். உணவு உயிர் வாழ அவசியமான போதிலும், ஆரோக்கியமாக இருக்க சத்துள்ள அல்லது சரிசமமான உணவு உட்கொள்ளுதல் அவசியம். அவ்வகையில் நாம் உண்ணும் அரிசி அல்லது தானிய உணவோடு காய்கறி, கீரை, பருப்பு, பழங்கள், முட்டை அல்லது மாமிசம், பால் ஆகியவைகள் சேரவேண்டும். இவை நமக்கு நல்ல ஆரோக்கியத்தை தருவதோடு, அரிசி அல்லது தானியம் உட்கொள்வது குறைக்கப் பட்டு, நாம் காணும் உணவு பற்றுக்குறையையும் குறைக்கிறது. ஆகவே, காய்கறி பழங்கள் உற்பத்தியை அதிகப்படுத்துதல் மிகவும் அவசியம். இத்திட்டத்தின்கீழ் பள்ளித் தோட்டம் அமைக்கப்பட்டு, பராமரிக்கப் பட்டு வருவதால், பள்ளி மாணவர்களும் சிறு வயதிலேயே தோட்டம் அமைப்பது. காய்கறி பழங்கள் பயிர் செய்வதை அரிய வாய்ப்பு ஏற்படுகிறது. அத்துடன் கிராம மக்கள் இடவசதிக் கேற்ப அவர்களது வீட்டுத் தோட்டங்கள் போடவும் ஏற்பாடு செய்யப்படுகிறது. இவை எல்லாவற்றிற்கும் கிராமத் தோட்டம் ஒரு மாதிரி தோட்டமாக விளங்குகிறது.

இத்துடன் இத்தோட்டங்களில் பயிராகும் பயிர் வகைகள் விவசாயிகளால் கவனிக்கப்பட்டு வருவதால், காய்கறி பழங்கள் மற்றும் தீவனப் பயிர்களைப் பயிர் செய்வதில் அவர்கள் ஆர்வம் எடுத்துக்கொள்கிறார்கள்.

பவானிசாகர் பஞ்சாயத்து யூனியனில் குறிப்பாக சில பஞ்சாயத்துகளில் (இராஜன் நகர், கொத்தமங்கலம், கெம்பநாயக்கன் பாளையம், குதியாலத்தூர் ஆகிய பஞ்சாயத்துகளில்) நல்ல முறையில் தோட்டங்கள் அமைத்து சாகுபடி செய்து வருவதை விவசாயிகள் கவனிப்பதால், பப்பாளி, தக்காளி கீரை, கினியா புல், குதிரைமசால் இவைகளைத் தனிப்பட்டோர் பூமியில் சாகுபடி செய்ய ஆர்வம் காட்டுகிறார்கள்.

ஆகவே உணவுப் பற்றுக் குறையை எளிதில் சமாளிக்கவும், சத்துள்ள உணவு மக்களுக்கு கிடைக்கவும் விவசாயப் பெருமக்கள் கூடிய அளவில் காய்கறி, பழங்களை அதிக உற்பத்தி செய்வதால் நல்ல லாபமடைவதுடன் நாட்டுக்கு ஒரு சிறந்த பணியையும் செய்கிறார்கள்,

அத்துடன், கறவை மாடுகள் நன்கு பராமரிக்கப்பட்டு நல்ல பலனைத் தர தனியார் தோட்டங்களில் கிணற்றுக்கு அருகாமையில் குதிரைமசால், கினியாபுல் போன்ற தீவனப் பயிர்களை வளர்த்து நல்ல முறையில் கால்நடைகளைப் பராமரிக்கலாம். மேலும் குதிரைமசால் செடியானது, கோழிகளுக்கும் ஒரு சிறந்த தீனியாகும்.

எனவே, ஊட்ட உணவுத் திட்டத்தில் கிராமத் தோட்டங்கள் அமைப்பது உணவு உற்பத்தி பெருக்கத்துக்கு ஒரு சிறந்த வழி காட்டியாக இருப்பதுடன், சிறந்த உணவுப் பொருட்களை உட்கொள்வதின் மூலம் மக்கள் அப்பயிர்களை உற்பத்தி செய்வதில் ஆர்வம் காட்டவும் வழி செய்கிறது.

## கிராமப் பஞ்சாயத்துக்களின் மின்சாரக் கட்டணம்

### நடைமுறைச் சிக்கல்கள் தீர்ந்தன

கிராம பஞ்சாயத்து நிர்வாகத்தில் ஏற்படும் நடைமுறைச் சிக்கல்கள்பற்றி பஞ்சாயத்துத் தலைவர்கள் சமீப காலமாக சில விஷயங்களை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவந்துள்ளனர். பஞ்சாயத்து சம்பந்தமான செலவில் ரூபாய் 30-க்கு மேற்பட்ட தொகையை, அதற்கென விதிக்கப் பட்ட முறைப்படி, செலுத்த வேண்டும் என்று விதிகள் இருந்தன. குறிப்பாக, மின்சாரக் கட்டணம் செலுத்துவதில், இந்த விதி முறைகளின்படி, அதிக சிக்கல்கள் ஏற்பட்டன. பஞ்சாயத்துத் தலைவர்கள் அனுப்பிய நிதி உத்தரவுகளை, (Pay Orders) மின்சார போர்டார் ஏற்றுக் கொள்ள இயலாமல் இருந்தது. இதனால், பல இடங்களில், மின்சாரசப்ளை நிறுத்தப்பட்டு, கிராமவாசிகளுக்கு அசௌகரியம் ஏற்பட்டதாகத் தெரிந்தது.

அரசாங்கம், இந்த விஷயங்களை எல்லாம் ஆராய்ந்து பார்த்து, மின்சார போர்டாருடன் கலந்தாலோசித்து, நடைமுறை விதிகளைத் தக்க முறையில் இப்போது மாற்றியமைத்துள்ளது. அதன்படி ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனிலும் உள்ள எல்லா கிராமப் பஞ்சாயத்துக்களுக்கு வழங்கப்படும் மின்சாரத்திற்கான கட்டணத் தொகை இவ்வளவு என்பதைக் குறிப்பிட்டு, அந்தந்த பஞ்சாயத்து யூனியன் கமிஷனர்களுக்கு, அனுப்பி வைக்குமாறு, தமிழ்நாடு மின்சார போர்டைச் சேர்ந்த அதிகாரிகளுக்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. மின்சாரக் கட்டணத்திற்கான தொகையை, பஞ்சாயத்து யூனியன் கமிஷனர், இதற்கென குறிப்பிட்டுள்ள கணக்கில், "செக்" மூலமாக, மின்சார போர்டுக்கு தக்க விதிமுறைப்படி, அனுப்பிவைப்பார். இவ்வாறு செய்த பின்பு, அவர், கிராமப் பஞ்சாயத்துத் தலைவரிடமிருந்து, அந்தந்த பஞ்சாயத்துமின்சாரக் கட்டணத் தொகையை (நிதி உத்தரவு) மூலம் பெற்றுக் கொண்டு, கணக்கை ஏற்ற முறையில் சரி செய்து கொள்வார்.

கிராம நல, தல நிர்வாகத் துறையில் 1965-ம் ஆண்டு ஜூலை மாதம் 12-ம் தேதி வெளியான 1563-ம் எண்ணுள்ள அரசாங்க ஆணையில், இதைப்பற்றிய விளக்கத்தைக் காணலாம். பஞ்சாயத்துத் தலைவர்கள் எடுத்துக் காட்டிய பல நடைமுறைச் சிக்கல்கள் இந்த உத்தரவின் மூலம் நீங்க வழி பிறக்கும். அநேகப் பஞ்சாயத்துத் தலைவர்கள், இந்த உத்தரவைப் பெரிதும் வரவேற்று, மகிழ்ச்சி தெரிவித்துள்ளனர். கிராமப் பஞ்சாயத்துக்கள் மின்சாரக் கட்டணம் செலுத்துவது விஷயமாக இனிமேல் எந்தவிதக் கஷ்டமும் இருக்காது என்பது உறுதி.

# இவள் அல்லவோ பெண்!

கெஞ்சம்மா, இருபது வயதை எட்டாத இளம் பெண். ஆனால், வயதான ஓர் ஆணுக்கு இருக்கக் கூடிய உள்ள உறுதியைப் பெற்றிருக்கிறாள். தன் தகுதியின் காரணமாக, தான் வாழும் மக்களிடையே அவள், ஒரு வீராங்கனையாகத் திகழ்கிறாள்.

மைசூர் மாநிலம், குடகு மாவட்டம், சோம்வார்பெட் அபிவிருத்தி வட்டாரத்தைச் சேர்ந்த ஒரு சிறிய, முற்போக்குக் கிராமம் தொட்டடொளூர். குடகுக்கே இயல்பான அந்தப் பச்சப்பசேலென்ற காடுகளுக்கிடையே அமைந்திருக்கிறது இந்த வளப்புமிக்க கிராமம்.

வட்டாரத் தலைமையிடம் உள்ள சோம்வார் பெட்டிலிருந்து, தொட்டடொளூருக்குச் செல்லும் பாதையில் சுமார் 7 மைல் தூரத்தில், பசுமையான நெல் வயல்களும், வாழை மற்றும் பல காய்கறித்தோட்டங்களும் சூழ்ந்த - குடகின் இயற்கை எழில் பிரதிபலிக்கும் சூழ்நிலையில் - சின்னஞ்சிறு கிராமம் ஒன்று இருக்கிறது. கெஞ்சம்மாவின் ஊர் அதுதான்!

### பேச்சைச் சுருக்கு—செயலைப் பெருக்கு

"பேச்சைச் சுருக்கு! செயலைப் பெருக்கு" என்பதுதான் கெஞ்சம்மாவின் கொள்கை, வழி காட்டும் நெறி. அந்த நெறியினைச் சிறிதும் பிறழாது கடைப்பிடிக்கிறாள். அவளது தந்தை ஒரு சாதாரண விவசாயி. அவருக்கு இருப்பது ஐந்து ஏக்கர் நிலந்தான். குடும்பத்திற்கு அவர் தலைவராக இருப்பினும், தம் இல்லத்தின் ஒளி விளக்கு தம் மகள் கெஞ்சம்மா தான் என்று பெருமையுடன் குறிப்பிடுகிறார். ஏனெனில், அவள் தம் பெற்றோரின் சுமையைக் குறைத்து, குடும்பத்தை நடத்தும் முழுப் பொறுப்பையும் கெஞ்சம்மா ஏற்றிருக்கிறாள். ஆனால் அவள் குடும்பத்தின் மூத்த பெண் அல்ல - பையன்களும் பெண்களுமாக 10 பேர் உள்ளனர். அவ்வரிசையில் அவள் இரண்டாவது தான்.

இந்த இளம் வயதிலேயே கெஞ்சம்மா, தம் பெற்றோர்களின் கஷ்டங்களை உணர்ந்து, அவர்களுக்கு எல்லா வகைகளிலும் உதவி செய்கிறாள். உழைப்பதில் சலிப்பு கிடையாது என்பது மட்டுமல்ல, அதில் அவளுக்கு ஒரு தனி ஆர்வமே இருக்கிறது. தம் வீட்டார் நலனுக்கு மட்டுமல்லாமல், அண்டை அயலில் உள்ளவர்களும் நன்மையடைவதற்காக அவள் அயராது பாடுபடுகிறாள், உழைப்பு! உழைப்பு! அதுவே அவளுக்குப் பிரதானம், அதுவே அவள் வணங்கும் தெய்வம், அவள் ஒரு தனிப்பிறவி.

### துடிப்புக்கு ஏற்ற வாய்ப்பு

இளமைத்துடிப்போடு உள்ள கெஞ்சம்மா எப்போதும் ஏதாவதொன்று செய்தபடி 'துருதுரு' வென்று இருக்கிறாள். புதிய விஷயங்களைக் கற்றுணர்வதில் அடங்கா ஆர்வம் அவளுக்குண்டு. எனவே அவளது கிராமம், சமுதாய அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் வந்தபோது அவள் இயல்புக்கு ஏற்ற புதிய வாய்ப்புக்கள் அவளை நாடி வந்தன. கிராம வளர்ச்சித்திட்ட வேலைகள் அவளுக்குப் புதிய உற்சாகத்தைத் தந்தன.

இந்த உருவான, பயனுள்ள பணிகளில் தன்னை ஈடுபடுத்திக்கொள்ள முதல் வாய்ப்பாக, கெஞ்சம்மா, கிராம மாதர் சங்கத்தில் உறுப்பினராகச் சேர்ந்தாள். பிறகு, வட்டார அதிகாரிகள் ஏற்பாடு செய்த கிராம சகாயக்குகள் பயிற்சி முகாமிலும் அவள் பங்குகொண்டாள், அங்கு அவளுக்குக் கிடைத்த பயிற்சி, அவளது வாழ்வில் ஒரு புதிய அத்தியாயத்தையே தோற்றுவித்தது. முகாமில் தாம் கற்றறிந்த அனைத்தையும் செயல் முறையில் கொண்டுவருவதென அவள் உறுதி பூண்டாள்.

### கண்ணைப்பறிக்கும் காய்கறித் தோட்டம்

வட்டாரத்தில், சத்துணவுத்திட்டம் கொண்டு வரப்பட்ட போது, அதுபற்றிய எல்லாத் தகவல்களையும் கேட்டறிந்து, அதற்கேற்ற வேலைகளைத் தன்னுடைய நிலத்திலேயே மேற்கொள்ள முடிவு செய்தாள், கெஞ்சம்மா. அதன் விளைவு, இன்று

அவளது வீட்டிற்கருகில் உருவாகியுள்ள பசுமை செறிந்த காய்கறித் தோட்டம். அவ்வழியே செல்லும் எவர் கண்ணேயும் பறிக்கும். தக்காளி. கத்தரி, முட்டைகோஸ், காரட், பீன்ஸ், இவ்வாறு எல்லாவிதமான காய்கறிகளும் அங்கு பயிராகின்றன

நிலத்தில் வேலே செய்யும் தந்தைக்கு உதவி செய்ய, கெஞ்சம்மா தவறுவதில்லே. கலப்பை, மண்வெட்டியுடன் தந்தை கழனிப்பக்கம் சென்ருல் போதும், உடன் கெஞ்சம்மா தன் சகோதர சகோதரிகளே அழைத்துக்கொண்டு போய் நிலத்தில் நாற்று நடுவது, களே பறிப்பது, தண்ணீர் பாய்ச்சுவதுபோன்ற வேலேகளில் தந்தைக்கு உதவி செய்வாள். இப்படி, நிலத்தில் எந்நேரமும் ஏதாவது வேலே செய்து கொண்டிருப்பாள். அங்கு வேலே யில்லே என்ருல், அந்த ஒய்வு நேரத்தையும் வீணுக்குவதில்லே. கிராமத்திலுள்ள மாதர்களுக்கு, வீட்டுத் தோட்டம் போடுவது, புகையில்லா அடுப்பு அமைப்பது அல்லது பின்னல் வேலே செய்வது ஆகியவற்றில் துணேபுரியவோ, சொல் லித்தரவோ செய்வாள்.

## தூய்மை துலங்கும் இல்லம்

கெஞ்சம்மாவின் வீடு சிமெண்டு - காங்கிரீட்டி லான நவநாகரீக வீடு அல்ல. மண் சுவரும் அதற்கு மேல் ஓடு வேய்ந்த கூரையும் அமைந்த சாதாரண வீடு தான். ஆனல் அங்கு துலங்கும் தூய்மையை, நேரில் கண்டு ரசிக்க வேண்டும். எல்லாப் பொருட்களும் சீராக, செம்மையாக வைக்கப்பட்டிருக்கின்றன. தெருப் புழுதியில் விளேயாடும் பருவமுள்ள சிறு குழந்தைகள் கூட அத்துணே சுத்தமாக உள்ளன. கெஞ்சம்மாவின் பள்ளிப்படிப்பு குறைவுதான் - ஐந்தாம் வகுப்புக்கு மேல் படிக்க முடியாமற் போய்விட்டது. ஆனல் அவள், தனது சகோதர, சகோதரிகளே எல்லாம் பள்ளிக்கு அனுப்புகிருள். கூடுமானவரை அதிகக் கல்வியை அவர்களுக்கு அளிப்பதில் கெஞ்சம்மா உறுதி கொண்டுள்ளாள்.

உள்ளூர் மாதர் சங்க அலுவல்களில் கெஞ்சம்மா தீவிர பங்கு கொள்கிருள். இந்தியாவில் உள்ள, பெண் ஊழியர்கள் பயிற்சி நிலேயத்தில் 15 நாள் பயிற்சி ஒன்றையும் அவள் பெற்றிருக்கிருள். அது மட்டுமல்ல, வட்டார அதிகாரிகளால் நடத்தப்பெறும் பயிற்சி முகாம்கள், கருத்தரங்குகள், கூட்டங்கள் ஆகிய அனைத்திலும் அநேகமாகப் பங்கு கொள்கிருள்.

## இளம் விவசாயி போட்டியில் முதல் தகுதி

கலவை எருக்குழிகள் அமைப்பதில் பயிற்சி பெற்ற கெஞ்சம்மா, ஐந்தாறு எருக்குழிகளே விஞ்ஞான முறைகளின்படி தயாரித்திரிக்கிருள். இவ்வகையில் அதிக எரு தயாரித்ததற்காக அவளுக்குப் பரிசுகளும் கிடைத்தன. பொறுக்கு விதை உற்பத்தியாளராகப் பதிவு செய்து கொண்டுள்ள அவள், வட்டார அளவில் நடைபெற்ற இளம் விவசாயிகள் அணிவகுப்பில் விவசாய அறிவுப்போட்டியில் முதல் தகுதி பெற்ருள்.

குடகு பகுதியில், மண் அரிப்பு என்பது விவசாயத்திற்குள்ள ஒரு நிரந்தர கேடு. இங்கு விவசாயிகளுக்கு, ஏக்கர் ஒன்றுக்கு 8 குவிண்டால் நெல், மாசூல் கிடைப்பதே கடினம். ஆனல் கெஞ்சம்மா, தம் சொந்த முயற்சி, கடும் உழைப் பின் மூலம், 12 குண்டால் மாசூல் காண முடிந்தது. அடுத்த அறுவடையில் இன்னும் அதிக மாசூல் பெற முடியும் என அவள் நம்புகிருள்.

அவளது கிராமத்தின் வரலாற்றிலேயே, முதன் முறையாக, கெஞ்சம்மா தன் நிலங்களில் சி–145 என்ற நெல் ரகத்தை, ஜப்பானிய முறையில், சாகுபடி செய்கிருள். அதேபோல், இந்தப் பகுதியில் முதன் முறையாக வேர்க்கடலே பயிரிடவும் முயற்சி எடுத்துள்ளாள். அவள், தன் நிலங்களுக்குக் கலவை எருவும். அதோடு தழை உரம், ரசாயன உரம் ஆகியவற்றையும் உபயோகிக்கிருள். தாலூகா அளவில் 1963–64, 1964–65 ஆண்டுகளில் நடைபெற்ற கலவை எரு தயாரிப்பு போட்டிகளில், முறையே முதல் இரண்டாவது பரிசுகள் கெஞ்சம்மாவுக்குக் கிடைத்தன.

## தேன் வேண்டுமா ? இல்லே, பால் வேண்டுமா ?

சமுதாய அபிவிருத்தித் திட்டம் சம்பந்தமான இதர பணிகளிலும் கெஞ்சம்மா பின் தங்கவில்லே. அவள் கோழிப்பண்ணே நடத்துகிருள். நாட்டுக் கோழிகளோடு அதிக முட்டைகளிடும் ரகத்தைச் சேர்ந்த கோழிகளேயும் வட்டார அதிகாரிகளிட மிருந்து பெற்று. வளர்த்து வருகிருள். தேனீ வளர்ப்பையும் அவள் விடவில்லே. அதை ஒரு பொழுது போக்காகச் செய்யும் கெஞ்சம்மா, இரண்டு தேனீப் பெட்டிகளே வைத்திருக்கிருள். தன் வீட்டுக்குத் தேவையான அளவு தேன், அவளுக்குக் கிடைக்கிறது.

கெஞ்சம்மாவின் விருந்தோம்பும் இயல்பு. இந்த வட்டாரம் முழுவதும் பெயர் போனது. விருந்தினர் வந்து விட்டால், மகிழ்ச்சியால் அவள் முகம் மலரும். வீட்டுப் பசுவிடமிருந்து கறந்த சுத்தமான பால், தனது தேனீப்பெட்டிகளில் எடுத்த இனிய தேன், தன் தோட்டத்தில் விளேந்த பச்சைக் காய்கறி இவற்றைக்கொண்டு விருந்தினரை அவள் உபசரிக்கும் அந்தப் பாங்கே தனிச் சிறப்புடையது. இத்தனேக்கும் கெஞ்சம்மா அடக்கம், மரியாதை, எளிமையின் பெட்டகம் என்று சொல்லவேண்டும்.

## இலட்சியப் பெண்

இத்தகைய பெண்ணேப்பெற்ற தந்தை பெருமை கொள்வதில், வியப்பென்ன இருக்கிறது? புத்திசாலியான அவள் தன் தந்தையைக் கிராமக் கூட்டுறவுச் சங்கத்தில் உறுப்பினராக்கி விட்டாள்.

சுருங்கச் சொன்னல். கெஞ்சம்மா ஒரு லட்சிய கிராமப்புற பெண். பெற்ருேருக்கு லட்சிய மகள். சமுதாயத்திற்கு வழிகாட்டும் ஒரு வீராங்கனே!

# எல்லையில் நாம்

◁ திரு சோம. மகாதேவன் ▷

காட்சி 3

(கிராமத்தில் மருதப்பனின் வீடு—கையில் தடியோடு அலுப்பு மேலிட வீட்டிற்குள் நுழைந்து தலையில் கட்டியிருந்த துண்டை உதறி கட்டிலில் போட்டுவிட்டு உட்காருகிறான் மருதப்பன். உள் பக்கமாகத் திரும்பி 'முத்தம்மா' என்று கூப்பிடுகிறான்)



மருதப்பன்.—(தனி மொழியாக) அலுத்துச் செலுத்து வீட்டுக்குள்ளே நுழைஞ்சா.... இங்கே மூதேவிதான் குடி இருப்பா—சீதேவி இருக்கமாட்டா? இந்த விளங்கா மூஞ்சி கழுதையைக் கட்டிக்கிட்டு வருஷம் பூராவும் அழவேண்டியிருக்கு! விடிஞ்சு இவ்வளவு நேரமாகுதே இந்த தரித்திரம் பிடிச்ச பய மக அடுப்பு பத்த வச்சிருக்காளா?

(முத்தம்மாள் இடுப்பில் நீர் நிறைந்த குடத்தோடு வருகிறாள்.)

முத்தம்மாள்.—(வந்து கொண்டே) வீட்டிலே விறகா வாங்கி அடுக்கி வைச்சிருக்கே அடுப்பைப் பத்தவச்சு என் காலைத்தான் நீட்டணும்!

மரு.—நல்லா நீட்டு..என்னிக்கி இருந்தாலும் வேகவேண்டிய கட்டைதானே.

முத்.—(குடத்தை இறக்கி கீழே வைத்துவிட்டு) ஏன் சொல்லமாட்டே? கொஞ்சமாவது சூடு சொரணை இருந்தாத்தானே..படப்போகுது. நேத்துப்போயிட்டு இன்னிக்கு வந்து நிக்கிறயே ........உள்ள விவசாயத்தையும் போட்டுட்டு. எங்கே வெட்டி முறிக்கப்போயிருந்தே!

மரு.—என்னடி புள்ளே....இன்னிக்கி எடுத்த எடுப்பிலே மேலே போறே. நான் கோபமா வந்திருக்கேன், என்னமும் பேசினே முதுகு முக்காத்துட்டுப் பெருது ஆமா?

முத்.—(நாடியைத் தோள்பட்டையில் இடித்துக் கொண்டு) அதுக்குக் குறைச்சளில்லே ஆட்டுடா பூசாரின்னும். கையிலே தடியெடுத்துக்கிட்டு திரிஞ்சதுக்குத்தான் ஊரறிய அபராதம் வந்திருக்கு! இது நெஞ்சிலே உறைக்கலே! நல்ல பிறவியின்னு இந்த மட்டுக்காவது புத்தி வந்திருக்கணும்!

மரு.—இந்தா......முத்து.... நாக்கு நீளுது. நடந்தது தெரியாமா பேசாதே! அவனுக தொண்டர் படையிலே சேரச்சொன்னுங்க. நான் மாட்டேன்னு சொல்லிட்டேன். அதுக்காக இவ்வளவு தூரத்துக்கு இழுத்து வச்சு அபராதத்தை போட்டுட்டாங்க...... போடட்டும் இதுக்கெல்லாம் பழி வாங்காமலா விடப்போறேன்.... நீயும் பாக்கத்தானே போறே!

முத்.—விடிஞ்சா அடையிற வரைக்கும் ஐயனார் கோயிலிலே சீட்டாடிக்கிட்டிருக்கிறவங்களுக்கு தொண்டர் படையிலே சேர்றதுக்கு நேரமிருக்குமா? உன்னைத் தேடிச் பிடிச்சு எங்க கூட சேர்த்துக்கோன்னு கூப்பிட்டாங்களாக்கும் நீ தான் தேச பக்தியின்னு வீசை என்ன விலையின்னு கேட்பியே.

மரு.—ஆமா பட்டாளத்தான் பெத்த மக பாரு உங்கிட்டத்தான் தேசபக்தி வண்டிக்கணக்கிலே இருக்கு. நீகூட துப்பாக்கியைத் தூக்கிக்கிட்டு சைனாக்காரன்கூடச் சண்டைககுப் போயிடுவே....உங்க ஆத்தா தானுமில்லே புலியை சொலகிட்ட அடிச்சு விரட்டுனவ.

முத்.—(சீற்றத்தோடு) எங்கிட்ட பேசிகிட்டு இருக்கிறப்ப எதுக்கு எங்க அப்பனையும் ஆத்தாளையும் இழுக்கிறே. உனக்குப் போடுறதையெல்லாம் போட்டு அழுதிட்டுத்தானே எங்கப்பன் தனிமரமா உட்கார்ந்திருக்காரு! எல்லாத்தையும் சூதாடிப்போட்டு அவங்களைப் பேசுறதுக்கு வெட்கமா இல்லையா உனக்கு! நீயும் ஆம்பிள்ளையின்னு இன்னமும் மீசை வச்சுக்கிட்டுத்திரியறியே.

மரு.—அப்ப வெட்கப்பட்டு புடவையைக் கட்டிக் கட்டுமா? நல்லா வெள்ளிரிப் பழமாட்டமா இருந்துக்கிட்டு சொல்ரு பாரு. (எரிச்சலுடன்) வவுத்தைப் பசிக்கிறது—பழைய கஞ்சியாவது இருக்கிறதை ஊத்தி வை. வவுத்தை நனைச்சுக்கிறேன். பொழுதடையட்டும் யாரு ஆம்பிள்ளைன்னு பார்த்துக்கலாம்!

முத்.—இருந்தாத்தானே ஊத்தி வைக்கிறதுக்கு.... ....பொங்கித்தான் போடணும். வயிறுபசிச்சா நேத்து எங்கே சாப்பிட்டியோ......அங்கே போய் தின்னு.

மரு.—(குழைவுடன்) முத்தம்மா..

முத்.—கொஞ்ச நேரத்துக்கு முன்னுலேதான் கடிக்க வந்தே இப்ப குழையிறயே என்ன?

மரு.—(கொஞ்சலாக) தக்காளிப்பழம் போல உன்னுடை முஞ்சியைப் பார்த்தா என் கோவமும் பசியும் பறந்து போகுது!

முத்.—போகும் போகும்.

மரு.—நான் பொயய்யா சொல்றேன். துணிக் கடையிலே புடவை கட்டி நிறுத்தி இருக்கிற பொம்மையாட்டமா......தளதளன்னு........ உன்னைப் பார்த்துக்கிட்டே இருந்தாலே வயிறு பசிக்காது........ஆமா.

முத்,—உணக்கு எப்படி பசிக்கும்...... வர்ற வழியி லேயே டீக்கடையிலே முழுங்கிட்டு வந்திருப்பே.

மரு.—இந்தா முத்து உன் மேலே ஆணையா கையிலே கால் ரூபாய் பணம்கூட இல்லே. பஞ்சாயத்திலே அபராதம் போட்டிருக்காங் கல்ல கஞ்சுப்பொழுதுக்குள்ளே கட்டணுமாம்; அதான்.

முத்.—(கோபத்தோடு) குத்தகை கட்டப்போ றேன்னு சொல்லி விதைக்கிக்கூட எடுத்து வைக்காம இருக்கிற நெல்லையெல்லாம் களத்து மேட்டிலேயே விலைக்கிப்போட்டு தென் கரை மைனராட்டமா சீட்டாடிப்போட்டே! இதுக்கு மேலே காவந்து செய்யிற நெட்டி யிலே மாட்டைவிட்டு மேய்ச்சுப்போட்டு கில்லாடித் தனம் செய்தா ஊருக்குள்ளே சும்மா இருப்பாங்களா? அபராதத்தைக் கட்டு.

மரு.—இதுக்கு மேலே என்ன வேணும்....கட்டுச் சோத்திலே பெரிச்சாளியை வச்சுக்கட்டின மாதிரி நீயே எல்லாத்தையும் சொல்லிட்டே யில்ல.

முத்.—பின்னே இந்த பெருச்சாளிக்கிட்ட என்ன பேச்சு வேண்டியிருக்கு வழியைவிடு.

மரு.—இந்த பெருச்சாளி கிட்டத்தானே பணம் இருக்கு!

முத்.—பணமா? எங்கிட்ட ஏது....பணம்!

மரு.—சும்மா டூப் விடாதே. புடவை வாங்க னும்னு முப்பது ரூபா வைச்சியிருந்தேயில்லே அதிலே இருபது ரூபா கொடு........அடுத்த வாரம் சாயம் போகாத காடுபட்டி புடவையா ஒன்னு வாங்கியாந்து தரேன்!

முத்.—நீ வீடு தங்கினாத்தானே உனக்குத் தெரிய போகுது. மூந்தா நாள் ஒரு மூட்டை விதை நெல் வாங்கியாந்து வச்சிருக்கு......மச்சு வீட்டுக்குள்ளே போய்ப் பாரு,

மரு.—நீ எதைத்தான் என்னைக் கேட்டுக்கிட்டுச் செய்யிறே. எங்கிட்டக்கேட்டா நல்ல நெல்லா பார்த்து நான் வாங்கியாந்திருப்பேன்.

முத்.—போற போக்கிலே சீட்டாடிப்போட்டு.. தலையிலே துண்டைப்போட்டுகிட்டு வந்துநிப்பே

மரு.—போனதையெல்லாம் இப்ப எதுக்கு எடுத் துக்கிட்டு! இப்ப இருபது ரூபா வேணுமே.

முத்.—எங்கிட்டக்கேட்டா நான் என்ன செய் யட்டும்.

மரு.—எனக்கொரு யோசனை தோணுது...... கேட்குறியா? நம்மகிட்டே எத்தினி கோழி நிக்கிது.

முத்.—எட்டுக்கோழி நிக்கிது. அதுக்கென்ன?

மரு.—கோழிகளுக்கெல்லாம் சீக்கு வருதாம் இன்னிக்கு வெள்ளிக்கிழமை சந்தையிலே எல் லாத்தையும் வித்துப்போட்டு வந்திடு.

முத்.—நம்ம கோழிகளுக்கெல்லாம் ஊசி போட்டி ருக்கு. சீக்கு வராது வேறே எங்கையாவது பணத்தைப் பார்த்துக்கோ.

மரு.—நான் சொன்னு கேளு முத்து..நல்ல பொண்ணுல்ல! இந்த நேரத்திலே சலலிக்காசு புரட்ட முடியாது கண்ணு.

முத்.—காரியம் முடியணும்னு கண்ணே முத் தேங்கிறது. அப்புறம் கிட்ட வந்தா கடிக் கிறது.

மரு.—கடிச்சுத் தின்னாத்தான் ருசியா இருக்கும்; (உடம்பை வளைத்து பக்கத்தில் நெருங்குகிறன்.)

முத்.—சரிசரி..இப்ப கிட்ட வராதே? கஞ்சியை ஊத்தி வைக்கிறேன். குடிச்சுடபோட்டு ஊரான் வயல்லே நட்ட நடவு எப்படி இருக்கு துன்னு பார்த்துட்டு வா. நான் கோழிகளை சந்தைக்குக் கொண்டுபோறேன்.

(முத்தம்மாள் முன்னே செல்ல மருதப்பன் ஓட்டிக்கொண்டு பின்னால் போகின்றான்)

காட்சி 4

[நெடுங்குளம் கிராமத்தில் ஒரு வீதி மேற்குத்தெரு வின் கிழ்கோடியில் ஓய்வுபெற்ற ராணுவ வீரர் முத்தையாவின் வீடு. முத்தையாவின் உருவத்தில் அந்த பட்டாளத்து கம்பீரம் எப்பொழுதும் நிறைந்திருக்கும்.

திண்ணையிலே அமர்ந்து வெற்றிலை பாக்குப் போட்டுக் கொண்டிருக்கிறார் முத்தையா. அப்போது காவல் குளம் கிராமத்தைச் சேர்ந்த சவரிமுத்து அங்கே வருகிறான்.]


முத்; (முகம் மலர்ந்து) வா தம்பி சவரிமுத்து; கிராமத்திலே எல்லாரும் நல்லா இருக்காங் களா? என் மக முத்தம்மா வீட்டு பக்கம் போயிருந்தியா?

சவரி; (எதிர் திண்ணையில் உட்கார்ந்து கொண்டு) ஒரே கிராமத்திலே இருந்துக்கிட்டு ஒருத் தருக்கொருத்தர் சுக துக்கம் தெரிஞ்சிக்காம இருக்க முடியுமா? இங்கே ஒரு காரியமா வந்திருந்தேன். அப்படியே உங்களையும் பார்த்து......உங்க காதிலேயும் ஒரு பேச் சைப் போட்டுட்டுப் போகலாம்னு வந் தேன்.

முத்! என்ன சங்கதி?

சவரி : வேறே என்னங்க இருக்கப்போகுது. உங்க மருமகனைப் பத்தித்தாங்க. மருதப்பனோட கில்லாடித் தனத்துக்கு ஒரு எல்லையே இல்லாமப் போச்சுங்க. நேத்து கிராமத்திலே கூட கூட்டத்தைப் போட்டு மருதப்பனுக்கு 20 ரூபா அபராதத்தைப் போட்டாரு நாட்டாமை!

முத் : (கவலையுடன்) அவ்வளவு தூரத்துக்கு வந்திரிச்சா?



சவரி : ஆமாங்க—கிராமத்திலே உங்க மனசுக்கும்—உங்க முகத்துக்கும் தான் பொறுத்துக்கிட்டிருக்காங்க இல்லையின்னா இதுக்குள்ளே என்னென்னமோ நடந்திருக்கும்.

முத் : அவனுக்கும் நல்ல நேரம் வரத்தான் செய்யும் சவரிமுத்து. எதுக்கும் நானும் இன்னம் ரெண்டு மூணு நாளையிலே அங்கே வாரேன்.. ....நேரிலே வச்சுச் சொல்லிப் பாப்போம். அப்படியும் நல்ல புத்தி வரலையின்னா நாம என்ன செய்யப் போறோம். முத்தம்மா.... .....எப்படி இருக்கு........?

சவரி : நான் என்னதங்க சொல்றது. கிளியை வளர்த்து பூனை கையிலே கொடுத்த கதை யாத் தான இருக்கு...............வாங்க நீங்க ஒரு வாட்டி நேரிலே வந்து எல்லாத்தையும் பாருங்க. (எழுந்து நின்று) அப்ப நான் போயிட்டுவாரேன்.

முத் : என்ன தம்பி அதுக்குள்ளே கிளம்பிட்டே: மதியத்துக்கு இருந்து சாப்பிட்டுட்டுப் போறது.

சவரி : இல்லிங்க......எனக்கு அவசரமா வேறே வேலை இருக்கு. இன்னொரு வாட்டி இந்தப் பக்கமா வந்தா வாரேன். அப்ப......வரட்டுமுங்களா?

[சவரிமுத்து போகிறான். பக்கத்து வீட்டு நண்பர் பொன்னையா உள்ளே வருகிறார்.]

முத் : (வா........பொன்னையா........என்ன காலையிலேயிருந்து ஆளையே காணலையே?

பொன் : வயலுக்குப் போயிருந்தேன். காணி நிலத்துச்கு தண்ணி பாய்ச்ச இம்புட்டு நேரமாகிப் போச்சு. அடாதுடிக்காரன் கைதான் இப்போ ஓங்கி நிக்குது. அதுசரி.....எங்கே உன் மக லாரிலேயிருந்து ஆள் வந்திட்டுப் போறாரு.

முத் : அடாதுடிக்காரன் கதைதான் அங்கேயும். கல்யாணத்தைச் செய்து வைச்சா நல்லபடியா மாறிப் போவான்னு நினைச்சு தங்கச்சி மகனுக்குப் பெண்ணைக் கொடுத்தேன். எதிர்பார்த்தது நடக்கலையே. இதுதான் இப்ப எனக்குப் பெருங் கவலையா இருக்கு,

பொன் : கவலைப்பட்டு என்ன ஆகப் போது. எல்லாமே நல்லபடியாகவே நடக்கும். நேத்துப் பேசிக்கிட்டிருந்தோமே அந்த காரியத்துக்கு என்ன முடிவு செஞ்சு வச்சிருக்கே. உன்மகன் கிட்டேயிருந்து இன்னிக்கு ஏதாவது கடுதாசி வந்திருக்கா.

முத் : யுத்த களத்திலே காலடி வச்சு நின்னாலே வீட்டு நினைப்பெல்லாம் மறந்தே போகும் பொன்னையா? நம்ம ரத்தினம் இப்ப சண்டை நடக்கிற இடத்திலேயில்ல இருக்கான். பொன்னையா......நானும் பட்டாளத்திலே முப்பது வருஷமா உழைச்சிருக்கேன். அப்பவெல்லாம் கூலிப்பட்டாளமா, வெள்ளைக்காரனுக்காக—அவன் கை நீட்டின திசையிலே யார் யார் கூடவோ சண்டை போட்டோம். இப்ப—நமக்காக, நாம பிறந்த மண்ணைக் காப்பாத்துறதுக்காக, துப்பாக்கி ஏந்தி போராடுற பெருமை என் மகனுக்குக் கிடைச்சிருக்கு.

பொன் : நல்லாச் சொன்னபோ. நீயும் பட்டாளத்திலே பொழுதைக் கழிச்சிட்டு—உன் மகனையும் பட்டாளத்துக்கு அனுப்பி வச்சிட்டு பெருமைப் படுறே பாரு......இந்த மனசு எல்லாத்துக்கும் வரணும்.

முத் : பொன்னையா........இந்தக் கட்டை பட்டாளத்து ரொட்டியைத் தின்னே வளர்ந்தது. இத்தனை காலமும் இல்லாம, ஒரு குருட்டுத் தைரியத்தோடே சைனாக்காரன் நம்ம மண்ணிலே காலடி வச்சிருக்கானே! (பெருமூச்சுடன்) இந்தக் கையாலே அவனோட நெஞ்சைப் பிளக்கக் கொடுக்க வைக்கலையேன்னு நினைக்கிறப்ப எனக்கு வேதனையாத்தான் இருக்கு.

பொன் : (சிரித்துக் கொண்டே) என்னிக்குமே வாலிபனா இருந்திட முடியுமா? இந்தா பாரு முத்தையா........இந்தத் தடவை ரத்தினம் பட்டாளத்திலேயிருந்து லீவிலே வந்தா நறுக்குன்னு ஒரு பெண்ணைப் பார்த்து கட்டிவச்சுப் போடு. பட்டாளத்திலே இருந்துக்கிட்டு நீயெல்லாம் குடியும் குடித்தனமா இருந்து குடும்பம் நடத்தலையா? உடனடியா பெண்ணைப் பார்த்து வச்சுககிட்டு ரத்தினத்துக்கு ஒரு கடுதாசியைப் போட்டு வரச்சொல்லு. இல்லையின்னா வருங்காலத்திலே ரொம்பச் சிரமப் படப்போறே. சின்னப் பையனையும் வச்சுக்கிட்டு எத்தனை நாளைக்கி கையாலேயே சமைச்சுச் சாப்பிட்டுக்கிட்டு இருக்க முடியும்.

**மூத்:** (சிரித்துக் கொண்டே) பார்ப்போம் பொன்னையா—எனக்கும் அந்த யோசனை இருக்கத்தான் செய்யுது. பொண்ணு பார்த்துக்கிட்டுத்தான் இருக்கேன். முடிச்சிடுவோம்.

**பொன் :** (எழுந்து) நான் போயிட்டு வாரேன். அந்தா துணைக்கி உன் சின்ன மகனும் வந்திட்டான் !

[பொன்னையா போகிறார். சிறுவன் பாலு கையில் பையுடன் உள்ளே ஓடி வருகிறான்.]

(காட்சி முடிகிறது.)

(காட்சி 5)

### மருதப்பனின் வீடு

நிலைமை; (மருதப்பன் ஒரு பலகையில் அமர்ந்து வண்டி மாடுகளுக்குக் கொம்புக் கயறு முறுக்கிக் கொண்டிருக்கிறான்.)

மருதப்பன் : (தனி மொழியாக) பொழுதும் சாயப் போகுது. போனவளை இன்னும் காணலையே. என்னிக்காவது, போனேம்-வந்தோம்ன்னு வர்றாளா? அவ அப்பன் வீட்டுத் திமிரு மட்டும் கொஞ்சம்கூட குறையிலே! இழுத்துப்போட்டு நாலு கொடுத்தாலும் நெளிச்சுப் போடுறாளே !

[கந்தக் கோனார் கையில் மண்வெட்டியோடு உள்ளே வருகிறார்.]

கந்தக்கோனார் : (வந்துகொண்டே) என்ன மருதப்பா......யாருக்கு அடி கொடுத்துக்கிட்டிருக்கே !

மருத : (திரும்பிப் பார்த்து) வாங்க கோனாரே ....எங்கே வந்திங்க. எதுக்கு நெத்தியிலே கொஞ்ச இடத்தை விட்டு வச்சிருங்கிங்க—அதிலேயும் நாமத்தைப் போட்டு அடைச்சுப் போடுங்களேன்.

கந்த : இந்த......ஆரம்பிச்சிட்டே பாரு. ஊருக்குள்ளே நாலு பேரு உன்னைப்பத்திச் சொல்றதும் சரியாத்தான் இருக்கு!

மருத : என்ன கோனாரே..........எங்கிட்டயே உங்க சரளி வரிசையைக் காண்பிக்கிறங்களே. ஊருக்குள்ளே நாலு விடலைப்பிள்ளைக சேர்ந்துக்கிட்டு தொண்டர் படையின்னு, கையை மடக்கிக்கிட்டு நின்னா நான் பயந்திடுவேனா? மச்சு வீட்டுக்குள்ளே எண்ணை தேய்ச்சு வச்சிருக்கேன்........திருப்பாச்சேத்தி அரிவா ! அதுக்கு இனிமேத்தான் வேலை வரப்போகுது.

கந்த : ஏன்......எங்கேயாவது மரம் வெட்டப் போறியா ?

மருத : மரம் வெட்டப் போறனா...... இல்லை மண்டையைப் பிளக்கப்போறனான்னு அப்புறமல்ல தெரியப்போகுது. இந்த மருதப்பன் துணியமாட்டான்!—துணிஞ்சிட்டா குனியமாட்டான். ஆமா....

கந்த : நேத்து ஊர்க்கூட்டத்திலே பத்து தடவை கும்பிட்டு விழுந்திட்டு—இங்கே நின்னு வீரம் பேசுறியே ! நாட்டாமைக்காரரு அபராதத் தொகையை வாங்கிக்கிட்டு வரச் சொன்னாரு ......கொடுக்குறியா !



மருத : இதுக்குத்தான் வந்து நிக்கிறியாக்கும். போய்யா......கொஞ்ச நேரத்திலே கொண்டாந்து தாரேன்னு சொல்லு.

கந்த : என்னமோ......உனக்கு நேரம் காலம் சரியில்லே. நான் போய் சொல்லிப் போடுறேன்?

[கந்தக்கோனார் போகிறார்.]

மருத : போய் சொல்லுமே....நாட்டாமை.... கழுத்தையா சீவிப்போடுவாரு. இவரு முன்னாலே நிக்கிறதுனாலேதான் எல்லாத்துக்கும் பயமத்துப் போச்சு!......(சற்று நிதானித்து) இந்த மூதேவியை இன்னம் காணலையே. வரட்டும் இன்னிக்கித்தான் இவ சீட்டும் கிழியப்போகுது.

[முத்தம்மாள் வருகிறாள்.]

மருத : (கிண்டலாக) வாம்மா........தங்கப் பொண்ணு வழியைப் பார்த்துத்தான் வந்தியா? இந்தா இருக்கிற சந்தைக்குப் போயிட்டுவர இத்தனை நாழியா ?


முத்தம்மா : (இடுப்பிலிருந்த கூடையை இறக்கிக் கீழே வைத்துவிட்டு) நல்லா......பிடிச்சி வச்ச பிள்ளையாராட்டமா...... வீட்டுக்குள்ளேயே குந்திக்கிட்டு ஏன் பேசமாட்டே !

மருத : கஞ்சிப்பொழுது கடந்து எவ்வளவு நேரமாகுது ?


முத்தம்மா : அதுக்கு என்ன இப்ப

மருத : (கோபமாக) அபராதத்தைக் கட்ட வேண்டாமா ?


(தொடரும்)



அரசாங்கக் கலை-நுட்பத் தொழில் கல்லூரியில், துணிகளில் பூ வேலைப்பாடு கண்காட்சியை, 5—8—1965-ல், மாநில சமூக நல போர்டு தலைவி திருமதி சரோஜினி வரதப்பன் திறந்து வைத்தார்.



தென் ஆர்க்காடு மாவட்டத்தில், சிறு சேமிப்பு திட்டவிழா சிறப்பாக நடைபெற்றது. மாவட்டக் கலெக்டர் திரு. வி. எஸ். சுப்பையா, ஐ.ஏ.எஸ்., சிறு சேமிப்பு அஞ்சல் கணக்குப் புத்தகங்களையும் பெண்களுக்கு சர்வோதய பாத்திரங்களையும் வழங்கினார். மாநிலக் கூட்டு அபிவிருத்திக் கமிஷனர் அவர்களும் விழா நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டு, அரிய கருத்துரைகளை எடுத்துரைத்தார்.





சென்னை பாலர் அரங்கில், 23—7—65-ல், சென்னை நகர மேயர் திரு சி. சிட்டிபாபு தலைமையில், உலக சுகாதார தினம் கொண்டாடப்பட்டது,




30—7—65-ல், செக்ரடேரியட்டில், கல்விக் கமிஷனின் தலைவர், மற்றும் அங்கத்தினர்களுடன், முதலமைச்சர் விவாதிக்கிறார்.

**தொழில் வளம் பெருக. . . .**

தமிழ்நாட்டில் மாவட்டங்கள் தோறும், தொழில் கருத்தரங்குகள் நடைபெற்று வருகின்றன. அண்மையில் நடைபெற்ற திருநெல்வேலி மாவட்ட தொழில் கருத்தரங்கினை, தொழில் அமைச்சர் திரு ஆர். வெங்கட்ராமன் தலைமையில், முதலமைச்சர் திரு எம். பக்தவத்ஸலம் துவக்கிவைத்தார்.






சமுதாய வளர்ச்சி—பஞ்சாயத்து ஆட்சிபற்றிய வருடாந்திர மகாநாடு, ஸ்ரீநகரில், 24—7—65-லிருந்து மூன்று நாட்கள் நடைபெற்றது. திட்டக் கமிஷன் உதவித் தலைவர் திரு அசோக் மேத்தா மகாநாட்டினைத் துவக்கிவைத்தார்.




மகாநாட்டில், பாரத அரசாங்க சமுதாய வளர்ச்சி - பஞ்சாயத்து அமைச்சர் திரு எஸ். கே. டே அவர்கள் கலந்துகொண்டு, உரையாற்றினர்.





புது டெல்லியில், 28—7—65-ல் நடைபெற்ற விவசாய புள்ளி விவர ஆராய்ச்சிக் கழகத்தின் 11-வது வருடாந்திர பட்டமளிப்பு விழாவில், உணவு அமைச்சர் திரு சி. சுப்பிரமணியம் அவர்கள் உரை நிகழ்த்துகிறார்.






பிராந்திய தொழில் நிறுவனம் (Regional Labour Institute), முதலமைச்சர் அவர்களால், சென்னையில் 28—7—65-ல் துவக்கிவைக்கப்பட்டது. பாரத அரசாங்க தொழில் அமைச்சர் திரு சஞ்சீவையா விழாவுக்குத் தலைமை தாங்கினர்,



சென்னை நந்தம்பாக்கத்தில் அறுவைச் சிகிச்சைக் கருவிகள் தொழிற்சாலையில் (Surgical Instruments Factory) பயிற்சியாளர் விடுதியை, 5—8—65-ல், தொழில் அமைச்சர் திரு ஆர். வெங்கட்ராமன் திறந்து வைத்தார்.

பயிற்சியாளர் விடுதியின் எழில் தோற்றம்



# உன்னதப் பணிபுரிந்த உழவர் பெரும்படை

[திரு ஆர். ஜனார்த்தனன், பி. ஏ., சமூகக் கல்வி ஆசிரியர்,
கிருஷ்ணகிரி கிராமிய வளர்ச்சிப் பயிற்சி நிலையம்.]

திரண்ட இரு புஜங்களென விளங்கும் இரு குன்றுகள் கம்பீரமாக நிற்க அதன் நடுவே நம்பிக்கையின் சின்னமாய், அழகுடன் நிற்கின்றது கிருஷ்ணகிரி அணை. அதன்மேல் நின்று பார்த்தால், ஒரு புறம் சிறிய, ஆனால் சுற்றிலும் மலைகள்சூழ்ந்து இயற்கை அழகு சொட்டச் சொட்ட பார்ப்போரைப் பரவசமூட்டும் நீர்த்தேக்கம், மறுபுறம் கண்ணுக்கெட்டிய தூரம் பச்சைப் பசேலென நெற்கழனிகளும், தென்னந்தோப்புகளும் காட்சியளிக்கும். இந்தப் பக்கத்தில்தான் அமைந்துள்ளது, நாட்டின் ஆணிவேர்களாக உள்ள கிராமங்களை ஏற்றம் காண பணி புரியச் செய்யும் கிராம நல ஊழியர்களைப் பயிற்றுவிக்கும் கிராமிய வளர்ச்சிப் பயிற்சி நிலையம்.

120 பயிற்சியாளர்களையும், 56 ஏக்கர் கொண்ட பண்ணையும் அங்கே உண்டு. இங்கே, சிறந்த கிராமங்களை உருவாக்கப்போகும் கிராம நல ஊழியர்களைப் பயிற்றுவிக்கும் ஆசிரியப்பணியை நான் மட்டுமல்ல, எல்லோருமே மகிழ்வுடன் விரும்பி ஏற்றுக்கொள்வார்கள் என்பதில் ஐயமுண்டோ!

ஒரு நாள் காலை சுமார் ஆறு மணி இருக்கும், பயிற்சி முடிய சில நாட்களே உள்ளன, வரப்போகும் பயிற்சி நிறைவு விழாவிற்காக ஆங்காங்கே சில மாணவர்கள் வேலை செய்துகொண்டிருந்தனர். இன்னும் சில நாட்களிலே பயிற்சி முடிந்து கிராமங்களுக்குச் சென்று பொறுப்பேற்று பணி புரியப்போகின்றோம் என்ற மகிழ்ச்சியும், பூரிப்பும் அவர்களிடையே காணப்பட்டது.

இளம் வெயில், மென்காற்று, அமைதியான சூழ்நிலை, வீட்டை விட்டு அடி எடுத்து வைத்தேன். தாரை தப்பட்டையின் முழக்கம் விண் அதிரக் கேட்டது. ஆச்சரியத்தால் என்ன இச் சப்தம் என்று நினைக்கும்போதே "பாங்கா" என்ற ஊதுகுழல் ஓசை, "பூம்; பூம்;" என்று ஒலித்தது, என்ன விசேஷம் என்று புரியாமல், பயிற்சி நிலையத்திற்குள் வரும் சாலைக்குச் சென்று எட்டிப்பார்த்தேன்.

ஏர்ப்படை எதிரே....

கண்களை நம்பவில்லை. கனவோ என மயங்கினேன். நான் அடைந்த ஆச்சரியத்திற்கு அளவே இல்லை. முன் தாரை தப்பட்டை ஒலிக்க, குழல் ஊத வந்துகொண்டிருந்தது ஒரு படை. போர்ப்படையல்ல. ஏர்ப்படை! 50 ஜோடி எருதுகள் ஏர் பூட்டியவண்ணம் வரிசையாக அணி வகுத்து வந்துகொண்டிருந்தன. பெரியமுத்தூர் பஞ்சாயத்துத் தலைவர் திரு. க. சின்னசாமி கவுண்டர் முன்னால் தலைமை வகித்து வர, உடன் பஞ்சாயத்து அங்கத்தினர்கள், ஊர்ப் பிரமுகர்கள், வாலிபர் சங்க அங்கத்தினர்கள், கிராமத் தொண்டர் படையினர் சூழ்ந்து வர "போர்முனையின் வெற்றி ஏர் முனையிலே" என்பதற்கேற்ப எல்லையிலே தொல்லை கொடுக்கும் எதிரிகளைத் தாக்கச் செல்லும் படை யென வந்துகொண்டிருந்தது இந்த ஏர் படை. சிறு குழந்தைகள் மகிழ்ச்சியாரவாரத்தோடு ஓடி வந்தனர். கண்ணுற்ற அனைவரும் என்ன விசேஷமோ என அங்கு குழுமினர். பயிற்சியாளர்களோ, ஆச்சரியத்தால், பிரமிப்பால் செய்வதறியாது சிறிது நேரம் திகைத்து மயங்கி நின்றனர்.

பெரியமுத்தூர் கிராமம், பயிற்சி நிலையத்திலிருந்து சுமார் ஒருமைல் தூரத்தில் உள்ளது. இது, பயிற்சி நிலையத்தில் வேலை செய்யத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள கிராமங்களிலே (Adopted villages) ஒன்று. அங்கே உள்ள வாலிபர் சங்கமும், கிராமத் தொண்டர் படையும் தனது பணியினாலும் சேவையினாலும் தனிச் சிறப்பினை பெற்றிருந்தன. இக் கிராம மக்கள் முன்னேற்ற ஆர்வம், ஒற்றுமை, செயல்திறன் கொண்டவர்களாக விளங்குகிறார்கள். பயிற்சி நிலையத்திற்கும், இக் கிராமத்திற்கும் நெருங்கிய தொடர்பு உள்ளதில் ஆச்சரியமேதுமில்லையல்லவா?

பயிற்சி நிலையம் செய்யும் வேலை என்ன, அங்குள்ளவர்கள் கிராமங்கள் நலம்பெற உழைப்பவர்களே. நமது கிராமத்தின் முன்னேற்றத்தில் அவர்களுக்குப் பெரும் பங்குண்டு என்பதனை அறிந்தவர்கள் அக்கிராம மக்கள். பயிற்சி நிலையத்தின் வளர்ச்சியில் நமக்கும் பங்குண்டு என்பதனைப் புரிந்தவர்கள்.

ஒரு நாள் சிரமதானம்

இப் பகுதி மக்கள் சிறு சிறு துண்டு நிலங்களை வைத்துக்கொண்டு சொந்த விவசாயம் செய்பவர்கள். ஆதலால், பயிற்சி நிலைய பண்ணைக்கு வேலை ஆட்களும், ஏர்களும் கிடைப்பது

சற்று சிரமம்; பண்ணையிலோ நிறைய வேலை செய்ய வேண்டியிருந்தது. இதற்காக பெரிய முத்தூர் பஞ்சாயத்துத் தலைவர் திரு. சின்னசாமி கவுண்டரும் முயற்சி எடுத்துக்கொண்டார்கள். இருப்பினும் தேவையான ஏர் கிடைக்கவில்லை. இச் சிரமத்தை உணர்ந்த அக் கிராமத்தினர் 24–5–1965-ம் தேதியன்று ஒரு கூட்டம் கூட்டினர். பஞ்சாயத்துத் தலைவர் திரு. சின்னச்சாமிக் கவுண்டரும், பஞ்சாயத்து அங்கத்தினர் திரு. மூனிசாமி முதலியாரும் இந் நிலையைக் கிராம மக்களுக்கு எடுத்துரைத்தனர். பயிற்சி நிலைய முதல்வரும் பிற ஆசிரியர்களும் எவ்வாறு நமது கிராமத்திற்கு உதவி செய்கின்றனர். நமது நிலத்தில் எவ்வளவு அக்கறை கொண்டுள்ளனர் என்பதை எடுத்தியம்பி அப் பயிற்சி நிலைய வளர்ச்சியில் நமக்கும் பங்குண்டு என்பதனை கிராம மக்களுக்கு விளக்கினர். பிற்பாடு அக் கிராமத்தில் உள்ள ஏர் வைத்திருப்போர் அனைவரும் கிராமத் தொண்டர் படையினர், வாலிபர் சங்கத்தினர்களுடன் பயிற்சி நிலையம் சென்று ஒரு நாள் சிரமதானமாக வேலை செய்வதென முடிவெடுத்தனர். அதன் படிதான், மறுநாள் 25-5-1965-ம் தேதி காலை 6-மணிக்கு 50 ஏர்களுடன் ஊர் மக்கள் புடைசூழ அணிவகுத்து வந்து எங்களை எல்லாம் திகைக்க வைத்தனர். பயிற்சியாளர்கள் மகிழ்ச்சியில் அவர்களிடமிருந்து ஏர் வாங்கி அவர்களுடன் சேர்ந்து உழ ஆரம்பித்துவிட்டனர்.

கிராம மக்களுக்கு ஒரு குறை. பயிற்சி நிலையத்தின்மீது சற்று கோபம்கூட. ஒரு முதியவர் அது பற்றிக் கூறியதை அவர் வார்த்தைகளிலே காணுங்கள்.

"என்னங்க ஸார்! இப்படி மோசம் பண்ணிட்டீங்களே, நாங்கள் நாள் முழுவதும் இங்கேயிருந்து உழவு செய்யலாம் என்று திட்டமிட்டு ஆர்வத்தோடு வந்தோம். ஆனால் மூன்று மணி நேரத்தில் உழவு முடிந்துவிட்டது. மேற்கொண்டு உழுவதற்கு இடமில்லையே! இப்படி எங்களை ஏமாற்றலாமா?"

என்னே அவரது எண்ணத்தின் சிறப்பு! பயிற்சி நிலைய முதல்வர் அவர்கள் அனைவருக்கும் நன்றி கூறிய பின், அவர்கள் நிறைமனதோடு ஊர் திரும்பினர்.

இந் நிகழ்ச்சியை என் வாழ்நாளில் என்றும் மறக்கமுடியாது. ஏன்? இதைக் கண்ணுற்ற ஒவ்வொருவருமேதான். நிலையத்தை விட்டுச் செல்லும் கிராம நல ஊழியர்கள் தங்கள் தொகுதிகளிலும் இதே போன்று உற்சாகம், ஒற்றுமை, ஆர்வத்தை, செயல் ஊக்கத்தைப் பரப்ப பாடுபட வேண்டும். "உழுவார் உலகத்தார்க்கு ஆணி" என்றார் வள்ளுவர். இந்த உண்மையை நாம் உணர்ந்துகொண்டால், அதனால் விளையும் பயன் எவ்வளவு மகத்தானதாக இருக்கும்?

---

[4-ம் பக்கத் தொடர்ச்சி]

ஏரிகள் மராமத்துக்கு ஏராளமான செலவு செய்யப்படுகிறது. இப்படிச் செய்வதற்கு முன், ஏரிகளுக்குத் தண்ணீர் கிடைப்பதற்கான வழி என்ன என்பதையும் கண்டறிந்து ஆவன செய்ய வேண்டும். யூனியன் ஒவ்வொன்றும், விவசாய அபிவிருத்திக்கான புதிய சாதனங்களை வைத்திருக்க வேண்டும்; முக்கியமாக 'டிராக்டர்' 'பவர்ஸ்பிரேயர்' போன்ற விலை அதிகமுள்ள இயந்திரங்களை வாங்கி, அவற்றை நியாயமான வாடகைக்கு, விவசாயிகளுக்கு அளிக்கும் ஏற்பாடு மிகவும் அவசியம்.

கிராமப் பஞ்சாயத்து விதிக்கும் வீட்டு வரியை வசூலிக்கும் பொறுப்பு இப்போது மணியக்காரர், கணக்கப்பிள்ளையிடம் விடப்பட்டிருக்கும் முறை, சரிவர செயல்படவில்லை. ரெவின்யூ இலாகாவின் கீழ் இருக்கும் இந்தக் கிராம அதிகாரிகள், ரெவின்யூ இலாகா மூலம் கிராம மக்களுக்குத் தரப்படும் கடன்களின் தவணைகளை வசூலிப்பதில் தான், அதிக கவனம் செலுத்துகிறார்கள், வீட்டு வரி வசூலில் போதிய அக்கறை செலுத்துவதில்லை. உதாரணமாக, செய்யூர் பஞ்சாயத்தில், ஆண்டுக்குச் சுமார் ரூ. 3,000 வசூலாகவேண்டிய வீட்டு வரி, கடந்த இரண்டரை ஆண்டுகளில் சுமார் ரூ. 6,000 நிலுவை ஏற்பட்டு விட்டது. இந்த நிலைமைக்குப் பரிகாரம் காணவேண்டும்.

மதுராந்தகம் கூட்டுறவு சர்க்கரை ஆலை தலைவர் திரு. என். பி. கிருஷ்ணசாமி ரெட்டியார், புதுப்பட்டு திரு. வி. சி. அருணாசல ரெட்டியார், செய்யூர் பஞ்சாயத்துத் தலைவர் திரு. வி. சி. அப்பாராவ் முதலியார் ஆகியோர் மேற்கண்டவாறு கருத்துத் தெரிவித்தனர்.

விவசாயம் மேலும் செம்மையாக நடைபெற வேண்டும், பஞ்சாயத்து ஆட்சிமுறை சிறக்க வேண்டும் என்ற அடிப்படை நோக்கத்தோடு இவ்வாறு பல கருத்துக்கள் வெளியிடப்படுகின்றன. இவற்றை ஆராய்ந்து பார்த்து ஆவன செய்வது நலம். கிராமப்புறங்களில் பஞ்சாயத்து ஆட்சியின் கீழ், அரசாங்க இலாகாக்களின் தரப்பில் மேற்கொள்ளப்படும் பணிகளில் ஆழ்ந்து சிந்தனை செலுத்தி, அக்கறை காட்டும் பெருமக்கள் பலரைக் கொண்ட லத்தூர் பஞ்சாயத்து யூனியன், மேன்மேலும் பற்பல முன்னேற்றங்களைக் காணும் என்பதற்கு, நிச்சயமான அறிகுறிகள் தென்படுகின்றன.

**சிறு கதை:**

# மனமாற்றம்

[திரு எஸ். சண்முகராஜ்]

அன்று காந்திஜெயந்தி. தேசத்தந்தையின் பிறந்த தினத்தையொட்டி நடைபெற இருக்கும் நூற்பு வைபவத்தை நடத்துவதற்காக, திலகம் கிஸான் சர்க்காவுடன் மாதர் சங்கக்கட்டிடத்திற்குள் நுழைந்தாள், அவள் ஆசையும், முயற்சியும், வீண் போகவில்லை. சற்றைக்கெல்லாம் நூற்றைம்பது பெண்கள் ராட்டைகளுடன் வந்தனர்.

ராட்டைகளும் உடனே சுழலத் தொடங்கின. அரைமணி நேர நூற்பு யக்ஞம் அது. ஆண்டுதோறும் காந்தி ஜெயந்தியன்று, திலகம் நடத்திவரும் புனிதப் பணிகளில் இதுவும் ஒன்று.

திலகத்துக்கு வயது இருபத்தைந்து அல்லது இருபத்தாறு இருக்கும். கதர் உடையிலேயே பவனி வரும் எளிமை; எல்லோருடனும் சரளமாகப் பழகும் கனிவான பண்பு. —திலகத்தைப் பிரபல்யமாக்கியவை இவை தாம்.

(வாய்ப்பந்தல் போடுவதில் என்னபயன்? வாய்ச் சொல், செய்கையாக மலரும்பொழுது தான், அதற்கு மதிப்பு. ஊரையே தன் வசம் திருப்பிவிட்டாள் திலகம். உண்மை நெறி நின்று, அடக்கத்துடன் பணி புரியும் திலகம் போன்ற உண்மை ஊழியர்கள் ஒவ்வொரு கிராமத்திலும் இருந்தால்...)

கேத்தனூர் கிராம மக்களது உள்ளங்களில் நல்லதொரு இடத்தைப் பிடித்துக் கொண்டிருக்கும் கிராம சேவிகைதான் திலகம்—

கிஸான் ராட்டைகள் சுழன்றுக் கொண்டிருந்தன. அந்தக் கண்கொள்ளாக் காட்சியைக் கண்டு, திலகத்தின் இதயம் பெருமிதத்தால் விம்மியது. அவளது வலது கரம் சர்க்காவைச் சுற்றிக் கொண்டிருந்தபோது, அவளது மனம் ஐந்து வருஷங்களுக்கு முன்பு நடந்த பழைய சம்பவமொன்றைச் சுற்றிச் சுழன்று கொண்டிருந்தது....

....திலகம் கேத்தனூருக்குக் கிராம சேவிகாவாக வேலைக்குச் சேர்ந்த நேரம். சர்க்கா அப்போது அங்கு அவ்வளவாகப் பரவியிருக்கவில்லை.

அன்றும் அண்ணல் பிறந்த தினம்தான். திலகம் மாத்திரம் தனது வீட்டுத்திண்ணையில் அமர்ந்து ராட்டை நூற்றுக்கொண்டிருந்தாள். சில பெண்கள் அந்த வேடிக்கை பார்த்து நின்றனர். இன்னும் சிலர் பார்த்ததும் பார்க்காதது போலவே சென்றனர்.

ஆனால்—

திலகம் இதழ்க்கடையோரத்தில் இளநகையை அரும்ப விட்டுக்கொண்டே நூற்றுக்கொண்டிருந்தாள்.

லட்சுமியம்மாள் என்ற ஐம்பது வயதுப் பாட்டி திலகம் நூற்பதையே சிறிது நேரம் கவனித்து விட்டு 'என்னம்மா இது?' என்று ஒரு கேள்வியைக் கேட்டு வைத்தாள்.

திலகம் சிரித்துக் கொண்டே ''பாட்டி, இது கிஸான் ராட்டை. பாதி விலைக்குக் கொடுக்கிறோம். பழகுவதற்கு ராட்டையுடன் ஒருகட்டு பஞ்சும் இனாமாகக் கொடுக்கிறோம்'' என்றாள்.

''அது சரி....இப்படியே நூற்றுக் கொண்டு போனால்?'' என்று மீண்டும் ஒரு கேள்வியைக் கேட்டாள் லட்சுமியம்மாள்.

''சிட்டம் கிடைக்கும், பாட்டி''—திலகத்தின் பதில்.

சிட்டமா!—ஆச்சரியக்குறி எழுப்பினாள் லட்சுமியம்மாள்.

திலகம் பதிலுக்கு ஒரு புன்முறுவலை உதிர்த்து விட்டு, ''ஆமாம் பாட்டி, சிட்டம் தான்'' என்றாள். பிறகு கதிரிலிருந்த நூலை வீசனத்தில் வீசினாள். ''பாட்டி, இது மாதிரி எண்பது சுற்றுகள் கொண்டது

ஒரு கண்ணி? அப்படி எட்டு கண்ணிகள் போட்டு விட்டால் ஒரு சிட்டமாக விடும்'' என்று சொல்லிவிட்டு மாதிரிக்கு ஒரு சிட்டத்தையும் காண்பித்தாள்.

லட்சுமியம்மாள் இப்போது மௌனம் சாதித்தாள். ஆனால் விமலா கேள்வி கேட்கத் தொடங்கினாள்.

விமலாவுக்கு இருபது வயதிருக்கும், இரட்டைச் சடையும், நைலான் உடையும் நகரத்து நாகரிகத்தில் அவள் பழக்கப்பட்டவள் என்பதை எவரும் தெரிவிக்காமலேயே விளம்பரப்படுத்திக் கொண்டிருந்தன.

''ஏன் ஸிஸ்டர், இது விஞ்ஞான யுகம் ஆச்சுதே இயந்திரங்கள் எல்லாம் பெருகிக் கொண்டிருக்கின்றன. மணியையும் நிமிஷமாக்கி மனித சமுதாயமோ முன்னேறிக் கொண்டிருக்கின்றது. சுமக்க முடியாத கதர் சேலையை உடுத்திக் கொண்டும், காலத்திற்குப் பொருந்தாத கைராட்டையை எடுத்துக்கொண்டும் நாட்டை முன்னேற்ற நீங்கள் வந்திருக்கிறீர்களே, இது



வேடிக்கையாக இல்லையா? அலட்சிய பாவம் விமலாவின் குரலில் தொனித்தது.

திலகம் விமலாவை அன்பாகப் பார்த்தாள்.

சிறுநகையொன்றைச் சிந்திவிட்டுக் கொண்டே ''உண்மை தான் சகோதரி, இது விஞ்ஞானயுகம் தான். இயந்திர காலம் தான். ஆனால், நமது பாரத தேசத்தின் நிலையைச் சற்று நினைவு கூர்ந்து பார்க்கவேண்டும். பெரிய தேசம் நமது தேசம். கிராமங்கள்தாம் நமது தேசத்தின் உயிர்நாடி. கிராம சுபிட்சமே நமது தேசத்தின் சுபிட்சம். நமது கிராமங்களில் பயிர்த் தொழில் தானே உயிர்த் தொழிலாக அமைந்து இருக்கிறது. ஆனால் காடாக உள்ள நிலத்தைக் கழனியாக்கும் நமது உழைப்பாளப் பெருமக்களுக்கு வருஷம் முழுவதும் வேலை கிடையாது. இயந்திரத்தைக் கொண்டு எத்தனைபேருக்கு வேலை கொடுத்துவிடமுடியும்? வேலையில்லாத் திண்டாட்டத்தை விரட்டி விட முடியும்! கிராமக் கைத்தொழில்களால் தாம் இந்தக் குறைகளைக் களைய முடியும் என்பது பொருளாதார நிபுணர்கள் கண்டுள்ள முடிவு.

'' இப்போது கதரைப்பற்றியும் கைராட்டைப் பற்றியும் எண்ணிப்பாருங்கள். ராட்டை வாங்குவதற்கு மூலதனம் அதிகம் தேவையில்லை. நூல் நூற்பதற்கும் கடுமையான உழைப்பு வேண்டியதில்லை.

'' ஐந்து நபர் கொண்ட குடும்பத்திற்கு, நபர் ஒருவர் நாளொன்றுக்கு இரண்டுமணி நேரம் வீதம் 300 தினங்கள் நூற்றாலே போதும்; அந்தக் குடும்பத்திற்குத் தேவையான 75 சதுர கஜத் துணியைச் சுலபமாகத் தயாரித்துக்கொள்ளலாம். அடிமையில்லாத வாழ்வு. கண்ணியமான வேலை. இலகுவான உழைப்பு. ஓய்வு நேரத்தை ராட்டை நூற்பில் செலவழிப்பதால் வீட்டுக்கும் பயன். நாட்டுக்கும் சேவை. சுருக்கமாகச் சொல்வதென்றால் உள்ளத் தெளிவிற்குப் பிரார்த்தனை போல், கிராம சுபிட்சத்துக்கு கதர் அபிவிருத்தி.',

திலகத்தின் குட்டி பிரசங்கம் விமலாவின் சந்தேகத்தை மாத்திரமா விலக்கியது? கால வளர்ச்சியில் நூற்றுக்கணக்கான கிஸான் ராட்டைகள் கேத்தனூர் கிராமத்தில் சுழல்கின்ற பெருமைக்குமல்லவா அது வித்தாக அமைந்து விட்டது!....

'' என்ன அக்கா! நூற்பதையும் விட்டு அப்படி என்ன பிரமாதமா யோசனை செய்றீங்க?'' என்ற கேள்வி திலகத்தின் நினைவோட்டத்திற்கு அணையிட்டது. கேள்விக்குரியவளை ஏறிட்டுப் பார்த்தாள் திலகம்.

ராட்டையைச் சுழற்றிக்கொண்டே திலகத்தைப் பார்த்து புன்னகை செய்தாள் விமலா.

திலகமும் பதிலுக்குப் புன்னகை செய்து கொண்டே ''பழைய சம்பவமொன்றை நினைத்துப் பார்த்தேன், விமலா. மெய் மறந்துவிட்டேன் உம்.. அடேயப்பா அன்றொரு நாள் நீ என்னென்ன கேள்வி எல்லாம் என்னைக் கேட்டாய்? அந்த நைலான் உடை விமலாவா இன்று கதருடையும் ராட்டையுமாகக் காட்சியளிப்பது; நினைத்துப்பார்க்கவே எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது'' என்றாள்.

'' இதில் ஆச்சரியப்படுவதற்கு எதுவும் இல்லை அக்கா. உங்களது தூய அன்பினாலும் பணியினாலுமே எனது மனம் மாறுதலடைந்தது. ஆமா, அக்கா! சிலர் சொல்லுவார்கள், ஆனால் அவர்கள் சொன்னதை அவர்களே செய்வதில்லை. நீங்களோ போதித்தீர்கள். போதித்ததைச் சாதிக்கவும் சாதித்தீர்கள். கதருடையே உடுத்துகிறீர்கள். குறிப்பிட்ட நேரத்தில் ராட்டையும் நூற்கிறீர்கள். ஆமாம்; உங்கள் சொல்லில் அன்பிருந்தது. உங்கள் செயலில் பண்பிருந்தது. வாங்கும் சம்பளத்துக்கு ஏதோ வேலை செய்கிறோம் என்றில்லாமல் தேசிய உணர்வோடு கடமை ஆற்றுகிறீர்கள்.''

'' இந்தக் கிராமத்தில் ஒரு மாதர் சங்கம் உருவானதற்கும், இந்தச் சங்கத்தில் இன்று நூற்றைம்பது பெண்கள் இவ்விதம் ஒன்று சேர்ந்து காந்தி மகானுக்கு அஞ்சலி செலுத்துவதற்கும் நூற்பின் பெருமையை பிரத்யட்சமாகச் செய்து நிரூபித்த உங்களது தூய பண்பும் பணியுமே காரணங்கள்....'' என்றாள்.

'' இல்லை, விமலா! அண்ணல் காந்தியடிகளின் ஆசையும், கைராட்டையின் மகத்துவமே தான் காரணங்கள்'' என்று அடக்கத்தோடு சொல்லிவிட்டு, ராட்டையைச் சுழற்ற ஆரம்பித்தாள் திலகம்.

அதிகாரப் பரவல் முறையை முக்கிய கொள்கையாகக் கொண்ட பஞ்சாயத்து ஆட்சியில், மக்கள் தலைவர்களுக்கு சிறப்பான இடமுண்டு. பொது ஜனங்களால் தேர்ந்தெடுக்கப் படும் தலைவர்களைப்பற்றி, அனைவரும் அறியும் வகையில் அறிமுகம் செய்வது, ஜனநாயக வளர்ச்சிக்கு இன்றியமையாத கடமையாகும், அவ்வகையில், தமிழ் நாட்டில் பஞ்சாயத்து யூனியன் தலைவர்களை ''கிராமநலம்'' வாயிலாக அறிமுகம் செய்துவைக்கத் தொடங்கியிருக்கிறோம். இத் தொடரில், முதலாவதாக, இவ் விதழின் கடைசி அட்டைப் பக்கத்தில் 12 தலைவர்களின் புகைப்படங்களை வெளியிட்டுள்ளோம். முதலில் எங்களுக்கு அனுப்பிவைத்தோரின் புகைபபடங்கள் இவை. அவர்களைப்பற்றிய விவரக்குறிப்புகளை சுருக்கமாக இங்கே வெளியிட்டுள்ளோம்.

தலைவர்களே, அவர்களைப் பற்றி எழுதியனுப்பிய விவரக்குறிப்புகளின் சாராம்சத்தைத்தான் கீழே அளித்துள்ளோம். பொதுஜனத் தலைவர்களைப்பற்றி பொதுமக்கள் தெரிந்துகொள்ள வேண்டாமா? இவ்வகையில், பஞ்சாயத்து யூனியன் தலைவர்கள் அளித்துவரும் ஒத்துழைப்பு பாராட்டுதலுக்குரியதாகும். புகைப் படங்களும், விவரக் குறிப்புகளும் 'கிராம நலத்'தில் வெளியிட வந்துகொண்டே யிருக்கின்றன. இதுவரையில் இவற்றை அனுப்பாத பஞ்சாயத்து யூனியன் தலைவர்கள், இதில் தனிப்பட்ட சிரத்தை காட்டி உடனடியாக தங்கள் புகைப்படத்தையும், விவரக் குறிப்பையும் அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்ளுகிறோம்.

# பஞ்சாயத்து யூனியன் தலைவர்கள் அறிமுகம்

**திரு ஆர். ராஜப்பா,** *தலைவர், மன்னார்குடி பஞ்சாயத்து யூனியன், தஞ்சாவூர் மாவட்டம்.*

34 வயதே நிரம்பியவர் இவர். இண்டர்மீடியட் வரை படித்துள்ளார். மன்னார்குடி யூனியனில் பைங்காநாடு பஞ்சாயத்தின் தலைவர். ஜனநாயக சோஷியலிசத்தில் மிகுந்த ஈடுபாடு உண்டு. தற்சமயம், கிராமத்தில் விவசாயத் தொழிலைக் கவனித்து வருகிறார்.

**திரு டி. எஸ். என். நல்லதம்பி,** *தலைவர், துறையூர் பஞ்சாயத்து யூனியன், திருச்சிராப்பள்ளி மாவட்டம்.*

வயது 43. 1952 முதல் ஆதனூர் பஞ்சாயத்துத் தலைவராக உள்ளார். பொதுநல சேவையில் மிகுந்த ஆர்வம் உள்ளவர். கடந்த 20 ஆண்டுகளாகப் பொதுப்பணி ஆற்றி வந்துள்ளார். பத்தாண்டுகளாக, ஆதனூர் காசி விஸ்வநாத தேவஸ்தான டிரஸ்டி. ஜனநாயக சோஷலிசத்தில் அசைக்க முடியாத நம்பிக்கை கொண்டவர்.

**திரு. கே. இராஜு (ரங்கசாமி),** *தலைவர், பேரூர் பஞ்சாயத்து யூனியன், கோயம்புத்தூர் மாவட்டம்.*

வயது 33. பேரூர் பஞ்சாயத்து யூனியன் தலைவராகப் போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டார். 1961-ல் கவுண்டம்பாளையம் கூட்டுறவுச் சங்கத்தின் இயக்குநராகத் தொண்டாற்றியுள்ளார். கிராம மக்களுக்கு தண்ணீர் வசதி, கட்டாயக் கல்வி முறையை அமுல் நடத்துதல், சாலை வசதிகள், நவீன விவசாய முறை இவர் மனதுக்குகந்த திட்டங்களாகும். பொதுநலத் தொண்டில் நல்ல ஆர்வம் கொண்டவர்.

**திரு ஜி. ஆர். குருசாமி நாயுடு,** *தலைவர், உடுமலைப்பேட்டை பஞ்சாயத்து யூனியன், கோயம்புத்தூர் மாவட்டம்.*

வயது 43. 1942-ல் இருந்து சுதந்திர இயக்கத்தில் பங்கு கொண்டுள்ளார். சொந்த ஊர், உடுமலைப்பேட்டை வட்டத்தில் உள்ள குருவப்ப நாயக்கனூர். அந்த ஊரில் பெரு நிலக்கிழாராக விளங்கிய திரு ஜி. இராமசாமி நாயுடுவின் புதல்வர் இவர். 'குருசாமி' என்ற பெயரிடப்பட்டாலும் "சின்னசாமி நாயக்கர்" என்றே அழைக்கப்படுகிறார். எஸ். எஸ். எல். சி. வரை படித்துள்ளார். வேளாண்மைத்தொழில் புரிந்து வருகிறார்.

**திரு என். சுப்பராயன்,** *தலைவர், நங்கவள்ளி பஞ்சாயத்து யூனியன், சேலம் மாவட்டம்.*

இவருக்கு வயது 43 ஆகிறது. பி.ஏ. பட்டதாரி. ஜலகண்டபுரம் கூட்டுறவுச்சங்கத்தின் தலைவராக ஐந்து ஆண்டுகள் பணியாற்றியுள்ளார். 1960-ம் ஆண்டு முதல் ஜலகண்டபுரம் நகரப் பஞ்சாயத்தின் தலைவராகவும், நங்கவள்ளி பஞ்சாயத்து யூனியன் துணைத் தலைவராகவும் பணியாற்றியுள்ளார். ஜலகண்டபுரம் நகரப் பஞ்சாயத்து அலுவலகத்திற்கு 'நேரு மாளிகை' என்ற

கட்டிடம், இவரது முயற்சியால் உரு வாகியுள்ளது. இவருடைய முயற்சி யால், ஜலகண்டபுரம் நகர மக்கள் காவிரி நீரினைக் குடிநீராகக் குறை வின்றி பெற்றுள்ளார்கள்.

ஐ

**திரு டி. எஸ். ராமபத்திர ரெட்டியார்,** *தலைவர், விக்கிரவாண்டி பஞ்சாயத்து யூனியன், தென் ஆர்க்காடு மாவட்டம்.*

வயது 45. சொந்த ஊர் விக்கிர வாண்டி, சிறு வயதிலிருந்தே கூட்டுறவு இயக்க வளர்ச்சியில் ஆர்வ முள்ளவர். விக்கிரவாண்டி கூட்டுறவு பாங்கின் தலைவர். 1953-லிருந்து தொடர்ந்து விக்கிரவாண்டி பஞ்சா யத்தின் தலைவராக இருந்து வரு கிறார். விக்கிரவாண்டி பஞ்சாயத்து யூனியன் தலைவராக 1961-லிருந்து தொடர்ந்து பணியாற்றி வருகிறார். குடும்பக்கட்டுப்பாடு இயக்கத்தில் மிகுந்த அக்கறை உள்ளவர்.

ஐ

**திரு ஏ. ஜி. வெங்கடாசல பிள்ளை,** *தலைவர், நெமிலி பஞ்சாயத்து யூனியன், வட ஆர்க்காடு மாவட்டம்.*

வயது 42, சொந்த ஊர் அரக் கோணம் தாலூகாவில் உள்ள ஆட்டுப் பாக்கம். தொழில், விவசாயமும், வியாபாரமும். 1960-ல் ஆட்டுப்பாக் கம் பஞ்சாயத்தின் தலைவராக போட்டியின்றித் தேர்ந்தெடுக்கப்பட் டார். ஏழு ஆண்டுகாலமாக அரக் கோணம் தாலூகா கூட்டுறவுச் சங்க இயக்குநராகப் பணியாற்றி வருகிறார். ஆட்டுப்பாக்கம் பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் தலைவராக 1964-ம் ஆண்டு போட்டியின்றித் தேர்வு.

**திரு அ. குமரேச சீனிவாசன்,** *தலைவர், கடையம் பஞ்சாயத்து யூனியன், திருநெல்வேலி மாவட்டம்.*

வயது 37. இண்டர்மீடியட் வரை யில் படித்துள்ளார். 1953-ல் திருநெல்வேலி ஜில்லா போர்டு உறுப் பினராகத் தேர்வு. மாவட்ட நூலக ஆணைக்குழுவில் அம்பாசமுத்திரம் தாலூகா பிரதிநிதியாகப் பணி புரிந் துள்ளார். கீழ்க்கடையம் பஞ்சாயத் திற்கு தொடர்ந்து மூன்றாவது தடவையாக தலைவராக உள்ளார். தென் திருநெல்வேலி மாவட்டக் கல்வி நிலைக்குழுவின் தலைவராகவும், மாவட்டக் குடும்பக்கட்டுப்பாடு குழு உறுப்பினராகவும் பணியாற்றுகிறார்.

ஐ

**திரு கே. சின்னசாமி கவுண்டர்,** *தலைவர், சென்னிமலை பஞ்சாயத்து யூனியன், கோயம்புத்தூர் மாவட்டம்.*

வயது 49. கடந்த ஐந்து ஆண்டு களாக பெருந்துறை 1 பஞ்சாயத்து யூனியன் தலைவராக இருந்துள்ளார். 20 ஆண்டுகளாக பொதுப்பணியில் குறிப்பாக, கூட்டுறவுத்துறையில் ஈடு பட்டு வந்துள்ளார். சென்னிமலை கூட்டுறவு கட்டிட சங்கம், சென்னி மலை கூட்டுறவு பால் விநியோக சங்கம், சென்னிமலை கூட்டுறவு நெச வாளர் சங்கம் ஆகிய நிறுவனங்களின் தலைவராக பணியாற்றி வருகிறார். பசுவபட்டி பஞ்சாயத்தின் தலைவர்.

ஐ

**திரு கே. எல். வெங்கடாசல உடையார்,** *தலைவர், கலசப்பாக்கம் பஞ்சாயத்து யூனியன், வட ஆர்க்காடு மாவட்டம்.*

1958 முதல் ஆதமங்கலம் பஞ்சாயத்தின் தலைவர். பொதுப் பணியில் மிகுந்த ஆர்வம் உண்டு. 9 ஆண்டுகள் கூட்டுறவு விவசாய பாங்கின் தலைவர். புதூர் கூட்டுறவு பால் விநியோக சங்கத்தின் தலைவர். விவசாயத் தொழிலில் அக்கறை உடையவர்.

ஐ

**திரு ஏ. கந்தசாமி நயினார்,** *தலைவர், காவேரிப்பட்டணம் பஞ்சாயத்து யூனியன், சேலம் மாவட்டம்.*

வயது 55. இண்டர்மீடியட் வரை யில் படித்துள்ளார். 1936-ம் ஆண்டு சேலம் மாவட்ட போர்டு உறுப்பின ராக தேர்வு. 1939 முதல் இன்று வரை அரசம்பட்டி பஞ்சாயத்துத் தலைவராக தொடர்ந்து பணியாற்றி வருகிறார். காவேரிப்பட்டணம் பஞ்சா யத்து யூனியன் தலைவராக போட்டி யின்றித் தேர்ந்தெடுக்கப்பட்டார். விவசாயத்துறையில் மிகுந்த ஆர்வம் உள்ளவர்.

ஐ

**திரு எஸ். ராஜகோபால்,** *தலைவர், டி. கல்லுப்பட்டி பஞ்சாயத்து யூனியன், மதுரை மாவட்டம்.*

வயது 40. சொந்த ஊர் சிலார் பட்டி கிராமம். சிறு வயது முதற் கொண்டே கிராம வேலையில் ஈடு பாடு. கடந்த 12 ஆண்டுகளாக பஞ்சாயத்து தலைவராகப் பணிபுரிந்து வருகிறார். 1960-ல் கடையம் பஞ்சா யத்து யூனியன் உபதலைவராக தேர்வு. இப்பொழுது பஞ்சாயத்து யூனியன் தலைவர். விவசாயத்தில் அக்கறை உள்ளவர். மாவட்ட அபி விருத்தி மன்ற விவசாயக்குழு உறுப்பினர்.

## "உண்மையான இந்தியா"

"மக்களின் அகத்திலுள்ள ஓர் ஆற்றல் வேலை செய்யத் தொடங்குகிறதென்பதை, நாம் காண வேண்டும். ஸ்வதேசி சமாஜை (சமுதாயமும் அரசாங்கமும்) நான் எழுதிக்கொண்டிருக்கும் பொழுது, இதே கருத்து எனக்கு உதயமாயிற்று. நான் அப்பொழுது என்ன சொல்ல நினைத்தேனென்றால், நாடு முழு வதையும் பற்றி நாம் சிந்திக்க வேண்டியதில்லை என்பதுதான். ஒன்று அல்லது இரண்டு கிராமங்களில் நம் பணியை தொடங்கலாம். உதவியின்மை, அறியாமை என்ற விலங்குகளிலிருந்து ஒரு கிராமத்தை விடுதலை செய்தாலுங்கூட, இந்தியா முழுவதற்கும் ஓர் இலட்சியத்தை உண்டாக்கக்கூடும். இந்த எண்ணந்தான் எனக்கு அப்பொழுது உதயமாகி இன்னும் இருந்து கொண்டு வருகிறது. சில கிராமங்களையாவது இந்த முறையில் புனரமைப்புச் செய்து விட்டால், அவையே என்னுடைய இந்தியா என்று நான் சொல்லத்தயார். உண்மை யான இந்தியாவைக் கண்டு பிடிப்பதற்கும் அதுவே வழியாகும்."

—கவியரசர் தாகூர்

ஆந்திரப்பிரதேச மாநிலம், விசாகப்பட்டினம் மாவட்டத்தைச் சேர்ந்த சீதா நகரம், ஒரு சாதாரண சிறு கிராமம். ஆனால் நாட்டிலுள்ள பிற கிராமங்கள் பாராட்டி, பின்பற்றத்தக்க சாதனையொன்றை தனக்குரிய எளிய முறையில் அது செய்து காட்டியிருக்கிறது.

# உதவிக்கு உருவம் தந்த உண்மை ஊழியம்

ஏறக்குறைய ஆயிரம் மக்கள் தொகையைக் கொண்ட சீதா நகரம், சாரதா நதிக்கரையில் அமைந்திருக்கிறது. சாரதாவும் சரசுவதியும் விசாகப்பட்டினம் மாவட்டத்தின் சோக நதிகள் என்று சொல்லப்படுவதுண்டு. ஏனெனில், ஒவ்வொரு ஆண்டும் மாரிக்காலத்தில் இந்த நதிகளில் பெருக்கெடுக்கும் வெள்ளம் இப்பகுதிகளில் புகுந்து மக்களுக்குப் பெரும் அவதியைத் தருவது வாடிக்கை. இதில், சீதா நகர ஹரிஜனங்கள் மிகவும் மோசமான முறையில் பாதிக்கப்படுவார்கள். அவர்கள் நதியின் கரையோரத்திலேயே குடிசைகளில் வாழ்ந்தார்கள். 1958 நவம்பரில் சாரதா நதியில் பெருவெள்ளம் ஏற்பட்டு, தொடர்ந்து நான்கு நாட்களுக்கு அதன் கோர விளையாட்டு நீடித்ததால், இந்த மக்களின் உயிருக்கும் உடைமைக்கும் பெரும் சேதம் விளைந்தது. அதிகாரிகளும், சமூகசேவை சங்கங்களைச் சேர்ந்தவர்களும் அந்த இடத்திற்கு விரைந்து வந்து பல உயிர்களைக் காப்பாற்றினர்.

இத்தகைய வெள்ளச் சேதங்கள் திரும்பத் திரும்ப நேரிடாமல் தடுக்க, நிரந்தரமான நடவடிக்கைகள் எடுத்தாக வேண்டும் என உணரப்பட்டது. ஆண்டு தோறும் வெள்ளத்தால் பாதிக்கப்படும் கிராமங்களைக் காப்பாற்ற, உயரமான கரை எழுப்புவதென அரசாங்கம் முடிவு செய்து, அதற்கான ஒரு திட்டத்திற்கும் அனுமதி வழங்கியது. எனினும் சீதா நகரம் கிராமத்தைச் சேர்ந்த 64 ஹரிஜனக் குடும்பங்களை இந்த வருடாந்திரச் சோதனையிலிருந்து காப்பாற்ற, தக்க முயற்சி எதுவும் எடுக்கப்படவில்லை. அவர்களுக்கு ஒழுங்கான வீடுகள் கட்டித் தந்தால்தான், மழைக்காலத்தில் அவர்கள் வீடிழந்து தவிக்கும் நிலைமையைத் தவிர்க்க முடியும்.

### உதவி கிடைத்துங்கூட......

இந்த நிலைமையில் வரப்பிரசாதம்போல் வந்தது ஒரு திட்டம். அதுதான், மத்திய அரசாங்கத்தின் மானிய உதவியுடன் ஹரிஜனங்களுக்கு வீடுகள் கட்டும் திட்டம். இந்த வசதி ஏற்பட்டும்கூட சீதா நகரத்தில் ஹரிஜனக் குடியிருப்பு எழ முடியவில்லை. அரசாங்க உதவி போக, மிச்சமுள்ள செலவுக்குப் பணம் போட்டு வீடு கட்டுவது எப்படி என்பது, அன்றாட ஊதியத்தில் வாழ்க்கை நடத்தும் அந்த மக்களுக்குப் புரியாத பிரச்னையாக இருந்தது. எனவே அவர்களுக்கு வழி காட்டக் கூடிய, ஹரிஜனங்களிடம் அன்பு கொண்ட பொறுப்பான ஒரு தலைமை தேவைப்பட்டது. நல்லகாலமாக இந்த இயல்புகளைக்கொண்ட ஒருவர்—சூரிய நாராயண ராஜு என்பவர்—அக்கிராமத்தில் இருந்தார். ஆகையால், வீடு கட்டும் உதவித் திட்டத்தை வட்டார அதிகாரிகள் அறிவித்தபோது, அதை ஏற்றுச் செயல்படுத்த, திரு ராஜு முழு மனதுடன் முன் வந்தார்.

ஆனால், அவரது ஆரம்ப அனுபவம் அவ்வளவு திருப்திகரமாயில்லை. கிராமத்திலுள்ள மற்றவர்களது ஒத்துழைப்பு அவருக்குக் கிடைக்கவில்லை. காரணம், தங்களில் பலரே குடிசைகளில் வாழும்போது, ஹரிஜனங்களுக்கு ஒழுங்கான வீடுகள் கட்டித்தருவதை அவர்கள் விரும்பவில்லை. இந்த நிலையில், சூரியநாராயண ராஜுவுக்கு அச்சம் தட்டியது. ஹரிஜனங்களுக்கான வீடுகள் அனைத்தையும் எப்போது கட்டி முடிக்கப்போகிறோம் என்ற ஆயாசம் ஏற்பட்டது. எனினும் விடாப்பிடியாகக் காரியமாற்றத் தொடங்கினார். தம்

முடைய தோட்டக்கால் நிலத்திலேயே இரண்டு ஏக்கர் பரப்பை, ஹரிஜனக் குடியிருப்புக்காக ஒதுக்கித் தந்தார். அதைக்கொண்டு வேலையும் ஆரம்பமாயிற்று. நன்கொடைகள் வசூலித்தார். வட்டார அதிகாரிகளின் ஒத்துழைப்பு, மேற்பார்வையுடன் குடியிருப்பு நிர்மாண வேலை நடைபெற்றது. ஆரம்ப முதல் இந்த வேலை முழுவதற்கும் ஹரிஜனங்களையே பயன்படுத்தியது குறிப்பிடத்தக்கது. ஓராண்டுக்குள் 64 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டன.

## பெருமிதம் தரும் புதிய தோற்றம்

பரவலான இடத்தில், சீரான வீதிகள் அமைப்புடன் உள்ள இந்தக் குடியிருப்பு, சீதா நகரம் கிராமத்திற்கே ஒரு புதிய தோற்றத்தைத் தருகிறது. ஹரிஜனங்கள் சிரமதானம் மூலம், தங்களால் இயன்ற பங்கை இதற்குத் தந்துள்ளனர். இந்தக் குடியிருப்பில் ஒரு சமூதாய மன்றமும், ஒரு பூங்காவும் அமைக்கப்பட்டுள்ளன. இக் குடியிருப்புக்காக அரசாங்கம் சுமார் ரூ. 50,000 செலவு செய்திருக்கிறது.

சீதா நகர ஹரிஜன மக்கள், இன்று தங்கள் குடியிருப்பு பற்றி பெருமிதம் கொள்கின்றனர். நல்ல காற்றோட்டமுள்ள கட்டுக்கோப்பான ஒழுங்கான வீடுகளில் தாங்கள் வாழ்வது குறித்து மன நிறைவு கொண்டுள்ளனர். எனவே வீடுகளையும், சுற்றுப்புறங்களையும் சுத்தமாக வைத்துக்கொள்வதில் விசேஷ அக்கரை செலுத்துகின்றனர். ஒவ்வொரு வீட்டிலும், புகையில்லா அடுப்பு பொருத்தப்பட்டிருக்கிறது. ஆனகாபள்ளியில் உள்ள கிராம சேவக்குகள் பயிற்சி நிலையத்தைச் சேர்ந்த மாணவர்கள், இங்கு கிராம சேவை செய்ய வந்தபோது. ஹரிஜனக் குடியிருப்பில் ஒரு ரோடு போட்டுத் தந்ததோடு, ஒவ்வொரு குடும்பத்திலும் காய்கறித் தோட்டம் வைக்கச் செய்தனர்.

இந்தக் குடியிருப்பு உருவானதற்குரிய பெருமை முழுவதும் திரு சூரியநாராயண ராஜுவையே சாரும். அவருடைய தூய உள்ளம், பொறுமை, தயாள குணம் ஆகியவற்றால்தான், இந்தப் பணியை அவர் வெற்றிகரமாக முடிக்க முடிந்தது. இந்த அவரது சேவைக்காக, ஹரிஜனங்கள் என்றென்றும் அவரைப் போற்றி வருவர் என்பது உறுதி.

அரசாங்க உதவி கிடைத்தாலும் அந்த உதவிக்கு உருவம் தர, உண்மை ஊழியம் ஒரு முக்கிய தேவை என்பது திரு ராஜுவின் சேவை மூலம் புலனாகிறது.

# அபிவிருத்திப் பணிக்கு இளைஞர்கள் அணி

## புதிய திட்டம் உருவாகும்

தரமுள்ள இளைஞர்களைத் தெரிந்தெடுத்து அவர்களைக் கொண்டு கிராமப்புற மக்களிடையே அபிவிருத்தி, ஆர்வம், புதியனவற்றில் பற்று, நம்பிக்கை ஆகியவற்றை தோற்றுவிக்க, வளர்க்க வழி செய்யும் திட்டம் ஒன்று, மத்திய அரசாங்கத்தின் கல்வி அமைச்சகத்தின் பரிசீலனையில் இருந்து வருகிறது. இத்திட்டத்தின்படி, தெரிந்தெடுக்கப்படும் இளைஞர்களுக்கு உரிய பயிற்சி அளிக்கப்படும். அவ்வாறு பயிற்சி பெறுபவர்களைக் கொண்ட இளைஞர் அணி உருவாக்கப்படும்.

இந்த அணியின் பணிகள் என்ன? நாடெங்கும் நடைபெற்று வரும் ஆக்கத் திட்டங்களை பற்றி மக்கள் முழுமையாக உணரச் செய்யவேண்டும். நாடு தழுவிய இந்த மாபெரும் நிர்மாண இயக்கத்தில், தங்கள் பங்கு என்ன என்பதை மக்கள் அறியச் செய்ய வேண்டும். அதோடு, சுயநல நோக்கங்களை—அந்த ரீதியில் செயல்படும் மனப்போக்கை—விட்டொழித்து, தேசம் முழுவதின் பொது நலனுக்கு முதலிடம் கொடுக்கும் சுபாவம், அப்பழுக்கற்ற தேசியப்பற்று, வளரப் பாடுபட வேண்டும். இவை, இளைஞர் அணியிடம் எதிர்பார்க்கப்படும் கடமைகள்.

இந்தத் திட்டம் கல்லூரி மாணவர்களுக்கான திட்டத்திலிருந்து வேறுபட்டது. அதுவும், இதுவும் தனித் தனியான திட்டங்கள். மாணவர் திட்டத்தின்படி ஒரு கல்லூரியைச் சேர்ந்த மாணவர்கள், கல்லூரிக்கு அருகாமையில் உள்ள கிராமங்களுக்குச் சென்று அபிவிருத்திப் பணிகளில் ஈடுபடுவார்கள். கோடை விடுமுறையின்போது இத்தகைய சேவைக்கு, 42 நாள் முகாம் ஏற்பாடு செய்யப்படும்.

புதிய திட்டத்தின்படி அமைக்கப்படும் இளைஞர் அணியில் வர்த்தக, தொழில் நிறுவனங்களில் அல்லது வேறு துறைகளில் திறமையாகச் செயலாற்றி வரும் 24—28 வயதுள்ள இளைஞர்கள் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள். இவர்கள் ஆறேழு பேர் சேர்ந்த குழுக்களாகப் பிரிக்கப்பட்டு, கிராமங்களில் அபிவிருத்தி ஊக்க பணிகளைச் செய்ய அனுப்பப்படுவார்கள்.

# பெண்களே நடத்தும் பஞ்சாயத்து

"நம் நாட்டுப் பெண்கள் எந்த அளவுக்கு முன்னேறு கிருர்களோ, அந்த அள வுக்குப் பாரதமும் முன் னேறும்" என்று காலஞ் சென்ற ஜவஹர்லால் நேரு அவர்கள் கூறினுர். அந்த சொல் தவறல்ல என்பதை, முற்றிலும் பெண்களையே உறுப்பினர்களாகக் கொண்ட மட்டம்பள்ளி கிராமப் பஞ்சா யத்து மெய்ப்பித்து வரு கிறது.

ஆந்திரப் பிரதேச மாநிலம், நல்கொண்டா மாவட்டத்தில், மட்டம்பள்ளி கிராமம் இருக்கிறது. இக் கிராமப் பஞ்சாயத்தின் தலைவர் உள்பட எல்லா உறுப்பினர்களும் பெண்களே. தேர்தல் நேரத்தில், அதுவே ஒரு செய்தியாக, பத்திரிகை களில் அடிபட்டது. அந்தப் புதுமை அதோடு நில்லாமல், உண்மையால் உருவான பணிகள் பலவற்றை இப் பஞ்சாயத்து செய்திருக்கிறது. பொறுப்புகளை ஏற்று, சாதனைகள் புரிய பெண்களால் முடியும் என்பதற்கு இது ஒரு எடுத்துக்காட்டாய் விளங்குகிறது.

இந்த ஒன்றரையாண்டு காலத்தில், பாராட்டத் தக்க சேவை பல செய்யப்பட்டுள்ளன. கிராமப் புனருத்தாரண வேலை படிப்படியாக ஆரம்ப மாயிற்று. முதியோர் கல்வி வகுப்புகள் தொடங் கப்பட்டன. கடந்த சில மாதங்களில், முதியோர் கல்வி விஷயத்தில், பஞ்சாயத்து விசேஷ கவனம் செலுத்தியது.

### 3,000 முதியவர்களுக்குக் கல்வியறிவு

முதியோர் கல்வி வகுப்புகளில் சேருவோர் எண்ணிக்கை அதிகரித்துக்கொண்டே வந்தது. ஆகையால் கௌரவ ரீதியில் ஆசிரியர் பணி புரியக் கூடியவர்கள், சமூக சேவகர்கள் மேலும் மேலும் அதிகமாகத் தேவைப்பட்டனர். இந்த வளர்ச்சியின் காரணமாக இதுவரை 3,000-க்குக் குறையாத முதியவர்கள் கல்வியறிவு பெற்றுள்ளனர்.

கிடைக்கக்கூடிய திட்ட நிதிகளுக்கு உட்பட்டு பல சமுதாய நல வளர்ச்சிப் பணிகளை இப் பஞ்சாயத்து மேற்கொண்டு வெற்றிகரமாகச் செயல்படுத்தி வருகிறது.

போக்குவரத்து வசதி பெருக்கத்தைப் பொறுத்த வரை, மட்டம்பள்ளிக்கும் பக்கத்துக் கிராமமான அமராவரத்துக்குமிடையே ரோடு போடும் வேலையை ஆரம்பித்து சில மைல் தூரம் வரை போடப்பட்டு இருக்கிறது. இந்த சாலை, பாரதப் பெண்கள் நடந்து செல்லவேண்டிய பாதையை—சுய நிர்ணய—சுதந்திரப் பாதையை சுட்டிக் காட்டுவதுபோல் அமைந்திருக்கிறது. அது, கூட்டுறவின் சக்தியை எடுத்துக் காட்டும் ஓர் அத்தாட்சியும் ஆகும்.

குடிதண்ணீர் வசதிக்கும், நீர்ப் பாசன வசதிக்கும் மட்டம்பள்ளி பஞ்சாயத்து போதுமான ஏற்பாட்டைச் செய்துவருகிறது. இந்த வகையில் இரு கிணறுகள் வெட்டப்பட்டுள்ளன.

### கை நுட்பத் தொழில் பயிற்சி

கிராம மக்களின் வாழ்வில் கைநுட்பத் தொழில் களுக்கு முக்கிய இடம் உண்டு என்பதை உணர்ந்த பஞ்சாயத்து, பெண்களின் முன்னேற்றத்திற்காக தையற் பயிற்சி நிலையம் ஒன்றை நடத்திவருகிறது; இதில் பயிற்சி பெறுபவர்கள் தையல் தொழிலைக் கற்று, தங்கள் குடும்பத் தேவைகளைத் தாங்களே

பூர்த்திசெய்துகொள்வதோடு ஓரளவு வருமானமும் பெற வாய்ப்பிருப்பதால், இந்த நிலையத்தில் பயிற்சி பெற நிறையப் பெண்கள் முன்வருகிறார்கள்.

பஞ்சாயத்தை எதிர்நோக்கியிருந்த ஒரு முக்கிய பிரச்னை, குடியிருப்பு வசதி செய்து தருதல். கிராமத்தில், குறிப்பாக ஹரிஜனப் பகுதியில் மக்கள் தொகை பெருகி நெரிசல் ஏற்பட்டதால், இவ் விஷயத்தில் உடனடியாகச் செயல்பட வேண்டிய அவசியம் பஞ்சாயத்துக்கு ஏற்பட்டது. எனவே, புதிய மனைகள் வாங்குவதில் உதவி செய்வதோடு, வீடுகள் கட்டுவதற்கான சாமான்கள் வாங்கித் தரவும், நிதி வசதி செய்து தரவும் பஞ்சாயத்து ஆவன செய்தது. சேரி ஒழிப்புத் திட்டம் மேற்கொள்ளப்பட்டதில், 24 ஹரிஜனக் குடும்பங்கள் மலிவு விலை வீடுகள் கட்டிக்கொள்ள கடன் உதவி வழங்கப்பட்டது.

### சமூக நலப் பணிகள்

சமூக நலப் பணிகளில் கவனம் செலுத்தவும் பஞ்சாயத்து தவறவில்லை. தனது குறைந்த நிதி வசதியைக்கொண்டு, ரூ. 300 விலையுள்ள வானொலிப் பெட்டி ஒன்றை வாங்கியது. குழந்தைகள் பொழுதுபோக்குக்கான நிலையம் ஒன்று அமைக்கப் பட்டது. கிராம நூல் நிலையம் ஒன்று ஏற்படுத் தப்பட்டு, சிரமதானம் மூலம் கட்டப்பட்ட மாதிரி கட்டிடம் ஒன்றில் அது இயங்கி வருகிறது. இவையன்றி, கூட்டுறவு பண்டகசாலை அமைத்தல் போன்ற இதர சமூக நல வளர்ச்சிப் பணிகளிலும் ஆரம்ப முயற்சி செய்யப்பட்டிருக்கிறது.

பல அபிவிருத்தித் திட்டங்களுக்கு நிதி திரட்டுவது பற்றிய முக்கியத்துவத்தை மக்கள் உணரும்படிச் செய்வது ஆகியவற்றில் பஞ்சாயத்தின் முயற்சி, மொத்தத்தில் நல்ல வெற்றிபெற்று வருகிறது. இப்போதைய அபிவிருத்திப் பணிகளைத் தொடர்ந்து செய்துவருவதோடு, அவற்றை விரிவுபடுத்துவதிலும் பஞ்சாயத்து வெற்றி பெற்றிருக்கிறது.

இத்தகைய பணிகளின் மூலம் கிராமத்தின் சமூக, கலாச்சார, பொருளாதார வாழ்வில் ஒரு புதிய வலிமை தோன்றி வருகிறது.

### பொங்கும் சுறுசுறுப்பு

இன்று, மட்டம்பள்ளி சுறுசுறுப்பு மிக்க ஒரு கிராமமாகக் காட்சியளிக்கிறது. சாலை அமைத்தல், முதியோர் கல்வி வகுப்பு நடத்துதல், புகை கிளம்பாத அடுப்பு பற்றி விளக்கம் சொல்லுதல் அல்லது புதியதொரு கைநுட்பத் தொழில் பயிற்சி— இவ்வாறு ஏதாவதொன்றில் மக்கள் உற்சாகத் தோடு ஈடுபட்டிருக்கிறார்கள். ஒவ்வொருவரும் மனப் பூர்வமாகத் தம் பங்கினைச் செய்து, மக்கள் நிலையை உயர்த்தப் பாடுபடும் பஞ்சாயத்தின் முயற்சி வெற்றி பெற ஒத்துழைக்கிறார்கள்.

மட்டம்பள்ளியின் முன்னேற்றம், பஞ்சாயத்து ஆட்சிப் பரிசோதனையில் வெற்றியைக் காட்டும் ஒரு மைல்கல். அது மட்டுமல்ல; ஒரு கிராம வாழ்வை—அதன்மூலம் நாட்டின் எதிர்கால வாழ்வை—உருவாக்குவதில், பெண்கள் எவ்வாறு பயனுள்ள பணியை ஆற்றமுடியும் என்பதற்கும் ஓர் அடையாளமாகும்!

# பாசனக் கால்வாய் வெட்ட சிரமதானம்

— (o) —

## 10,000 பேர் கொண்ட தொண்டர் படை

உத்திரப் பிரதேச முதன் மந்திரி திருமதி சுசேதா கிருபளானி, ஒரு முறை கொண்டா மாவட்டத்தில் சுற்றுப் பிரயாணம் செய்தபோது சிரமதானப் பணியில் சிறந்து விளங்கும் அபிவிருத்தி வட்டாரத்திற்குத் தாம் ஒரு கோப்பை வழங்கப்போவதாக அறிவித்திருந்தார். அதன்படி ஏற்படுத்தப்பட்ட 'சுசேதா கோப்பை'யை, கொண்டா மாவட்டத்தில் கிராம தானப் பணியைச் சிறந்த முறையில் செய்த கைசாரி வட்டாரம் தட்டிக் கொண்டு விட்டது. இந்த வட்டாரத்தில் நீர்ப்பாசன வேலைகளைச் சிரமதான முறையில் செய்வதற்காக 10 ஆயிரம் பேர் கொண்ட தொண்டர் படையொன்று உரு வாக்கப்பட்டது. இந்த அரிய சாதனையைச் செய்தவர், அப்பஞ்சாயத்து யூனியன் சேர்மன் திரு. தேவேந்திர பிரதாப் சிங். இந்த படை யினர் 49 மைல் நீர்ப் பாசனக் கால்வாய்களை வெட்டுவது, பழைய ஏரிகளை மராமத்து செய்வது, கரைகள் கட்டுவது முதலிய வேலைகளைச் செய்து வருகின்றனர். இதுவரை 29 மைல் நீளக் கால் வாய்களை வெட்டி முடித்துள்ளனர். சுமார் அரை டஜன் ஏரிகளின் கரைகளைச் செப்பனிட்டுள்ளனர்.

---

"பஞ்சாயத்து ராஜ்" இதழிலிருந்து இடம் பெறுபவை:
பக்கங்கள் —7, 8, 15, 16, 31, 32, 33, 34 (8 பக்கங்கள்)
Articles reproduced from "Panchayati Raj" on Pages 7, 8, 15, 16, 31, 32, 33 and 34 (8 pages).

கிராம நலம் பகுதி-2
GRAMANALAM PART 2
பஞ்சாயத்து அரசிதழ்
PANCHAYAT GAZETTE

(பஞ்சாயத்து அபிவிருத்திபற்றிய அரசாங்க ஆணைகள், விதிகள் முதலியவற்றின் சுருக்கம் இந்தப் பகுதியில் இடம்பெறுகிறது.)

## அரசாங்க ஆணைகளின் தமிழாக்கங்களை பஞ்சாயத்துத் தலைவர்களுக்கு அளித்தல்

## Panchayat Administration—Tamil version of important orders—Expeditious distribution to panchayats—Instructions issued.

### (Memorandum No. 153793/P9/R. D. and L. A., dated 27th July 1965.)

பஞ்சாயத்துத் தலைவர்களின் கடமைகள் குறித்து, அவ்வப்போது அரசாங்கம் வெளியிடும் முக்கியமான ஆணைகளின் தமிழாக்கங்களை, பஞ்சாயத்துத் தலைவர்களுக்கு அளிக்கவேண்டும் என்று முடிவு செய்யப்பட்டுள்ளது. அதன்படி, அவ்வாணைகளின் தமிழாக்கங்கள் (ஒவ்வொன்றிலும் தேவையான பிரதிகள்), பஞ்சாயத்து யூனியன் ஆணையாளர்களுக்கு அனுப்பிவைக்கப்படும். அவர்கள், தங்கள் யூனியனிலுள்ள எல்லா பஞ்சாயத்துக்களுக்கும், இந்த தமிழாக்கங்களை அனுப்பிவைக்க, தகுந்த ஏற்பாடுகள் செய்யவேண்டும். தங்கள் கீழுள்ள நிர்வாக அலுவலர்களின் சேவைகளைப் பயன்படுத்தி, மூன்று நாட்களுக்குள், பஞ்சாயத்து யூனியன் ஆணையாளர்கள், இந்த தமிழாக்கங்களை, பஞ்சாயத்துகளுக்கு அனுப்பிவிடவேண்டும்.

(கிராம நல தல நிர்வாகத் துறையின் 27–7–1965 தேதியிட்ட அரசாங்க அறிக்கை எண். 153793-ன் சுருக்கம்.)

---

## மதிய உணவுத் திட்டத்தில், பஞ்சாயத்துத் தலைவர்களின் பொறுப்பு பற்றிய விளக்கம்.

## Elementary Education—Scheme for supply of School Meals to poor pupils in Elementary Schools—Functions of Panchayat Presidents—Clarified.

### (G.O. Ms. No. 1363, E & P. H. dated 20th July 1965.)

மதிய உணவு நிலையங்களுக்கான மானியத் தொகைகளை, செக்குகள் (Cheques) மூலம் அனுப்பும் போது, பஞ்சாயத்துத் தலைவர்களின் பெயருக்குப் பதிலாக, மதிய உணவு நிலையச் செயலாளர்கள் (பள்ளிக்கூட தலைமையாசிரியர்கள்) பெயருக்கு அனுப்ப வேண்டும் என்றும், மதிய உணவுக் குழுக்களின் தலைவர்கள் என்ற முறையில் பஞ்சாயத்துத் தலைவர்கள் பெயரில் இருந்த அஞ்சல் நிலைய சேமிப்பு கணக்குகள், மதிய உணவுக்குழுச் செயலாளர்களுக்கு மாற்றப்பட்டு, செயலாளர்களே கணக்குகளை நிர்வகிக்க வேண்டும் என்றும், 1965–ம் ஆண்டு ஜனவரி மாதம் 21-ம் தேதியிட்ட, கல்வி, பொது சுகாதாரத் துறையின் அரசாங்க ஆணை எண் 104–ல் கல்வி அரசாங்கம் உத்தரவுகள் பிறப்பித்தது.

(2) மேற்கண்ட திருத்தங்களின், விளைவாக மதிய உணவுத் திட்டத்தை செயல்படுத்துவதில் பஞ்சாயத்துத் தலைவர்கள் தீவிரமாகப் பங்குக் கொள்வது சிரமமாக இருக்கும் என்ற சந்தேகம் எழுப்பப்பட்டுள்ளது. மதிய உணவுச் சம்பந்தப்பட்ட கணக்குகளை நிர்வகிப்பது, தணிக்கையாளர்களுக்கு பதில் கூறுவது ஆகிய தொல்லையான பொறுப்புகளிலிருந்து, பஞ்சாயத்துத் தலைவர்களை விடுவித்தால்தான், அவர்கள் மதிய உணவுத் திட்டத்திற்குப் பொது ஜன ஆதரவைத் திரட்டுவதில், அதிகக் கவனம் செலுத்த வழி ஏற்படும் என்பதை அரசாங்கம் தெளிவாக்க விரும்புகிறது. இருந்தபோதிலும், பஞ்சாயத்துத் தலைவரே, மதிய உணவு நிலையங்களின் தலைவராக தொடர்ந்து இருந்து வருவார், மேலும்

அவரது பஞ்சாயத்திலுள்ள எல்லா மதிய உணவு நிலையங்களும் அவரது முழு மேற்பார்வையிலேயே செயல்பட்டு வரும். அவரது பஞ்சாயத்து எல்லையில் உள்ள எந்தப் பள்ளிக்கூடத்திலும், மதிய உணவுத் திட்டம் சரிவர செயல்படுகிறதா என்பதை மேற்பார்வையிடவும், திடீர் சோதனை செய்யவும், அவருக்கு அதிகாரம் உண்டு. மதிய உணவுத் திட்டத்தை நிறைவேற்றுவதில், மக்களின் ஒத்துழைப்பை பெறும் பொறுப்பு பஞ்சாயத்துத் தலைவரிடமே தொடர்ந்து இருந்துவரும். அவர் மதிய உணவு நிலையக் கணக்குகளை அவ்வப்போது பரிசீலிக்கவும், அவை குறிப்பிட்ட காலத்திற்குள் சரிவர எழுதப்பட்டிருக்கின்றனவா என்பதைக் கவனிக்கவும் செய்வார். மூன்று மாதங்களுக்கு ஒரு முறை பஞ்சாயத்துத் தலைவர், மதிய உணவுத் திட்டக்குழுவைக் கூட்டுவார். அப்போது அக்கமிட்டியின் செயலாளர், மதிய உணவுப் பற்றிய முழுமையான கணக்கு விவரங்களை, குழுவின் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கவேண்டும், தேவைப்பட்டால், மூன்று மாதங்களுக்கும் குறைந்த கால இடைவெளியில், தக்க முன்னறிவிப்புடன், தேதியைக் குறிப்பிட்டு, குழுவைக் கூடுமாறு பஞ்சாயத்துத் தலைவர் அழைக்கலாம்.

(3) குறிப்பிட்ட சில வரம்புகளுக்குட்பட்டு, பஞ்சாயத்தில் நடைபெறும் துவக்கப் பள்ளிகளுக்கான மதிய உணவு நிலையத்திற்கு உதவித் தொகை அளிக்க, 1962-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 18-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை எண் (கல்வி) 126, மற்றும் 1962-ம் ஆண்டு ஜனவரி மாதம் 24-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை எண் (கல்வி) 905 ஆகியவற்றில் பஞ்சாயத்துகளுக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. ஒரே பஞ்சாயத்து எல்லையில் இயங்கி வரும் பல்வேறு பள்ளிக்கூடங்களுக்கு, உதவித் தொகை அளிப்பதில் வித்தியாசமான விகிதாசாரங்கள் மேற்கொள்ளப்பட்டு வருவது அரசாங்கத்தின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளது. ஒரே பஞ்சாயத்து எல்லையில் இயங்கிவரும் மதிய உணவு நிலையங்களுக்கு அளிக்கப்படும் உதவித் தொகையின் விகிதாச்சாரம், ஒரே மாதிரியாக இருக்க வேண்டும் என்பதும், ஒரு பள்ளிக் கூடத்திற்கும், இன்னொரு பள்ளிக் கூடத்திற்கும் வேறுபாடு இருக்கக் கூடாது என்பதும் அரசாங்கத்தின் விருப்பமாகும்.

(கல்விப் பொதுச் சுகாதாரத் துறையின் 1965-ம் ஆண்டு ஜூலை மாதம் 20-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை எண். 1363).

---

## கிராமப் பஞ்சாயத்துக்கள் மின்சாரக் கட்டணங்களைச் செலுத்துதல்—நடைமுறையில் மாற்றம்

## Panchayats—Village Panchayats—Payment of Elecricity Charges to the Madras State Electricity Board—Procedure—Orders issued.

### (G.O. Ms. No. 1563, R. D. & L. A., dated 12th July 1965.)

கிராமப் பஞ்சாயத்துக்கள் வெளியாருக்கு ரூ. 30-க்கு மேற்பட்ட தொகை அளிக்க வேண்டியிருப்பின், அந்தத்தொகை, சம்பந்தப்பட்ட நபருக்கு 'கொடுப்பு ஆணை' (Pay Order) மூலமே அளிக்கப்பட வேண்டும் என்பதே, தல நிர்வாகத் துறையின் 1960-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 24-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 1428, மற்றும் கிராம நல தல நிர்வாகத் துறையின் 1964-ம் ஆண்டு நவம்பர் மாதம் 9-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 2329 ஆகியவற்றில் அடங்கியுள்ள உத்தரவுகளாகும். மின்சாரக் கட்டணங்களை, கிராமப் பஞ்சாயத்துத் தலைவர்கள், தமிழ்நாடு மின்சார போர்டுக்கு செலுத்துவது பற்றிய பிரச்சினை, சில காலமாகவே ஆலோசனையில் இருந்து வந்துள்ளது. மின்சாரக் கட்டணங்களைச் செலுத்தி, கணக்குகளை தீர்க்கும் வகையில், பஞ்சாயத்துக்கள் அளிக்கும் 'கொடுப்பு ஆணை'களை, மின்சார போர்டு ஏற்றுக்கொள்வதில்லை என்று, முறையீடுகள் வந்துள்ளன. தமிழ்நாடு மின்சார போர்டுக்கு இந்த விஷயம் எடுத்துக்காட்டப்பட்டபோது, பஞ்சாயத்து யூனியன் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளக்கூடிய வகையில், பஞ்சாயத்துக்கள் அளிக்கும் 'கொடுப்பு ஆணைகளை', மின்சார போர்டு ஏற்றுக்கொள்ளக்கூடியதாய் இல்லையென்றும், ஆனால் போர்டின் பட்டியல்களுக்கு (Bills), மேற்பார்வை பொறியாளர் (Superintending Engineer), தலைமை கணக்கர்ளர் (Chief Accountant) பெயரில் பணமோ அல்லது 'செக்'கோ (Cheque) அளித்தால் ஏற்றுக்கொள்ளக் கூடும் என்று மின்சார போர்டு கூறியது.

(2) கிராமப் பஞ்சாயத்துக்கள், தமிழ்நாடு மின்சார போர்டுக்கு, மின்சாரக் கட்டணங்களை செலுத்துவதில், கீழ்க்கண்ட நடைமுறை பின்பற்றப்படவேண்டும் என்று அரசாங்கம் ஆணைப் பிறப்பிக்கிறது. இது மேற்கூறிய ஆணைகளில் அடங்கியுள்ள உத்தரவுகளுக்கு ஒரு பகுதி-திருத்தமாகும்:

அதன்படி, ஒரு பஞ்சாயத்து யூனியனிலுள்ள எல்லா கிராமப் பஞ்சாயத்துக்களும் செலுத்த

வேண்டிய மின்சாரக் கட்டணங்களைப் பொருத்து ஒரு முழுமையான பட்டியலைத் தயாரித்து, அதை சம்பந்தப்பட்ட பஞ்சாயத்து யூனியன் ஆணையாளருக்கு அனுப்புமாறு தமிழ்நாடு மின்சார போர்டு கேட்டுக்கொள்ளப்படுகிறது. அந்த முழுப் பட்டியலில், ஒவ்வொரு பஞ்சாயத்தும் செலுத்த வேண்டிய கட்டணங்கள் தெளிவாக இருத்தல் வேண்டும். அதன் பிறகு, அந்தக் கட்டணங்களைச் செலுத்துவதற்காக, தமிழ்நாடு மின்சார போர்டைச் சேர்ந்த, மேற்பார்வை பொறியாளர்/தலைமை கணக்காளரின் பெயருக்கு, தல நிதி சேமிப்புக் கணக்கு I-ன் (Local Fund Deposit Account No. I) கீழ், பஞ்சாயத்து யூனியன் ஆணையாளர் ஒரு 'செக்'கை அளிப்பார். அதன்பின், அந்தப் பட்டியலில் உள்ள தொகைக்கு கிராமப் பஞ்சாயத்துத் தலைவர்களிடமிருந்து, தன்னுடைய பெயருக்கு, பஞ்சாயத்து யூனியன் ஆணையாளர், 'கொடுப்பு ஆணை'களை பெற்றுக்கொள்ள வேண்டும். இவ்வாறு கிராமப் பஞ்சாயத்துத் தலைவர்கள் 'கொடுப்பு ஆணை'கள் மூலம் அளித்தத் தொகைகள் பஞ்சாயத்து யூனியன் நிதிகளில் வரவு வைக்கப் படவேண்டும்.

(3) இந்த ஆணையிலுள்ளவற்றை, எல்லா கிராமப் பஞ்சாயத்துத் தலைவர்கள், மற்றும் எல்லா பஞ்சாயத்து யூனியன் ஆணையாளர்களின் கவனத்திற்குக் கொண்டுவருமாறும், இதில் உள்ள உத்தரவுகள் சரிவர பின்பற்றப்படுவதைப் பார்த்துக்கொள்ளும்படியும், எல்லா மாவட்ட ஆட்சித் தலைவர்கள் (சென்னை நீங்கலாக) மற்றும் கோயம்புத்தூர் கூட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் ஆகியோர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

(கிராம நல தல நிர்வாகத் துறையின் 1965 ம் ஆண்டு ஜூலை மாதம் 12-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 1563.)

---

## சேலம் மாவட்டம், சேலம், தர்மபுரி மாவட்டங்களாகப் பிரிக்கப்படுகிறது

## Jurisdiction—Bifurcation of Salem District—Recommendation of the Special Officer—Orders passed and notification under the Madras District Limits Act—Published.

### (G.O. Ms. No. 1924, Revenue, dated 25th June 1965.)

அறிவிப்பு.

1865-ம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட எல்லைகள் சட்டத்திலுள்ள (1865-ம் ஆண்டு, தமிழ் நாடுச் சட்டம் 1) பிரிவு—1-ல் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாடு கவர்னர் அவர்கள், 1965-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 2-ம் தேதி முதல்,

(a) சேலம் மாவட்டம் (சேலம் மாவட்டம், தர்மபுரி மாவட்டங்களாக) இரண்டாகப் பிரிக்கப் பட வேண்டுமென்றும்,

(b) சேலம், ஆத்தூர், இராசிபுரம், நாமக்கல், சங்கரி, திருச்செங்கோடு, ஓமலூர், ஆகிய 7 தாலுகாக்கள், சேலம் மாவட்டத்தில் இடம் பெறும் என்றும்,

(c) ஹோசூர், கிருஷ்ணகிரி, தர்மபுரி, ஹரூர் ஆகிய 4 தாலுகாக்கள், தர்மபுரி மாவட்டத்தில் இடம்பெறும் என்றும் ஆணைப் பிறப்பிக்கிறார்.

(வருவாய்த்துறையின் 1965 ம் ஆண்டு ஜூலைமாதம் 25ம் தேதியிட்ட அரசாங்க ஆணை எண். 1924ன் சுருக்கம்.)

---

## பஞ்சாயத்து, பஞ்சாயத்து டவுன்ஷிப் அலுவலர்களுக்கு அதிக அகவிலைப்படி

## Allowance—Dearness Allowance—Employees of Panchayats and Panchayat Townships—Rates on revision—Orders issued.

### (G. O. Ms. No. 1618, R. D. and L. A. dated 19th July 1965.)

1958-ம் ஆண்டு தமிழ்நாடு பஞ்சாயத்து சட்டத்தின் (1958-ம் ஆண்டு தமிழ்நாடுச் சட்டம் 35) பிரிவு 57-ல் உள்ள, உட்பிரிவு 3-ல் வழங்கப் பட்டுள்ள அதிகாரங்களைப் பயன்படுத்தி, பஞ்சாயத்துக்கள், மற்றும் பஞ்சாயத்து டவுன் ஷீப்புக்கள் ஆகியவற்றில் பணிபுரியும் அலுவலர்கள், அகவிலைப்படியைப் பெறுவதற்காக, அவர்களின் சம்பள விகிதம், மற்றும் அதன் வரம்புகள் கீழ்க் கண்டவாறு மாற்றப்படுகின்றன என்று அரசாங்கம் ஆணை பிறப்பிக்கிறது. இந்த உத்தரவு 1965-ம்

ஆண்டு ஜூலை மாதச் சம்பளம் 1965-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 1-ம் தேதி கொடுக்கப்படுவதிலிருந்து அமுலுக்கு வரும்.

| சம்பள வரம்பு | அகவிலைப்படி விகிதம் |
|---|---|
| ரூ. 89 வரை | ரூ. 33 |
| ரூ. 90 முதல் 149 வரை | ரூ. 50 |
| ரூ. 150 முதல் 399 வரை | ரூ. 81 |

2. அகவிலைப் படியைக் கணக்கிடும்போது, விசேஷ சம்பளத்தையும் கணக்கில் சேர்த்துக் கொள்ளுமாறு அரசாங்கம் ஆணை பிறப்பிக்கிறது.

3. மேற்கண்டவாறு அனுமதிக்கப்பட்டுள்ள அதிக அகவிலைப்படி பஞ்சாயத்துக்கள், பஞ்சாயத்து டவுன் ஷிப்புகளில் வேலை செய்யும் குறிப்பிட்ட சம்பளம் பெறும் சுகாதாரப் பணியாளர்களுக்கும் (Sanitary workers) சாட்டிய தொகை (work-charged) யிலிருந்து சம்பளம் பெறும் அலுவலர்களுக்கும் சிறு செலவு தொகை (Contingencies) யிலிருந்து குறிப்பிட்ட மாதச் சம்பளம் பெறும் முழுநேர அலுவலர்களுக்கும், 1965-ம் ஆண்டு ஜூலை மாதச் சம்பளம், 1965-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 1-ம் தேதியில் கொடுக்கப்படுவதிலிருந்து பொருந்தும். ஆனால், பஞ்சாயத்துக்கள், பஞ்சாயத்து டவுன் ஷிப்புக்களில் வேலை செய்யும் பகுதிநேர பணியாளர்களுக்கு, இந்த ஆணையில் அனுமதிக்கப்பட்டுள்ள அதிக அகவிலைப்படி, பொருந்தாது.

(கிராம நல-தல நிர்வாகத்துறையின் 19—7—65 தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 1618-ன் சுருக்கம்).

---

## பஞ்சாயத்து யூனியன் மன்ற அலுவலர்களுக்கு அதிக அகவிலைப்படி

## Allowances—Dearness Allowance—Staff in the Panchayat Union Councils—Revision of rates and pay limits for eligibility—Orders issued.

### (G. O. Ms. No. 1619, R.D. and L.A., dated 19th July 1965.)

1958-ம் ஆண்டு தமிழ்நாடு பஞ்சாயத்துச் சட்டத்தின் (1958-ம் ஆண்டு தமிழ்நாடுச் சட்டம் 35) பிரிவு 57-ல் உள்ள, உட்பிரிவு (3)-ல் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைப் பயன்படுத்தி, பஞ்சாயத்து யூனியன் மன்றங்களில் பணிபுரியும் அலுவலர்கள் (ஆசிரியர்கள் நீங்கலாக) அகவிலைப் படியைப் பெறுவதற்காக, அவர்களின் சம்பள விகிதம், மற்றும் அதன் வரம்புகள் கீழ்க்கண்டவாறு மாற்றப்படுகின்றன என்று அரசாங்கம் ஆணை பிறப்பிக்கிறது. இந்த உத்தரவு 1965-ம் ஆண்டு ஜூலை மாதச் சம்பளம் 1965-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 1-ம் தேதியில் கொடுக்கப்படுவதிலிருந்து அமுலுக்கு வரும்.

| சம்பள வரம்பு | அகவிலைப்படி விகிதம் |
|---|---|
| ரூ. 89 வரை | ரூ. 33 |
| ரூ. 90 முதல் ரூ. 149 வரை | ரூ. 50 |
| ரூ. 150 முதல் ரூ. 209 வரை | ரூ. 65 |
| ரூ. 210 முதல் ரூ. 399 வரை | ரூ. 81 |
| ரூ. 400 முதல் 700 வரை | ரூ. 90 |

2. அகவிலைப்படியைக் கணக்கிடும்போது, விசேஷ சம்பளத்தையும் கணக்கில் சேர்த்துக்கொள்ளுமாறு அரசாங்கம் ஆணை பிறப்பிக்கிறது.

3. மேற்கண்டவாறு அனுமதிக்கப்பட்டுள்ள அதிக அகவிலைப்படி, சாட்டிய தொகை (work charged) யிலிருந்து சம்பளம் பெறும் அலுவலர்களுக்கும், சிறு செலவு தொகை (Contingencies) யிலிருந்து குறிப்பிட்ட மாதச் சம்பளம் பெறும் முழுநேர அலுவலர்களுக்கும், 1965-ம் ஆண்டு ஜூலை மாதச் சம்பளம் 1965-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 1-ந் தேதியன்று கொடுக்கப்படுவதிலிருந்து பொருந்தும். ஆனால் பஞ்சாயத்து யூனியன் மன்றங்களில், வேலை செய்யும் பகுதி நேர பணியாளர்களுக்கு, இந்த ஆணையில் அனுமதிக்கப்பட்டுள்ள அதிக அகவிலைப்படி பொருந்தாது.

(கிராம நல தல நிர்வாகத் துறையின் 19-7-1965 தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 1619ன் சுருக்கம்.)

---

## குடும்பக் கட்டுப்பாடுத் திட்டம்—அறுவைச் சிகிச்சையைப் பரப்புவதில், அரசாங்கப் பணியாளர்களும் பங்கு பெறலாம்.

## Family Planning—Intensive Scheme for popularisation of surgical method—Canvassing of eligible fathers by Government servants during out-of-office hours—Payment of remuneration—Orders issued.

**(G.O. Ms. No. 1092, E and P.H., (Health) dated 8th May 1965.)**

குடும்பக்கட்டுப்பாடு திட்டத்தில் துரிதமாகவும் பெருமளவிலும் வெற்றியைக்காண மாநில அரசாங்கம் ஒரு விரைவுத் திட்டத்தை (Crash Programme) துவக்கியுள்ளது. இந்தத்திட்டத்தின்கீழ், தகுதியான தந்தையர்களை அணுகி, அவர்களை அறுவை சிகிச்சை செய்துகொள்ளத் தூண்டுமாறு செய்ய, நேரடியாகப் பணிபுரிபவர்களை (Field Workers) நியமிக்க அரசாங்கம் அனுமதி தந்துள்ளது. ஆனால் இந்தப் பணியாளர்கள் அறுவை சிகிச்சை செய்து கொண்டவர்களாக இருக்க வேண்டும். இவ்வாறு தூண்டி, அறுவை செய்யப்பட்ட ஒவ்வொரு சிகிச்சைக்கும், அந்த நேரடிப் பணியாளர்களுக்கு ரூ. 10 வீதம் சன்மானம் அளிக்க, அரசாங்கம் அனுமதி தந்துள்ளது. இந்தத் திட்டம் மேலும் நன்கு பரவுவதற்காக, இம்மாநிலத்தில் அறுவை சிகிச்சை செய்துகொண்டுள்ள எல்லா அரசாங்கப் பணியாளர்களும் (மருத்துவமனை பணியாளர்களையும் சேர்த்து) அவர்களுக்கு அலுவல் இல்லாத நேரங்களில், இந்த அறுவை சிகிச்சை பற்றி பிரச்சாரம் செய்து, அதன்பேரில் அங்கீகரிக்கப்பட்ட அரசாங்க அறுவை சிகிச்சை நிலையத்தில், அறுவை செய்யப்பட்ட ஒவ்வொரு சிகிச்சைக்கும், ரூ. 10 வீதம், அந்தந்தப் பணியாளர்களுக்குச் சன்மானம் அளிக்க அனுமதிக்கலாம் என்று மருத்துவத் துறை இயக்குநர் கருத்து தெரிவித்துள்ளார். மருத்துவத் துறை இயக்குநரின் மேற்கண்ட கருத்தை, அரசாங்கம் பரிசீலனை செய்தபின், கீழ்க்கண்டவாறு ஆணை பிறப்பிக்கிறது.

2. இம்மாநிலத்தில், அறுவை சிகிச்சை செய்து கொண்டுள்ள எல்லா அரசாங்கப் பணியாளர்களுக்கும் (மருத்துவமனை பணியாளர்களையும் சேர்த்து) அவர்களுக்கு அலுவல் இல்லாத நேரங்களில், இந்த அறுவை சிகிச்சை பற்றி பிரச்சாரம் செய்ய அனுமதி அளிக்கப்படுவதுடன், அங்கீகரிக்கப்பட்ட அரசாங்க அறுவை சிகிச்சை நிலையத்தில், அவர்களால் பிரச்சாரம் செய்து, தூண்டப்பட்டு, செய்யப்பட்ட ஒவ்வொரு சிகிச்சைக்கும் ரூ. 10 (ரூபாய் பத்து மட்டும்) வீதம், அந்தந்தப் பணியாளர்களுக்கு சன்மானம் அளிக்கவும் அனுமதி தந்து, அரசாங்கம் ஆணை பிறப்பிக்கிறது.

(கல்வி, பொதுச் சுகாதாரத் துறையின் 1965-ம் ஆண்டு மே மாதம் 8-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 1092-ன் சுருக்கம்.)

---

## குடும்பக் கட்டுப்பாடுத் திட்டம்—அறுவைச் சிகிச்சைக்கான முழுநேர பிரிவு நாகப்பட்டினத்திலும் மதுரையிலும் இயங்கும்.

## Family Planning—Intensive Scheme for popularisation of surgical methods—Opening of full time vasectomy surgical units in Nagapattinam and Madurai—Orders issued.

**[G. O. Ms. No. 531, E and P.H., (Health) dated 10th March 1965.]**

பன்னிரெண்டு மாவட்ட மருத்துவமனைகளிலும், 12 முழு நேர அறுவை சிகிச்சை பிரிவுகளை ஏற்படுத்த வேண்டுமென்று அரசாங்கம் ஏற்கெனவேயே உத்தரவுகள் பிறப்பித்துள்ளது. இது தவிர நாகப்பட்டினம், மதுரை ஆகிய இடங்களில் உள்ள அரசாங்க மருத்துவ மனைகளிலும் இதே போன்ற பிரிவுகளை நிறுவ வேண்டுமென்று, மருத்துவத் துறை இயக்குநர், தன்னுடைய 1964-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 26-ம் தேதியிட்ட கடிதத்தில் அரசாங்கத்திடம் கோரியுள்ளார். அரசாங்கம் மேற்கண்ட கோரிக்கையை பரிசீலனை செய்தபின், கீழ்க்கண்டவாறு ஆணை பிறப்பிக்கிறது:

(2) நாகப்பட்டினத்திலுள்ள, மாவட்ட தலைமை மருத்துவ மனையிலும், மதுரையிலுள்ள அரசாங்க எர்ஸ்கின் மருத்துவ மனையிலும், முழு நேர அறுவை சிகிச்சை பிரிவுகள் துவக்கப்பட வேண்டும் என்று, அரசாங்கம் ஆணை பிறப்பிக்கிறது. இந்தப் பிரிவுகளில் அறுவை சிகிச்சை செய்துகொண்டவர்கள், 1960-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 17-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 2101(சுகாதாரம்)-ல் அனுமதிக்கப்பட்ட சலுகைக்கு தகுதியுடையவர் ஆவார்கள்.

(கல்வி, பொதுச் சுகாதாரத் துறையின் 1965-ம் ஆண்டு மார்ச் மாதம் 10-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 531-ன் சுருக்கம்.)

குழந்தைகள் பூங்கா

## Social Education Programme—Provision for Children's Parks—Clarification—Issued

### (Memorandum No. 183943/E-3, R.D. and L.A., dated 22nd May 1965.)

குழந்தைகளுக்காக பூங்காக்கள் ஏற்படுத்தி, அவற்றில் ஊஞ்சல், சருக்கு மரம், இணைக்கம்பிகள், சீ-சா (See-Saw) போன்ற விளையாட்டுக் கருவிகளை அமைக்க ஏற்படும் செலவில் அதிக அளவாக ரூ. 500 அல்லது 50 சதவிகிதத்தை (இதில் எது குறைவோ அந்தத் தொகையை) மானியமாக அளிக்க, கிராம நல-தல நிர்வாகத் துறையின் 1964-ம் ஆண்டு மார்ச்சு மாதம் 18-ம் தேதியிட்ட அரசாங்க அறிக்கை எண் 104875-ல் உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டன.

2. மேற்கூறிய அறிக்கையில் அடங்கியுள்ள உத்தரவுகளைப் பொறுத்து, உதவி அபிவிருத்திக் கமிஷனரும் [சமூக நலம்], சில பஞ்சாயத்து யூனியன் ஆணையாளர்களும், கீழ்க்கண்டவற்றைப் பற்றி தெளிவுரை கோரியுள்ளார்கள்.

(1) இந்த ரூ. 500 முழு வட்டாரத்திற்குமா, அல்லது ஒவ்வொரு பஞ்சாயத்திற்குமா, அல்லது ஒவ்வொரு சமுதாயக் கல்வி நிலையத்திற்குமா?

(2) இந்த அரசாங்க மானியத்தைப் பயன்படுத்தி ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனிலும் எத்தனை பூங்காக்கள் ஏற்படுத்தப்படவேண்டும்?

(3) இந்த மானியம் ஐந்தாண்டுகளுக்குமா?

அரசாங்கம், மேற்கண்டவற்றைப்பற்றி ஆலோசனை செய்து பின்வருமாறு விளக்கம் அளிக்கிறது;—

குழந்தைகளுக்காகப் பூங்காக்கள் ஏற்படுத்திஅவற்றில் ஊஞ்சல், சருக்கு மரம், இணைக்கம்பிகள், சீ-சா போன்ற விளையாட்டுக் கருவிகளை அமைக்க, ஏற்படும் செலவில், அதிக அளவாக ரூ. 500 அல்லது 50 சதவீதத்தை (இதில் எது குறைவாக உள்ளதோ அந்தத் தொகையை) ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனுக்கும், மானியத் தொகையாக அளிக்கவேண்டும். இந்தத் தொகையைக்கொண்டு பஞ்சாயத்து யூனியன்கள் எத்தனை பூங்காக்கள் வேண்டுமானாலும் ஏற்படுத்தலாம். இந்தத் தொகை ஒவ்வொரு ஆண்டுக்குமாகும். மேலும் எஞ்சியுள்ள திட்ட காலத்திற்கும் பொருந்தும்.

(கிராம நல-தல நிர்வாகத் துறையின் 22—5—65 தேதியிட்ட அரசாங்க அறிக்கை எண் 183943.)

---

தல நிர்வாகங்களுக்குக் கடன்களைத் தவணைகளில் அளித்தல் பற்றிய நடைமுறை,

## Loans—Loans to Local Bodies—Procedure of disbursing the loans in instalments—Orders—Issued

### (G.O. Ms. No. 1250, R.D. and L.A., dated 31st May 1965.)

தலநிர்வாகங்களுக்கு, அரசாங்கம் அளிக்கும் கடன்களில் ஏற்படும் தாமதத்தை தவிர்க்க, கடன்களை தவணைகளில் அளிப்பதைப் பொறுத்து ஒரு நடைமுறையை ஏற்படுத்த அரசாங்கம் ஆலோசனை செய்தது. தல நிர்வாகங்களுக்கு தவணைகளில் கடன் வழங்க வேண்டியமுறை ஏற்கனவேயே நகரத்திட்டம், வீட்டு வசதித் திட்டங்களில் புகுத்தப்பட்டுள்ளது. இவ்வாறு தவணைகளில் கடன் வழங்குவது பற்றிய நடைமுறை, இனி ரஸ்தாக்கள், பஸ் நிலையம், மார்க்கெட்டுகள் போன்ற மற்றும் சில குறிப்பிட்ட வேலைகளுக்கும் விரிவு படுத்தப்படும்.

2. இக்கடன் தொகை ரூ. 25,000-க்கு மேற்பட்டிருந்தாலும், நிறைவேற்றப்படவேண்டிய வேலை இரண்டு அல்லது மூன்று நிதியாண்டுகளுக்கு மேலாகும் என்று எதிர்பார்க்கப்பட்டாலும், இந்த நடைமுறையைப் பின்பற்ற வேண்டும். இம்மாதிரி விஷயங்களில் திட்டத்திற்கு அளிக்கப்படவேண்டிய தொகைக்கு முதலில் அனுமதி தரப்படும்; பிறகு திட்டத்தின் வெற்றியைப் பொறுத்து, அனுமதிக்கப்பட்ட கடனைக் குறிப்பிட்ட தவணைகளில் அளிக்கப்படும். கடனை அனுமதித்து உத்தரவுகள் பிறப்பிக்கப்படும் அதே சமயத்திலேயே, முதல் தவணையும் அளிக்கப்படும். அதன் பிறகு, முதல் தவணைத்தொகை சரிவர பயன்படுத்தப்பட்டுள்ளதா என்பதை அறிந்த கொண்ட பின், மற்ற தவணைத்தொகைகள் அளிக்கப்படும். இதன் விபரங்கள் பின்வருமாறு :—

(i) ஒரு காரியத்திற்காக மதிப்பிடப்பட்டுள்ள தொகையில் முழுவதுமாகவோ, அல்லது அதில் ஒரு பகுதியையோ, கடனாக அரசாங்கத்திடமிருந்து பெற்று நிறைவேற்ற விரும்பும் ஒரு தல நிர்வாகம், திட்டங்களைத் தயாரித்தல், மதிப்பீடு செய்தல் போன்ற ஆரம்பவேலைகளை முதலில் முடித்துவிட வேண்டும். அதன்பிறகே, கடனைக்கோரி அரசாங்கத்திற்கு மனுச்செய்து கொள்ளவேண்டும். ஒரே ஒரு கடன் மனு இருந்தால் போதும்.

(ii) நிறைவேற்ற வேண்டிய திட்டத்தின் பல்வேறு பகுதிகள், ஒவ்வொரு பகுதியையும்

செயல்படுத்த ஏற்படும் செலவுகள் மற்றும் அவற்றுக்கான காலவரையறை ஆகியவை பற்றிய விபரங்கள் தேவைப்படும். மதிப்பீட்டைத் தயாரிக்கும் அதிகாரிகள், திட்டத்தின் பல்வேறு நிலைகளில் ஒவ்வொன்றுக்கும் ஏற்படக்கூடும் செலவுகளை குறிப்பிடவேண்டும். கடன்கள் தவணைகளில் அளிக்கப்படுகையில், ஒவ்வொரு தவணையிலும் அனுமதிக்கப்படும் தொகை, ஆறுமாத தேவைகளுக்கு மேற்படா வண்ணம் இருப்பதற்காக, மதிப்பீட்டை சோதனை செய்யும் பெரிய அதிகாரிகள், திட்டத்திற்காக ஏற்படும் செலவுகளைப் பொறுத்து ஒரு அட்டவணையைத் தயாரித்து, அதன் நகல் ஒன்றை கடன் மனுவுடன் சேர்த்து அனுப்பவேண்டும்.

(iii) கடனைத்தருமாறு அரசாங்கத்தைக் கேட்டுக்கொண்டும், கடனை வழங்க அரசாங்கம் நிர்ணயித்த தவணைகளை ஒப்புக்கொண்டும், கடன் தொகையை அளிக்கும்போது அப்போது அமுலில் உள்ள வட்டி விகிதப்படி, ஒவ்வொரு தவணைக்கும் வட்டி கொடுக்க ஒப்புக்கொண்டும், தல நிர்வாகங்கள் தீர்மானங்கள் நிறைவேற்றவேண்டும்.

(iv) அதன்பிறகு நிதிநிலைமையை ஒட்டி, கடன் தொகையை முழுமையாகவோ, பகுதியாகவோ, குறிப்பிட்ட தவணைகளில் வழங்கும் வரம்புக்கு உட்பட்டு, அரசாங்கம் கடனை அனுமதிக்கும். கடனை அனுமதித்து பிறப்பிக்கப்படும் உத்தரவிலேயே ஒவ்வொரு தவணைக்கான தொகையும் பற்றி குறிப்பிடப்படும். திட்டத்தின் ஒரு பகுதிக்கான செலவைப்பொறுத்தவரையில், அரசாங்கம் கடனை அனுமதிக்கையில், அந்தத் திட்டத்தின் எஞ்சியுள்ள பகுதிக்கு ஏற்படும் செலவுகளை, அந்த தல நிர்வாகம், சரிக்கட்டுமா என்பது பற்றி, ஆராயப்படும். கடனை அனுமதித்து, உத்தரவிடப்படும் சமயத்திலேயே முதல் தவணைத்தொகை வழங்கப்படும். நில ஆர்ஜிதம் (Land Acquisition) சம்பந்தப்பட்டதாய் இருந்தால், அது முடிவடைந்த பின்னரே, முதல் தவணை வழங்கப்படும்.

4. இரண்டாவது மற்றும் அதற்கடுத்த தவணைகளைப்பொறுத்தவரையில், முந்தைய தவணைத் தொகை பயன்படுத்தப்பட்டு, அடுத்த தவணைத் தொகைத் தேவை என்று அரசாங்கத்தை கேட்டுக்கொண்டு அந்த நிர்வாக அதிகாரி ஒரு அத்தாட்சியை அனுப்பினால் போதும். அதன் பின், அரசாங்கம் மறு தவணைக்கு ஆணை பிறப்பிக்கும்.

(கிராம நல-தல நிர்வாகத் துறையின் 31—5—1965 தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 1250-ன் சுருக்கம்.)

---

## பஞ்சாயத்துத் தலைவர், உப தலைவர் தேர்தல்கள் விதிகளில் திருத்தம்.

## Rules—Madras Panchayats Act, 1958—Election of Presidents and Vice-Presidents of Panchayats—Amendment—Issued.

### (G.O. Ms. No. 1181, R.D. and L.A., dated 24th May 1965.)

இவ்வாணையின் பிற்சேர்க்கையிலுள்ள அறிவிப்பு செயிண்ட் ஜார்ஜ் கோட்டை அரசிதழில் பிரசுரமாகும்.

### பிற்சேர்க்கை

### அறிவிப்பு

1961-ம் ஆண்டு தமிழ்நாடு பஞ்சாயத்துக்கள் (தலைவர்கள், உப தலைவர்கள் தேர்தல்) விதிகளுக்கு 1958-ம் ஆண்டு தமிழ்நாடு பஞ்சாயத்துச் சட்டத்தின் (1958-ம் ஆண்டு தமிழ்நாடுச் சட்டம் 35) 30-வது பிரிவில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, 1961-ம் ஆண்டு மே மாதம் 10-ம் தேதியிட்ட, செயின்ட் ஜார்ஜ் கோட்டை அரசிதழின் பிரிவு 5, பக்கங்கள் 10—13-ல் பிரசுரிக்கப்பட்டுள்ள கிராம நல தல நிர்வாகத் துறையின் 1961-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 26-ம் தேதியிட்ட 1961-ம் ஆண்டு அறிவிப்பு எஸ். ஆர். ஓ. எண் ஏ 489 (அறிவிப்பு எண் 13)-க்கு, (பிறகு திருத்தப்படி) தமிழ்நாடு கவர்னர் அவர்கள் கீழ்க்கண்ட திருத்தங்களைச் செய்கிறார்.

### திருத்தம்

கூறப்பட்டுள்ள விதிகளில் 19-வது விதியின் (3)-வது துணை விதியிலுள்ள, 'பஞ்சாயத்து அலுவலகத்தில்' என்ற வார்த்தைகளுக்குப் பதிலாக "அந்த பஞ்சாயத்து உள்ள பஞ்சாயத்து யூனியன் அலுவலகம்" என்ற வார்த்தைகள் பூர்த்தி செய்யப்படும்.

(கிராம நல-தல நிர்வாகத் துறையின் 1965-ம் ஆண்டு மே மாதம் 24-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 1181.)

## பஞ்சாயத்துக்களில் வானொலிப் பெட்டிகளை அமைத்தல்.

## Installation of additional radio sets in the Panchayats—Certain clarifications—Issued.

## (Memorandum No. 110909/P9/R. D. and L. A., dated 7th July 1965.)

பஞ்சாயத்துக்களில் கூடுதலாக வானொலிப் பெட்டிகளை ஏற்படுத்துவது பற்றி, கிராம நல தல நிர்வாகத்துறையின் 1965-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 26-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 480-ல் உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டுள்ளது. [இவ் வாணையின் தமிழாக்கத்தை 'கிராம நலம்' ஏப்ரல் மாத இதழ், பாகம் II, பக்கம் (ii)-ல் காண்க]. அதன்பேரில், வடஆர்க்காடு மாவட்ட ஆட்சித் தலைவர் பின் கண்டவற்றைப் பற்றி, விளக்கம் கோரியுள்ளார்.

(i) கூடுதலாக, வானொலிப்பெட்டியை அமைத் துக்கொள்ள, நகரப் பஞ்சாயத்துக்களுக்கு உதவித் தொகை உண்டா?

(ii) மேற்கண்ட ஆணை பிறப்பிக்கப்பட்ட பின் பும், ஒரு பஞ்சாயத்து, அதனுடைய நிதியிலிருந்து முழுச் செலவு செய்து, கூடுதலான வானொலிப் பெட்டியை வாங்கி, அதனுடைய குக்கிராமத்திற்கு அளித்த பிறகு, மற்றொரு வானொலிப்பெட்டியை வாங்க, அந்தப் பஞ்சாயத்து உதவித் தொகையைப் பெறமுடியுமா?

(iii) ஒரு குக்கிராமம் மட்டும் உள்ள ஒரு பஞ்சாயத்து, உதவித் தொகை திட்டத்தின் கீழ், கூடுதலான வானொலிப் பெட்டியைப் பெற தகுதி யுண்டா?

மேற்கண்டவற்றைப் பற்றி கீழ்க்கண்டவாறு விளக்கம் அளிக்கப்படுகிறது:—

(i) கூடுதலாக, வானொலிப் பெட்டிகளை ஏற் படுத்த, நகரப் பஞ்சாயத்துக்களுக்கு உதவித் தொகை கிடையாது.

(ii) கூடுதலாக வாங்கப்போகும் அந்த வானொலிப் பெட்டி, மற்றொரு குக்கிராமத்திற்காக இருந்தால் தான், அந்தப் பஞ்சாயத்து உதவித் தொகையைப் பெற முடியும்; மேலும் உதவித் தொகையைப் பெற, கிராம நல தல நிர்வாகத் துறையின் 1965-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 26-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 480-ல் உள்ள மற்ற வரம்புகளுக்கும் உட்பட்டிருக்கவேண்டும்;

(iii) ஒரு குக்கிராமம் மட்டுமுள்ள பஞ்சாயத் துக்கள், உதவித் தொகைத் திட்டத்தின்கீழ், கூடு தலான வானொலிப் பெட்டியைப் பெற முடியாது.

(கிராம நல-தல நிர்வாகத்துறையின் 7-7-1965 தேதியிட்ட அரசாங்க அறிக்கை எண் 110909).

---

## பஞ்சாயத்துக்கள் வரிகளை வசூலித்தல்—வருவாய் விரயமாவதை தடுத்தல்.

## Taxes—Panchayat taxes— Prompt Collection and plugging up of leakage in Revenue—Instructions—Issued.

## (G. O. Ms. No. 1475 R.D. and L.A., dated 29th June 1965.)

பஞ்சாயத்துக்கள் வசூலிக்க வேண்டிய வரித் தொகைகள் பெருகிக்கொண்டே வருவதும், அவ் வரித் தொகைகள் காலாகாலத்தில், திறமையுடன் வசூலிக்கப்படாவிட்டால், அனேக பஞ்சாயத்துக் களின் நிதி நிலை மோசமாகிவிடும் என்பதுபற்றி என்னும்போது அரசாங்கம் கவலை கொள்கிறது. தாங்கள் வசூலித்த வரிகளையும், கட்டணங்களையும் வரிவசூலிப்பவர்கள் பஞ்சாயத்து நிதிகளில் சரிவர செலுத்துவதில்லை என்பது அரசாங்கத்தின் கவ னத்திற்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

(2) பஞ்சாயத்து வரிகளை வசூலிப்பதைப் பொருத்து தெளிவான விளக்கங்கள் அடங்கிய விதிகள், கிராம நல-தல நிர்வாகத் துறையின் 1963-ம் ஆண்டு மே மாதம் 21-ந் தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 1136-ன், பிற்சேர்க்கையில் உள்ள அறிவிப்பு 3-ல் அடங்கியுள்ளன. 'டிமாண்ட் நோட்டீசில்' (Demand notice) குறித்துள்ள கால வரம்பிற்குள் வரி செலுத்தப்படாவிட்டால், பஞ் சாயத்து நிர்வாக அதிகாரிகள், 'வாரண்ட்' (Warrant) பிறப்பித்தும், 'டிமாண்ட் நோட்டீ சி'ல் கண்டிருக்கும் கால வரம்பிற்குள் வரி செலுத்த தவறினல், பஞ்சாயத்து நிர்வாக அதி காரிகள் வாரண்டின் மூலம் ஜப்தி செய்தோ, வரி கட்டத் தவறியவர்களின் ஜங்கம சொத்துக் களை விற்பனை செய்தோ, செலுத்தப்பட வேண்டிய வரித் தொகையையும், வாரண்ட், ஜப்தி செய்த தற்குரிய செலவையும் பெறலாம். ஏதேனும் காரணத்தை முன்னிட்டு, ஜப்தி செய்வதோ, அல் லது ஜப்தி செய்வதின் மூலம் போதுமான

தொகையை பெற முடியாவிட்டாலோ, வரிக் கட்டத் தவறியவர்களை, மாஜிஸ்ட்ரேட் முன் ஆஜர் படுத்தலாம். இது தவிர, பஞ்சாயத்துக்கு சேர வேண்டிய வரித் தொகையை பெறுவதற்காக, சிவில் கோர்ட்டில் வழக்குத் தொடரவும், பஞ்சாயத்துக்களுக்கு அதிகாரம் வழங்கப் பெற்றிருக்கிறது. இந்த அதிகாரங்கள் எல்லாம் சரிவர பயன்படுத்தாததன் காரணமாகவே, வரிப்பாக்கியும், கட்டணங்கள் பாக்கியும், ஆண்டுதோறும் உயர்ந்துக்கொண்டே போகின்றன. இவ்வாறு வரிப்பாக்கிகள் அதிகரித்துக் கொண்டே போவதால்தான், பணத்தை தகாத வழியில் செலவிடவும், கையாடவும் வழி ஏற்படுகிறது என்பதை தல நிதிக் கணக்கு ஆய்வாளர், அரசாங்கத்தின் கவனத்திற்கு கொண்டுவந்துள்ளார்.

(3) பஞ்சாயத்து வருமானத்தின் கணிசமான பகுதியான வீட்டு வரியை வசூலிப்பதைப் பொருத்து, கீழ்க்கண்ட உத்தரவுகளை, அரசாங்கம் பிறப்பிக்கிறது :—

(ii) பஞ்சாயத்து நிர்வாக அதிகாரிகள் வீட்டு வரி வசூலிப்பில் எப்பொழுதும் குறியாய் இருக்க வேண்டும். குறிப்பிட்ட அரையாண்டுக் குரிய வரியை, அந்த அரையாண்டுக்குள்ளேயே வசூலித்து விடவேண்டும் ; அல்லது அந்த ஆண்டு இறுதிக்குள், தேவைப்பட்டால் ஒவ்வொரு கட்டத்திலும் நேரடி நடவடிக்கை மேற்கொண்டு வரியை வசூலித்து முடிக்கவேண்டும்.

(iii) அரையாண்டு முடிந்து மூன்று மாதங்களுக்குள்ளாக, எல்லா வரிப்பாக்கிகளும் வசூலிக்கப்பட்டு விடவேண்டும் ; அல்லது அவற்றின்பேரில் தகுந்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவேண்டும். அதாவது முதல் ஆறுமாத கால வரிகள், டிசம்பர் மாதம் 31-ம் தேதிக்கு முன்பும், மறு ஆறுமாத கால வரிகள் ஜுன் 30-ம் தேதிக்கு முன்பும் வசூலிக்கப்பட்டு விடவேண்டும்.

(iv) பஞ்சாயத்து வரிப்பாக்கிகள் சரிவர வசூலிக்கப்பட்டு வருவதை கவனிக்கும் பொருட்டு, நகரப் பஞ்சாயத்து நிர்வாக அதிகாரிகள், வீட்டு வரியைப் பொருத்தவரை, ஒரு அறிக்கையை இவ்வாணையின் இணைப்பு 11-ல் (அது இங்கு பிரசுரிக்கப்படவில்லை) கொடுக்கப்பட்டுள்ள படிவத்தில், சம்பந்தப்பட்ட வருவாய்க் கோட்ட அதிகாரிக்கு அனுப்பவேண்டும். இந்த அறிக்கையை அக்டோபர் மாதம் 15-ம் தேதிக்கு முன்பும், மே மாதம் 1-ம் தேதிக்கு முன்பும் நகரப் பஞ்சாயத்து அதிகாரிகள் அனுப்பவேண்டும்.

(v) அதன் பின், வருவாய்க் கோட்ட அதிகாரிகள் இவ்வறிக்கைகளை பரிசீலனை செய்யுமாறும், வீட்டு வரிப்பாக்கியைப் பொருத்து, தக்க நடவடிக்கை எடுக்காமல், அதன் பொறுப்பிலிருக்கும் நபர்கள் மீது, ஒழுங்கு நடவடிக்கைகள் எடுக்க, கோரிக்கைகளை மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அனுப்புமாறும், வருவாய்க் கோட்ட அதிகாரிகள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

(கிராம நல—தல நிர்வாகத் துறையின் 1965-ம் ஆண்டு ஜுலை மாதம் 29-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 1475-ன் சுருக்கம்).

---

## பஞ்சாயத்து யூனியன் அலுவலக பொருளாளர்களிடமிருந்து பாதுகாப்புத் தொகை வசூலித்தல்

## Establishment—Panchayat Union Offices—Cashiers—Security to be taken.

## (Memorandum No. 116992/E-5/R.D. and L.A., dated 28th June 1965.)

வட்டார அபிவிருத்தி அதிகாரிகளின் அலுவலகங்களில் பணிபுரியும் பொருளாளர் (Cashier) களிடமிருந்து ரூ. 500-ஐ பாதுகாப்புத் தொகையாக (Security Amount) வசூலிக்கவேண்டும் என்று, பொதுத் துறையின் 1959-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 5-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 299-ல் வரையறுக்கப்பட்டிருந்ததானது, வட்டார அலுவலகங்களில் சேர்த்துக்கொள்ளப்பட்டுள்ள பொருளாளர்களுக்கும், பஞ்சாயத்து யூனியன் அலுவலகங்களில் நியமிக்கப்பட்டிருக்கும் பொருளாளர்களுக்கும் பொருந்தும் என்று மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும், பஞ்சாயத்து யூனியன் ஆணையாளர்களுக்கும் அறிவிக்கப்படுகிறது. ஆகவே பஞ்சாயத்து யூனியன் அலுவலகங்களில் நியமிக்கப்பட்டுள்ள பொருளாளர்களிடமிருந்து ரூ. 500-ஐ பாதுகாப்புத் தொகையாக வசூலிக்கும்படி, மேற்கண்ட அதிகாரிகள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

(கிராம நல-தல நிர்வாகத் துறையின் 1965-ம் ஆண்டு ஜுன் மாதம் 28-ம் தேதியிட்ட அரசாங்க அறிக்கை எண் 116992).

---

# நமது சொத்து

"கவியழகன்"

பெண் : ஊராட்சி மலர்ந்த பின்னே—அத்தான்
உண்மையில் மணந்த தென்ன ?
சீராகச் சொல்ல வேண்டும்—அத்தான்
சிந்தனையைத் தூண்ட வேண்டும் !

ஆண் : மக்களாட்சி மலர்ந்த பின்னே—கண்ணே
மகான்காந்தி சொன்ன தென்னே ?
இக்காலம் புலர்ந்த தேயடி—பெண்ணே
இன்பமெல்லாம் வளர்ந்த தேயடி !

பெண் : ஊரெல்லாம் பள்ளி கண்டோம்—அத்தான்
உரமெல்லாம் அறிந்து கொண்டோம்!
பாரெல்லாம் ஆள இன்று—நல்ல
பக்குவமும் அடைந்தோம் நன்றே!

ஆண் : வானொலியின் இன்பம் ஏற்று—கண்ணே
வளர்தமிழின் பெருமை போற்று!
நானென்று மறந்தே னேயடி—பெண்ணே
நல்உழவும் செய்தே னேயடி!

பெண் : கோழைபடா மேழிச் செல்வம்- அத்தான்
குன்றமென வளர வெல்வோம்!
வாழையடிச் சோழன் மாட்சி—நல்ல
வாழ்வன்றோ ஊரின் ஆட்சி !

ஆண் : ஊருக்குள் பாதை யிட்டோம்—கண்ணே
ஒற்றுமைக்கு வித்து மிட்டோம்!
தேருக்குள் நின்ற தெய்வம்—பெண்ணே
தெருவெல்லாம் பவனி செய்தோம்!

பெண் : தாய்சேய்தம் நலத்தைக் காக்க—அத்தான்
தாங்காத வலியைப் போக்க
நோய்நீக்கு நிலையம் வைத்தோம்—நல்ல
நூல் நிலையம் தானும் வைத்தோம்!

ஆண் : மருந்தகமும் மாதர் மன்றம்—கண்ணே
மக்களிடைப் பேதம் வென்றும்
பெருமையோடு வளர்ந்த தேயடி—பெண்ணே
பேரொளியும் கலந்த தேயடி!

பெண் : கால்நடைகள் பராமரிப்பு—அத்தான்
கழனியன்றோ நமதி ருப்பு!
பரல்பொங்கி வந்த தல்லோ—நல்ல
பஞ்சாயத்தாட்சி யல்லோ?

ஆண் : கூடுகின்ற குறையைத் தீர்க்க—கண்ணே
குடும்பத்தில் நலனைச் சேர்க்க
பாடுபடும் பஞ்சாயத்து—பெண்ணே
பாரினிலே நமது சொத்து!

## முக்கிய அறிவிப்பு

### "கிராமநலம்" சந்தாதாரர்களுக்கு

கீழ்க்கண்டுள்ள சந்தா எண்களுடைய "கிராம நலம்" சந்தாதாரர்களின் ஆண்டுச்சந்தா, 1965-ம் ஆண்டு ஆகஸ்டு மாதத்துடன் முடிவடைகிறது. "கிராம நலம்" இதழ்களை தொடர்ந்து பெறுவதற்கு, இந்தச் சந்தா எண்களையுடைய சந்தாதாரர்கள், தங்களுடைய சந்தா எண்ணைக் குறிப்பிட்டு ஆண்டுச் சந்தா ரூ.1—50 வீதம் சந்தாத் தொகையை "மானேஜர், கிராம நலம் கிராம நல-தல நிர்வாகத் துறை, சென்னை—9" என்ற முகவரிக்கு உடனே மணி யார்டர் மூலம் அனுப்பக்கோரப்படுகிறார்கள். சந்தா எண், "கிராம நலம்" இதழ்கள் அனுப்பப்படும் மேல் உறையில் பொறிக்கப்பட்டிருக்கிறது.

**சந்தா எண்கள்**

| | | |
|---|---|---|
| 8496 | 25829 முதல் | 26002 முதல் |
| 15210 | 25837 வரை | 26008 வரை |
| 15626 | 25839 முதல் | 26039 |
| 25623 முதல் | 25842 வரை | 26065 முதல் |
| 25639 வரை | 25844 | 26073 வரை |
| 25643 முதல் | 25846 முதல் | 26538 |
| 25722 வரை | 25848 வரை | 26539 |
| 25724 முதல் | 25850 முதல் | |
| 25729 வரை | 25889 வரை | |
| 25790 முதல் | 25993 முதல் | |
| 25818 வரை | 25999 வரை | |

## அடுத்த இதழில் . .

வாழ்வு உண்டு (சிறுகதை)

விடுதலைக்கு வித்திட்ட வீரர்கள்—
ஜமன்லால் பஜாஜ்

மருந்தும் விருந்தும். . . .

சபதம் செய்வோம். . . .

வந்தவாசி பாய் முடைவோர் கூட்டுறவுச் சங்க சாதனை (சிறப்புக் கட்டுரை)

பஞ்சாயத்து யூனியன் தலைவர்கள் அறிமுகம்.

இரண்டாவது அட்டைப்படம்:—குமரி முனையில் உள்ள விவேகானந்தர் சிலை.

மூன்றாவது அட்டைப்படம்.—குற்றாலம் நீர்வீழ்ச்சி.

Printed by the Director of Stationery and Printing, Madras on behalf of the Government of Madras, Edited by the Public Relations Officer and published by the Secretary, Rural Development and Local Administration Department, Government of Madras. Wrapper printed at A.L.S. Press, Madras-13.


20

REGD. NO. M. 7277
©
தமிழ்நாடு – அரசாங்கம் 1965


# பஞ்சாயத்து யூனியன் தலைவர்கள்


திரு டி. எஸ். என். நல்லதம்பி
துறையூர்



திரு கே. இராஜு (ரங்கசாமி)
பேரூர்


திரு ஆர். ராஜப்பா
மன்னார்குடி



திரு ஜி. ஆர். குருசாமி நாயுடு
உடுமலைப்பேட்டை


திரு டி. எஸ். ராமபத்ர ரெட்டியார்
விக்கிரவாண்டி



திரு ஏ. ஜி. வெங்கடாசல பிள்ளை
நெமிலி


திரு என். சுப்பராயன்
நங்கவள்ளி


திரு அ. குமரேச சீனிவாசன்
கடையம்


திரு கே. சின்னசாமி கவுண்டர்
சென்னிமலை


திரு கே. எல். வெங்கடாசல உடையார்
கலசப்பாக்கம்


திரு ஏ. கந்தசாமி நாயனர்
காவேரிப்பட்டணம்


திரு எஸ். ராஜகோபால்
டி. கல்லுப்பட்டி